
உடுமலை நாராயண கவி

சு. சண்முகசுந்தரம்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

உடுமலை நாராயண கவி

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.(பட உதவி: நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

உடுமலை நாராயண கவி

சு. சண்முக சுந்தரம்

சாகித்திய அக்காதெமி

உடுமலை நாராயண கவி
Udumalai Narayana Kavi.- Original monograph by S. Shanmugha Sundaram in Tamil, Sahitya Akademi, New Delhi(2002)Rs.25

முதல் வெளியீடு: செப்டம்பர் 2002
ISBN 81-260-1540-3

சாகித்திய அக்காதெமி

இரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110001.

விற்பனை
'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டிடம், டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

சி ஐ.டி. வளாகம், டி.டி டி ஐ அஞ்சல், தரமணி,
சென்னை 600 113.

ஜீவன தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை: ரூ. 25

ஒளிக் கோப்பு : வீனஸ் பிரிண்டர்ஸ் சென்னை
அச்சகம : பவர்மேன் பிரிண்டர்ஸ் சென்னை

பொருளடக்கம்

முன்னுரை

1981 மே 4ஆம் நாள் அன்று திராவிடர்கழகம் சார்பில் தமிழ்நாட்டில் தனிப்பெரும் சாதனைகளை இருவேறு துறைகளில் நிகழ்த்திய அறிஞர் பெருமக்களான ஆதித்தனார், உடுமலை நாராயண கவி ஆகியோரது இரங்கல் கூட்டத்தில், அன்னாரது தொண்டுகளை நினைவு கூர்ந்த கலைஞர் மு.கருணாநிதி அவர்கள், உடுமலை நாராயண கவி அவர்களின் திரைப்படங்களில் புனைந்த கவிகளையும் ஏனைய பாட்டுக்களையும் நூலாக வெளியிட்டால் அது வருங்கால சந்ததியினருக்குப் பயன்படும் என்றார்.

திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியின் முயற்சியினால் ‘உடுமலை நாராயணகவிராயர் பாடல்கள்’ என்ற சிறு நூல் வெளி வந்தது இதனை 1986இல் பெரியார் சுயமரியாதைப் பிரசுரம் வெளியிட்டது. இது பகுத்திறவுப் பாடல்களின் தேர்ந்தெடுக்கப்பட்டத் தொகுப்பு. இதுதான் முதல் முயற்சி.

பின்னர் எனது ‘வைரமுத்துவரை’, மணிமேகலை பிரசுரத்தின் நூல் எனச் சிலவற்றில் மட்டுமே கவிராயரைப் பற்றிய விபரங்கள் கிடைத்தன. பின்னர் அவரது புதல்வர் நா இராமகிருஷ்ணன், பேத்தி ஆர் கலாவதி, முனைவர் இரா சந்திரசேகரன், முனைவர் க. இந்திரசித்து, முனைவர் அமுதன், ப.வீரப்பன், க.சுரேந்திரன், உடுமலை அமிர்தநேயன், சங்கை வேலவன் ஆகியோரின் நூல்கள் வந்தன.

“நாராயண கவியின் திரைப்படப்பணி, வாழ்க்கையைப் பற்றிய ஆதாரப் பூர்வமான நூல் ஒன்று கூட இன்னும் வரவில்லை, பாடல் தொகுப்புகள் மூன்று வந்துள்ளன. இவை சினிமா பாட்டுப் புத்தகம் மாதிரி கூட இல்லை. பாடல்கள் மட்டுமே இடம் பெற்றிருக்கின்றன. எந்தப்படம் எந்த ஆண்டு என்பது போன்ற தகவல்கள் இல்லை. நாம்தான் வெகு ஜன கலாச்சார வரலாற்று நாயகர்களைப் பற்றிய ஆய்வில் அக்கறை காட்டுவது இல்லையே”, என்று எஸ். தியடோர் பாஸ்கரன் வருத்தப்பட்டார் (புதியப்பார்வை, 16-31 ஆகஸ்ட் 1996)

இது சாகித்திய அக்காதெமிக்கான முயற்சி. கவிராயரின் நூற்றாண்டை ஒட்டி நிகழ்ந்த முயற்சிக்குச் சாகித்திய அக்காதெமி ஆலோசனைக்குழு உறுப்பினர்களும் அதிகாரிகளும் உதவினர். இன்று நூலாகியுள்ளது. அனைவருக்கும் நன்றி.

கவிராயரின் புதல்வர் என் மரியாதைக்குரிய பெரியவர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களின் ஒத்துழைப்பும் உதவியும் இல்லாவிட்டால் என்னால் இப்படியொரு நூலை எழுதியிருக்க முடியாது. அவருக்குத் தனித்த நன்றி.

1
உடுமலையிலிருந்து ஒரு வாத்தியார்

உடுமலை நாராயணகவி அவர்கள் இருந்தவரைக்கும் அவரை ஒரு சகாப்தம் என்றுதான் சொல்ல வேண்டும். அவருடைய் எந்தப் பாடல் ஆனாலும் சொல்நயம், பொருள்நயம், கருத்துச் செறிவு, இலக்கண இலக்கியம் ஆகியவை குறைவில்லாமல் இருக்கும் என்பார் கவிராயரின் உதவியாளர் செல்லமுத்து.

''ஆற்றொழுக்கான அவருடைய சங்கத்தமிழ்நடை நம்மை வியப்படையச் செய்கின்றது. திரைப்பட உலகில் நுழைந்த காலத்தில் அவர் எழுதிய பாடல்கள், மரபு சார்ந்த இலக்கிய நடையிலேயே இருந்தன. பின்னர் மக்களின் ரசனைக்கேற்ப ஜனரஞ்சமாக மாறி எளிய பேச்சு நடைக்கு வந்து விட்டன இது வளர்ச்சியா, தளர்ச்சியா என்று தீர்மானிக்க முடியவில்லை. ஆனால் ஆரம்பத்தில் அவருக்குக் கிடைத்த வரவேற்பு இறுதிவரை வளர்ந்ததே தவிர குறையவில்லை'', என்பார் உடுமலை அமிர்தநேயன் (ப.176).

இவர் தொழிலால்தான் சாதி என்கிற எண்ணத்தில் தாம் கவிஞர் சாதி என்று காட்டிக் கொள்ளவே 'நாராயண கவி' என்று பெயரைத்தமக்கு சூட்டிக் கொண்டவர். தமது குருவுக்கு மரியாதை செலுத்தும் விதமாக குரு உடுமயை முத்துசாமிக் கவிராயரின் ஊரான உடுமலைப் பேட்டையை நினைவுபடுத்தும் விதமாக 'உடுமலை நாராயண கவி' என்று வைத்துக் கொண்டார்

கவிராயர் என்பது இவரது சிறப்புப் பட்டம். வாத்தியார் என்பது இவரது செல்லப் பட்டம்

உடுமலை நாராயண கவி அவர்கள் 22.4.1967இல் சங்கீத நாடக சங்கத்தால் சிறந்தப் பாடல் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நீதிபதி கோகுல கிருஷ்ணன் இவருக்குச் 'சாகித்ய ரத்னாகர்' என்னும் பட்டத்தை அளித்தார்

1867இல் தமிழ்நாடு இயல், இசை, நாடகம் மன்றம் உடுமலையாருக்குக் 'கலைமாமணி' விருது அளித்தது.

தென்னிந்தியத் திரைப்படத் தொழில் நுட்பக் கலைஞர்களுக்கு விருது வழங்கியபோது சிறந்தப் பாடலாசிரியராகக் கவிராயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது மத்திய அமைச்சரான ஒய்.பி.சவான் விருது வழங்க, உடுமலையார் சார்பாக கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பெற்று வந்தார்.

பம்மல் சம்பந்த முதலியார் தலைமையில் ஒருமுறை பாராட்டு விழா நடத்தி இவருக்கு விருது வழங்கப்பட்டது.

கலைவாணர் முன்னிலையில் மா.பொ.சி. தலைமைவகிக்க கலைஞர் மு.கருணாநிதி கவிராயருக்குப் பொற்கிழி அளித்தார்.

26.1.82இல் இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பாக சென்னையில் கவிராயரின் திருவுருவப் படம் திறந்து வைக்கப்பட்டது.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணி கவிராயருக்குப் 'பெரியார் பெருந்தொண்டன்' எனும் பட்டமளித்தார்

உடுமலை கொடை வள்ளல் கொங்குசாமி நாயுடு அவர்கள் கவிராயருக்குப் பாராட்டு விழா நடத்திப் பொற்கிழியளித்தார்.

5.4.92 அன்று பூளவாடி அரசினர் மேல் நிலைப்பள்ளியில் கவிராயர் நினைவாகக் கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டது. அதற்கு 'உடுமலை நாராயண கவி நினைவு கலையரங்கம்' என்று பெயரிடப்பட்டது

''உடுமலையார் ஒரு கவிஞர் என்பதைவிட ஒரு சிறந்த ரசிகர். ஒரு ரசிகன்தான் சிறந்த கலைஞனாக முடியும். தனக்குள் இருக்கும் ரசிகனைத் திருப்தி படுத்தினால்தான் மக்களைத் திருப்திப் படுத்த முடியும். இவ்வகையில் நாராயண கவிராயர் எழுதாத பாடல்களே இல்லை'' என்பார் எம்.எஸ்.வி.

சிறந்த ரசிகரான இவர் கவிஞர், நாடகாசிரியர், நடிகர், சீர்திருத்தவாதி, மனிதாபிமானி என்று பல பரிமாணங்களோடு விளங்கினார். எல்லாவற்றுக்கும் மேலாக உடுமலையிலிருந்து வந்த ஒரு வாத்தியார்.

2
வாழ்க்கை வரலாறு

அந்தக் காலத்தில் பல கவிஞர்கள் கவிராயர் என்று அழைக்கப்பட்டனர். அவர்களுள் அருணாசலக் கவிராயர், முத்துசாமிக் கவிராயர் ஆகியோர் குறிப் பிடத்தக்கவர்கள் அந்த வரிசையில் உடுமலைக்கவிராயரும் ஒருவர்

இவர், கொங்கு நாட்டின் கோயமுத்தூர் மாவடத்தில் உடுமலைப் பேட்டை வட்டத்தின் பூளவாடி என்னும் சிற்றூரில் பிறந்தார். பிறந்த ஆண்டு 1899, செப்டம்பர் மாதம் 25ஆம் தேதி பெற்றோர் கிருஷ்ணசாமி செட்டியார் முத்தம்மாள் ஆவர்

இவரது இயற்பெயர் நாராயணசாமி 24 மனைத் தெலுங்குச் செட்டியார் இனத்தில் பிறந்த இவர் இளம் வயதிலேயே பெற்றோரை இழந்தவர்.

இவர் தன் இளமையில் பெரிதும் துன்புற்றார். தனது தமையனார் தனுஷ்கோடி அவர்களின் ஆதரவில் வளர்ந்தார். இவருக்குக் கடினமான வியாபாரத்தில் ஈடுபட்டு காலம் கழிக்கின்ற நிலை ஏற்பட்டது. தீப்பெட்டிகளைச் சுமந்து சென்று சுற்றுப் புறக் கிராமங்களில் விற்றார். இதனால் ஒரு நாளைக்கு இருபத்தைந்து காசுதான் வருமானம் வந்தது. வேறுவழி இல்லாமல் அதனையே தொடர்ந்து செய்து வந்தார்

கல்வி

இவர் நான்காம் வகுப்போடு திண்ணைப் பள்ளிப்படிப்பை நிறுத்திக் கொண்டார். புலவர் பாலசுந்தரம் பிள்ளை இவருக்கு ஆசிரியராக இருந்தார். எனினும் வாழ்க்கையிலிருந்து அனுபவத்தின் வாயிலாக நிறைய கற்றுக் கொண்டார்.

பின்னர், முத்துச்சாமிக் கவிராயரிடம் சுமார் பதினைந்து ஆண்டுகள் தமிழ்க்கல்வியைக் கற்றார் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிடம் நாடகத்தையும், ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதரிடம் கதா காலட்சேபக் கலையை ஆறுமாத காலம் கற்றுக் கொண்டார்.

இவர் முத்துச்சாமிக் கவிராயரிடம் மாணவனாகச் சேர்ந்து படித்த போது இவரோடு ஆரிய கானசபா சந்தான கிருஷ்ண நாயுடுவும் பயின்றார். சரபக்கவி இயற்றுவதில் வல்லவரான முத்துசாமிக்கவி, தமிழ் இலக்கணம், சாஸ்திரீய சங்கீதம், பாடல் இயற்றும் முறை ஆகியவற்றைக் கற்றுத் தந்தார். உடுமலையாரும் இதில் வல்லவர் ஆனார்.

மதுரைப் பயணம்

கவிராயரின் பருத்தி வாணிபத்தில் பெருநட்டம் ஏற்பட்டது. இவரால் கடன் தொல்லையைத் தாங்க முடியவில்லை. அவர் 100 ரூபாயோடு ஊரைவிட்டுப் போய்விட்டார். போகுமுன் ''இந்தக் கடன்களை எல்லாம் திருப்பிக் கொடுக்கும் வரை இந்த ஊர் மண்ணை மிதிக்க மாட்டேன்'' என்று சபதம் செய்து விட்டுப்போனார். இது அவரது கடனுக்காகக் கூசிய உள்ளத்தை உலகுக்குக் காட்டியது.

ஊரைவிட்டுப் புறப்பட்டுப்போன இவர் மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார். அங்குத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிடம் சென்று முறையாக யாப்பிலக்கணம் முழுவதையும் நன்றாகக் கற்றுக் கொண்டார் மதுரை இவருக்குப் பிடித்துப் போனது ஏனென்றால் மதுரையில் நாடகமன்றங்கள் நிறைந்து விளங்கின.

மதுரையில் கவிராயர் பல நாடகங்களுக்கு உரையாடல்களும் பாடல்களும் எழுதிக் குவித்தார். அத்துடன் கவிஞர்க்கு தேசீய உணர்ச்சியும் வளர்ச்சி அடைந்தது. நாட்டில் சுதந்திர நெருப்புப் பற்றி பிடித்துப் படர்ந்து கொண்டிருந்தது. இவரும் ஏராளமாக தேசவிடுதலைப் பாடல்கள் எழுதியுள்ளார். இப் பாடல்களை மேடையிலும் பாடிக் கொண்டிருந்தார்.

பணம் சம்பாதிக்கும்போதே ஊரில் உள்ள கடன்காரர்களின் எண்ணம் வந்தது. போதிய பணத்தைச் சம்பாதித்துத் தன் சொந்த ஊருக்குத் திரும்பினார். தான் செய்த சபதப்படியே ஊருக்கு வெளியே இருந்து கொண்டு கடன் கொடுத்தவர்கள் அனைவரையும் அழைத்து கடன்களைத் தீர்த்த பிறகே ஊருக்குள் நுழைந்தார்.

கவிராயரின் குடும்பம்

உடுமலை நாராயண கவி - பேச்சியம்மாள் தம்பதியருக்கு திரு.ராமகிருஷ்ணன், திரு அங்கமுத்து, திரு.முத்துச்சாமி, திரு.சுப்பிரமணியம் எனும் நான்கு மகன்கள். இவர்களில் திரு அங்கமுத்து கவிராயரின் மறைவிற்கு முன்னரே மறைந்துவிட்டார். மூத்தவரான திரு ராமகிருஷ்ணன் ஊரில் விவசாயத்தைக் கவனித்து

வருகிறார். மூன்றாமவர் திரு.முத்துச்சாமி பெதப்பம் பட்டியில் பள்ளித் தலைமையாசிரியராக இருந்து ஓய்வு பெற்றுள்ளார். நான்காமவரான திரு.சுப்பிரமணியம் பரம்பிகுளம் ஆளியவாறு பாசனத்திட்டத்தில் துணைப் பொறியாளராகப் பணியாற்றியவர்.

மூத்த புதல்வர் இராமகிருஷ்ணனின் ஒரே புதல்வியார் திருமதி கலாவதி அவர்கள் திருப்பூர் ஜீவாபாய் அரசுமேல் நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிகிறார். இவர் தமது எம்.பில். ஆய்வுக்காக த் தமது பாட்டனாரின் பாடல்களை எடுத்துக் கொண்டார்.

கலைஆர்வம்

இளமையில் கவிராயர் அவர்கள் கிராமியக் கலைகளான புரவியாட்டம், சிக்குமேளம், தம்பட்டம், உடுக்கடிப்பாட்டு, ஒயில் கும்மி போன்ற வற்றில் மிகவும் ஆர்வத்துடன் பங்கெடுத்துக் கொண்டார். இவை இம்மண்ணின் கலைகள்.

பூளவாடியில் மாரியம்மன் திருவிழாவில் ஆண்டுதோறும் 'இராமநாடகம்' நடக்கும். இதில் இவர் இலக்குவன் வேடம் போட்டுக் கொள்வார். இளமை ஆர்வம் இவரது எதிர்கால வளர்ச்சிக்குத் துணை புரிந்தது.

கவிராயர் தம்பட்டம் (தப்பு) என்னும் தோற்கருவியை அடிக்கும் தொழிலாளக் கலைஞர்களோடு சேர்ந்து ஆடியும் பாடியும் மகிழ்வார். அதே சந்தத்தை அமைத்துப் பாடல்களைப் புனைவார். இந்த அரிய செய்தியை அவரது அருமை மகன் இராமகிருஷ்ணன் அவர்கள் என்னிடம் தெரிவித்தார்.

புத்தகப் பித்து

ஒருமுறை உடுமலையாரின் நாடகப் பணிகளைப் பாராட்டி நாடகச் சங்கத்தார் ஆயிரம் ரூபாய் பொன்முடிப்பு அளித்தனர். அவருக்கு அப்பணம் கிடைத்ததும் குடும்பத்தார் நினைவும் வரவில்லை; கடன்காரர்களின் நினைவும் வரவில்லை. அதற்குப் பதிலாக அவர் ஆயிரம் ரூபாய்க்கும் புத்தகங்களை வாங்கிக் கொண்டு வந்து குவித்துவிட்டார். பாரதியார் வாழ்விலும் இது போன்ற ஒரு நிகழ்ச்சி நடந்ததாக அறிகிறோம்.

தேசிய ஈடுபாடு

நாராயண கவி அவர்கள் தமது இருபத்தைந்தாம் வயதில் ஊருக்குத் திரும்பி வந்தார். அவருக்குத் தேசிய விடுதலை மீது

நாட்டமும் தேசபக்தியும் மிகுந்திருந்தது. அதனால் ஒரு கதர் கடையைத் தொடங்கினார். அக்காலத்தே ஊர் ஊராகச் சென்று பாட்டுப்பாடிக் கதர் துணிகளை விற்பனை செய்தார். இது இவரது நாட்டுப் பற்றையும் பாட்டுப் பற்றையும் வெளிப்படுத்தியது.

அப்பையா செட்டியார் என்கிற திருவேங்கடம் செட்டியார், மேட்டுப்பாளையம் நரசிம்ம நாயுடு, சுப்பிரமணியம் செட்டியார், அனந்த ராமாச்சாரி போன்றோருடன் சேர்ந்தும் கதர்க்கடை நடத்தினார். பின்னர் அக் கதர்க்கடையை நடத்த முடியாமல் கோவை அய்யாமுத்துக் கவுண்டருக்கு விற்று விட்டார் இக் காலக்கட்டத்தில் முதல் உலகப் போரில் ஈடுபட்ட பங்கி என்ற தலீத் வீரரும் இவரது நண்பர்களுள் ஒருவராக இருந்தார்.

''1936ஆம் ஆண்டிற்குப் பிறகு அநேகமாக இருக்கலாம். எனது தந்தையார் தேசிய இயக்கத்தில் சற்று தீவிரமாக இருந்த காலம் அவரும் அவரது நண்பர்களும் காந்திஜியின் நிர்மாணப்பணிகளான கதர் இயக்கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு ஆகிய பணிகளில் தீவிரமாக ஈடுப்பட்டிருந்த சமயம். அப்போது நான் ஒரே பையன் வயது அப்போது சுமார் 5 அல்லது 6 இருக்கலாம் வீட்டில் இனிமேல் அரிசிச் சோறு சமைக்க வேண்டாம் ஏழை மக்கள் உண்ணும் கம்பு, ராகி, சோளம் போன்ற உணவுகளையே நாமும் உண்டுவரலாம் என்று எனது தாயாரிடம் கூறிவிட்டார். எனது தந்தையாருக்குத் தெரியாமல் எனக்கு மட்டும் என் தாயார் அரிசிச் சோறு சமைத்துக் கொடுத்து வந்தார்கள் காரணம் சிறிய பையனாகிய நான் புஞ்சைத்தானிய உணவுகளை உண்ண மறுத்துவிட்டேன்.

''எதிர்பாராதவிதமாக ஒருநாள் எனது தந்தையார் நான் அரிசிச் சோறு உண்பதைப் பார்த்துவிட்டார். 'நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் உணவின்றி தவிக்கின்றனர். பலர் புஞ்சைத் தானியங்களை உண்கின்றனர், நம் குடும்பத்திற்கு மட்டும் அரிசிச்சோறு தேவைதானா?' என்று கோபத்துடன் கூறி என் தாயாரையும் அடித்துவிட்டார் இருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு பேச்சுவார்த்தைக் கூட இல்லாமல் போனது. இது நண்பர்களுக்குத் தெரிய வந்தது அவர்கள் வீட்டிற்கு வந்து கணவன் மனைவி பிணக்கைத் தீர்த்து வைத்தனர்'' என்று நினைவு கூர்கிறார் கவிராயரின் மகனார் இராமகிருஷ்ணன் இது கவிராயரின் நாட்டுப்பற்றைக் காட்டும்.

பாரதியாருடன் சந்திப்பு

''இவர் தமது 15வது வயதில் வறுமையில் வாடினாலும் கவிதை ஆர்வத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைச் சந்தித்தார். அதன்

பின்னர் அவர் மனதில் கனன்று கொண்டிருந்த தமிழார்வம் என்னும் தீயானது சுடர்விட்டு எரியத் தொடங்கியது'' என்பார் உடுமலை அமிர்தநேயன் (பாடிப் பறந்த பகுத்தறிவுக் குயில், ப.22)

பெரியாருடன்

பெரியாரின் அன்புத் தொண்டர் உடுமலையார். பொதுவுடைமை, சமத்துவம், பெண்விடுதலை, சுயமரியாதை என்ற முற்போக்கான சிந்தனைகளைப் பெரியார் மூலம் கவிராயர் பெற்றார்.

பெரியாரின் குடியரசு இதழ்களில் தொடர்ந்து உடுமலையார் எழுதி வந்தார். பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் பெரியாரை வாழ்த்தி உடுமலையார் பாடல் எழுதி அனுப்புவார்.

"பழமையான மூடப் பழக்க வழக்கத்தில்
பாழ்பட்ட நெஞ்சர்க்குப் புரியார்
படித்துணர்ந்து பகுத்தறிவு காட்சிதன்னைப்
பரவச் செய்து வரும் நெறியார்.
இழிவை நீக்கும் ஈ.வெ.ராமசாமி என்ற
எங்கள் தந்தை உண்மை பெரியார்
இருளை நீக்கி நம்மை மனிதனாக்கி-மத
வெறியைப் போக்கி நல்ல
நெறியைக் காட்டவந்த..."

என்று பெரியாரைப் பற்றிப் பாடல் எழுதியுள்ளார்.

முத்துச்சாமிக் கவிராயர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பணியாற்றியதுண்டு. அவரைப் பின்பற்றி உடுமலை நாராயண கவியும் தன்மான இயக்கத்தின் தொண்டரானார். இறுதிவரை பெரியாரின் தொண்டராகவே இருந்தார்.

கவிராயர் கடைசிவரை நாத்திகராகவே வாழ்ந்தார். இதனை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்துள்ளன. ஏறக்குறைய 1944-ஆம் ஆண்டு வாக்கில் இருக்கலாம். திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதி முடித்தவுடன் ஓய்வுக்காகத் தனது பூளவாடி கிராமத்துக்கு வந்தார். வரும்போதெல்லாம் பத்து அல்லது பதினைந்து நாட்கள் தங்குவார்.

அப்போது அவரது இனத்தவரின் குலதெய்வங்களான பட்டத்தரசி அம்மன், அங்காள பரமேசுவரி அம்மன் கோவில்களில் மாசி பங்குனி மாதங்களில் திருவிழா கொண்டாடுவது வழக்கம். விழாச் செலவுகளுக்காகக் கவிராயரிடம் பணம் கேட்பார்கள். அவர் பணம் கொடுத்தாலும் கோவில்களுக்குப் போக மாட்டார். ஆனால் ஒருமுறை, 'கோவில்களில் ஆடு, கோழி போன்ற உயிரினங்களை இனிமேல்

பலியிடக்கூடாது. இதை நிறுத்தினால்தான் நான் பொருளுதவி செய்வேன்' என்று கூறி பணம் தர மறுத்து விட்டார்.

இதனால் அவரது இனத்தாருக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவரது குடும்பத்தைச் சாதி விலக்கம் செய்து விட்டனர். கவிராயரோ அதனை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவர் தொடர்ந்து அவரது இனத்து ஏழைக் குடும்பங்களுக்குத் திருமணச் செலவு, இறந்தோரின் ஈமச்சடங்கு போன்றவற்றுக்கு உதவி செய்து வந்தார். நாளடைவில் சாதிவிலக்கம் பிசுபிசுத்தது. கோவில்களில் பலியிடும் பழக்கம் நிறுத்தப்பட்டது. பின்னர் பண உதவியைத் தொடர்ந்து செய்தாராம்.

கவிராயர் விருந்தோம்பல் பண்பு மிக்கவர், தன் வீட்டுக்கு வருவோரை உபசரிப்பதில் வல்லவர். அவர் வீட்டிற்கு வந்து பூளவாடியில் தங்கி கவிராயரின் அன்பில் திளைத்தவர்கள் பலர். அவர்களில் வீரமணியும் ஒருவர்.

''கோவை மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது-1946ஆம் ஆண்டு வாக்கில் அப்போதைய கோவை மாவட்ட கழக அமைப்பாளர் திரு.என்.இ. பாலகுரு அவர்களது அரிய உழைப்பினால் ஒருநாள் மாணவர் சுற்றுப் பயணம் சென்ற நாங்கள் அனைவரும் கவிஞரது இல்லத்தில் அவரது விருந்தினர்களாகி பரவசப்பட்டோம். பகுத்தறிவுக் கணைகளும் விருந்துச் சுவையும் எங்களை மாறிமாறி திணற அடித்தன. அவர்கள் படுத்த படுக்கையில் அதிகம் பேச இயலாத நினைவில் இருந்தபோது அதே இல்லத்தில் அவர் மறைவிற்கும் சில காலம் முன்பும் சந்தித்தேன்'' என்று கி.வீரமணி எழுதி உள்ளார் (உடுமலை நாராயணகவிராயர் பாடல்கள் - முன்னுரை)

கவிராயர் நன்றி மறவாத நல்ல உள்ளம் கொண்டவர். இதற்கு பல்வேறு சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று அவரது மகனார் திரு.இராமகிருஷ்ணன் அவர்களால் நேரடிப் பேச்சில் என்னிடம் கூறியது:

கவிராயர் அவர்கள் சீர்காழி கோவிந்தராசனுக்காக எழுதிக் கொடுத்த பக்திப் பாடல் மிகவும் பிரபலம் ஆனது. ஹெச்.எம்.வி. கிராமபோன் கம்பெனியார் அதை இசைத்•தட்டுகளாக விற்பனை செய்ய உரிமை கேட்டனர். எனது தந்தையார் அனுமதி பெற்று வாங்கிக் கொள்ளும்படி சீர்காழி சொல்லி விட்டார். ஹெச்.எம்.வி. கம்பெனியார் எனது தந்தையாரிடம் கேட்டு இலவசமாக உரிமையைப் பெற்றுக் கொண்டார். என் தந்தை பணம் வாங்க மறுத்துவிட்டார். காரணம் ஒரு காலத்தில் அவர் ஹெச்.எம்.வி. கிராமபோன் கம்பெனியில் ஆஸ்தான

கவிஞராகச் சிறப்புடன் விளங்கினார். இதன் மூலம் தனது நன்றிக் கடனைத் தீர்த்துக் கொண்டார்.

1920-ஆம் ஆண்டுகளில் ஒரு நாடகத்தின் எல்லாப் பாடல்களையும் ஒரு தொகுப்பாக 78 rpm கிராமபோன் தட்டுகளில் வெளிவரும். இதன் முன்னோடியான நாராயண ஐயரின் நட்பு கிடைத்ததால் கவிராயர் டாசோ, ஓடியன், ஹெச்.எம்.வி. போன்ற பிரபலக் கம்பெனிகளுக்குப் பாடல் எழுதிக் கொடுத்தார். இவற்றில் ஹெச்.எம்.வி. இவரை நான்கு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டது.

மரணம்

1978-இல் இவர் சென்னையிலிருந்து பூளவாடிக்குத் திரும்பி வந்தார். இவரைத் தள்ளாத முதுமை மிகவும் தளரச் செய்திருந்தது. கவிராயர் 23.5.1981-இல் காலமானார்.

''நான் நாராயண கவியை 1975-இல் பூளவாடியில் சந்தித்து உரையாடினேன். மெலிவுற்று, காதுகேளாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் தனது நாடக திரைப்பட வாழ்வு பற்றி விரிவாகப் பேசினார். வாழ்வின் அந்திமக் காலத்திலும் தான் ஒரு நாத்திகன் என்பதை உறுதி படுத்தினார்'' என்பார் எஸ்.தியடோர் பாஸ்கரன்.

உவமைக் கவிஞர் சுரதா, ''உடுமலையாரைப் போல புலமை பெற்ற திரைப்படப் பாடலாசிரியர்கள் எவரும் இல்லை. அவர் இலக்கிய உலகில் பிரவேசித்திருந்தால் பாரதிதாசன் பெயரே பலருக்குத் தெரியாமல் போயிருக்கலாம்'' என்பார்.

இது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

3
நாடக முயற்சிகள்

"நாடகக் கலையின் உயர்வான அம்சங்களை எல்லாம் தனது வளர்ச்சிக்குக் கபளீகரம் செய்து கொண்டது மட்டுமின்றி, நாடகக்கலை வல்லுநர்கள் நடிகர்கள் அனைவரும் திரைக்கலைத் துறையையே நிரந்தரமாகக் கொண்டு பிறந்த இடத்தை மறந்து விட்ட காரணத்தால் இன்று நாடகக்கலை நலிவுற்றுப் பொலிவற்று நிற்கின்றது. திரைப் படத்துறை தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை அதன் வெற்றிக்குக் காரணமாய்த் திகழ்ந்த நடிக நட்சத்திரங்களின் பட்டியலைத் தொகுத்துப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும் என்பார் கவிஞர் கு.சா.கிருஷ்ண மூர்த்தி. (தமிழ் நாடக வரலாறு, ப.207)

மதுரகவி பாஸ்கரதாஸ், பூமி பாலகதாஸ், லட்சுமணதாஸ், கவிகுஞ்சர வாத்தியார், சுந்தர வாத்தியார், கே.பி. காமாட்சி சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, பி.எஸ். ராமைய்யாதாஸ், மருதகாசி, கே.டி.சந்தானம், எஸ்.டி.. சுந்தரம், கம்பதாசன், கு.சா கிருஷ்ண மூர்த்தி ஆகிய கவிஞர்கள் நாடகத் துறையிலிருந்தே திரைப் படத்துறைக்கு வந்தவர்கள். உடுமலையாரும் .நாடகத்துறையில் இருந்தே திரைப் படத்துறைக்கு வந்தார்.

கவிராயர் முதன் முதலாக பாடல் எழுதிய படம் 'சந்திர மோகனா அல்லது சமூகத் தொண்டு'. இது நிகழ்ந்த ஆண்டு 1933.

நாடகங்கள்

கதர்த் துணிகள் விற்கும் காலக் கட்டத்தில் கவிராயருக்கு ஆங்கிலேய ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு இருந்தது. தேசப்பற்று மிகுந்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் இவர் நாடகங்களையும் அதில் பாடல்களையும் எழுதிக் கொண்டிருந்தார்.

பின்னர் அவர் கடன் தொல்லைக் காரணமாக ஊரை விட்டு வெளியேறி பழனிக்குப் போனார். அங்கே அவரது சித்தப்பாவான அவினாசிலிங்கம் செட்டியாரிடம் கொஞ்சம் பணம் வாங்கிக் கொண்டு மதுரைக்கு வந்தார். அங்கே வைகையைப் பார்த்தவுடன் தற்கொலை

செய்து கொள்ளலாமா என்று கூட எண்ணினார். எனினும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தற்கொலை எண்ணத்தைத் தவிர்த்துக் கொண்டார்.

உடுமலையார் மதுரைக்கு வந்த காலம் 1923ஆம் ஆண்டு ஆக இருக்க வேண்டும். இவர் அங்கு எம்.எம். சிதம்பரநாதன் என்ற நாடகக் கலைஞரைத் தொடர்பு கொண்டார். அவர் மூலம் நாடக உலகில் ஈடுபட்டார். அங்கு மதுரை நாடகச் சங்கத்தில் டி.எஸ். வேலம்மாள், தேவராயப்பிள்ளை, காதர் பாட்சா, விஸ்வநாத பாரதி போன்றவர்களின் அறிமுகமும் கிடைத்தது. ஏற்கனவே இவரது இதயத்திலிருந்த தேசிய உணர்வும் ஆங்கில ஏகாதிபத்திய எதிர்ப்பும் வலிமையுற்றன. அதனால் நாடகப் பாடல்கள் பலவற்றை மிகச் சிறந்த முறையில் எழுதினார்.

உடுமலை முத்துசாமிக் கவிராயர்

இவரும் உடுமலைக்காரர்தான். சங்கரதாச சுவாமிகளின் சமகாலப் புலவரும், நாடகாசிரியரும் ஆவார். இவரின் தாய்மொழி தெலுங்காக இருந்தாலும் தமிழை விரும்பிக் கற்றார். தம் 14-ஆம் வது வயதிலேயே தமிழிலும் தெலுங்கிலும் கவிதை பாடும் ஆற்றல் பெற்றார். மாம்பழக் கவிச்சிங்க நாவலரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்கள் கற்றார். சங்கரதாசரோடு பழநி தண்டபாணி சுவாமிகளிடம் பாடங்கேட்டார். மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய புலவர் தேர்வுக்கும் சென்றிருக்கிறார். இவரது புலமையைக் கண்டு உ.வே.சா. வியந்திருக்கிறார். மதுரைத் தமிழ்ச்ச சங்கத் தலைவர் பாண்டித்துரைத் தேவரின் அன்பினையும் பெற்றார். பின்னர் உயர்நிலைப் பள்ளிகள் பலவற்றில் தமிழாசிரியராக இருந்துள்ளார். மாணவர்களுக்கும் பிற்காலத்தில் நாடகசபைகளுக்கும் நாடகங்கள் எழுதித்தந்தார். இவர் விபீஷண சரணாகதி, போஜராஜன், பீஷ்மர் சபதம், ஞானசௌந்தரி, தயாநிதி, கண்ணாயிரம் போன்ற நாடகங்களை எழுதினார். பம்மல் சம்பந்த முதலியாரின் தாசிப்பெண், மனோகரா, சகுந்தலா ஆகிய நாடகங்களுக்குப் பாடல்கள் எழுதித் தந்தார். 'சந்தச்சரபகவி' என்ற பட்டம் வழங்கி இவ்ரை ஆஸ்தான புலவராக்கிக் கொண்டார் திண்டுக்கல் கன்னிவாடி ஜமீன்தார் அப்பய்ய நாயக்கர் அவர்கள்.

இவரிடம் பயின்று நாடகாசிரியர் ஆனவர்தான் உடுமலை நாராயணகவிராயர். இவரோடு சேர்ந்து சங்கரலிங்கக் கவிராயரும் கே.வி. சந்தானகிருஷ்ண நாயுடுவும் கற்றுக் கொண்டனர்.

"உடுமலைப் பதியதனில்
உற்பிதவான் ஸ்ரீமான் கொங்குப்
புலி தமிழ்க்கவி சரபவித்துவர்

உதவிபெற்ற பூமான்
நாராயணன் கீதம் புகழ்மான்"

என்றும் பாடியுள்ளார்.

இந்த முத்துசாமிக்கவிராயர் மாம்பழக்கவிச்சிங்க நாவலர், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, தண்டபாணி சுவாமிகள் போன்றவர் களிடமும் மாணவராய் இருந்தவர். தாராபுரத்தில் தமிழாசிரியராக இருந்திருக்கிறார். ஆங்கிலத்திலும் புலமையுடையவர். ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் பதவியேற்பு விழாவிற்குப் பிரிட்டிஷ் அரசினரின் அழைப்பின் பேரில் டில்லிக்குப் போய் வந்தவர். உ.வே.சா. இவரது தேர்வு எழுதும் திறமையைப் பார்த்து "அருமை" என்று பாராட்டியிருக்கிறார்.

"நொடி நொடிக்கும் காலமதில்
நூதனமாய் கவிநூறு செய்யவல்ல
உடுமலையின் சரபகவி"

என்று உடுமலையார் போற்றுவதன் மூலம் அவரது கவிபாடும் ஆற்றலை அறிந்து கொள்ளலாம்.

கோவலன் கண்ணகி நாடகம்

கவிஞரின் இதயத்திலிருந்த தேசிய உணர்வும் ஆங்கில எதிர்ப்பும் விடுதலை இயக்கப் பாடல்களாக விளைந்ன. மிகக் குறுகிய காலத்தில் உடுமலையார் நாடக உலகின் தேசியக் கவியானார். கோவலன் கண்ணகி நாடகத்தில் மாதவியைப் பற்றிக் கோவலன் பாடுவது;

"காசைப் பறிக்கும் ஐரோப்பா
கவர்மெண்டைப் போலக்
கைப் பொருள்தனைப் பறித்தார்"

அதே நாடகத்தில் கோவலனைப் பார்த்துப் பாடுகிற மாதவியின் பாடல் உடுமலையாரின் நாட்டுப்பற்றோடு உருவெடுத்தது இப்படி:

"தரவேண்டும் எனதாசை மணவாளரே-வாங்கித்
தரவேணும் எனதாசை மணவாளரே"

"முந்தாணி முகப்பினிலே மோதிலால் படம்போட்டு
முத்துசாமி சீடர் இங்கு மெச்சிப் பாடும்
கதராடை வாங்கித்தர வேணும்"

"பிறதேச முறை நீங்கப்
பாரத மக்களைக் காக்க
பாட்டி நூற்ற ராட்டை நூலில்

பேட்டி போட்ட சீட்டி
வாங்கித் தர வேணும்''
(உதவி: எம்.கே. துரைராஜ் முதலியார்)

என்றெல்லாம் எழுதினார்.

இப்பாடலை டி.எஸ். வேலாம்மாள் பாடி நடித்தார். இப்பாடல் பிற்காலத்தில் 1937-இல் காங்கிரசின் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்பட்டது. இதனை டி.எஸ்.வேலாம்பாள் பாடியதாகக் கூறுவார்.

''காந்தி சொல்லைத் தட்டாதீங்க
காங்கிரஸ்காரர்களே''

என்ற பாடலும் பிரபலமாயிற்று. இதனை கே.பி. ஜானகியம்மாள் பாடி நடித்தார். இவர் விடுதலை வீராங்கனை என்று அழைக்கப்பட்டவர்.

1928-இல் இவர் ஏராளமாக நாடகங்களில் நடித்தார். இவரது நாடகங்களுக்கானப் பாடல்களை இவரும் மதுரகவி பாஸ்கரதாசும் எழுதினார்கள்.

மதுரையிலிருந்து உடுமலையார் எழுதிய நாடகங்களில் குறிப்பிடத்தக்கவை, வள்ளி திருமணம், பவளக்கொடி, நந்தனார், கோவலன் கண்ணகி போன்றவை. டி.கே.எஸ். நாடகக் குழுவில் இவர் பணியாற்றினார். அப்போது அங்கே இவருக்கு ஆறுமுகக் கவிராயர், கலைவாணர் ஆகியோருடைய தொடர்பு ஏற்பட்டது

சிவபாக்கியம் அம்மையார் நாடக நடிகைகளில் குறிப்பிடத்தக்கவர். இவருக்காக உடுமலையார் எழுதிய நாடகம்தான் 'வள்ளி திருமணம்'. இவர் மதுரையில் சங்கீதம் கற்றுக் கொடுக்க ஒரு பயிற்சிக் கூடத்தை நிறுவினார். இரண்டு ரூபாய் பயிற்சிக் கட்டணமாக வசூலித்தார். அங்கு பயிற்சி பெற்று சிறந்த பாடகியாகவும் சிறந்த நடிகையாகவும் விளங்கினர். இவருக்குச் சொந்த ஊர் பரமக்குடி. இவர் ஏழு வயிதிலிருந்தே நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார்.

''ஐயா எனக்குப் பாடல்கள் எழுதிக் கொடுத்து என் வீட்டிலேயே தங்கியிருந்து பாட்டும் கற்றுக் கொடுத்தார். ஐயா என்னிடம் பேரன்பு கொண்டவர். அவரை என் குரு என்று சொல்வதைவிட அவர் எனது தந்தையார் போல என்று கூறுவதே சிறந்ததாகும்,'' என்று கூறியிருக்கிறார்.

மதுரை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத் துறையில் புகழ்பெற்று விளங்கினார். அத்துடன் நாடகத் துறைக்கு இவரது பங்களிப்பு குறிப்பிடத் தகுந்தது. உடுமலைச் சரபம் முத்துசாமிக் கவிராயர் அவருக்கு நெருங்கிய நண்பர் இவர் அருணாசலக் கவிராயாரின் இராம நாடகத்தை மேடை நாடகம் ஆக்கியவர்.

உடுமலை வட்டாரம் முழுவதும் இவரது நாடகங்கள் பிரபலம். இவர் தனது மாணவர் சந்தான கிருஷ்ணநாயுடு நடத்தி வந்த ஆரிய கான சபை எனும் நாடகமன்றத்துக்கு ஆசிரியராகவும் இருந்தார். இவர் ஒருமுறை பூளவாடித் திருவிழாவில் நாராயணசாமி பங்குபெற்ற நாடகக் காட்சிகளைத் தம் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். இவர் கவிராயரின் கலைத்திறத்தையும் கவித்திறத்தையும் ஒரு சேரக் கண்டு களித்தவர் தன்னோடு மதுரைக்கு அழைத்துக் கொண்டு போனார்.

நாராயணசாமிக்கு கவிராயர் தனது 12ஆம் வயது முதல் 25ஆம் வயது வரை முத்துச்சாமிக் கவிராயர் செல்லுமிடம் எல்லாம் சென்றார். அங்கங்கே நாடகம் எழுதியும் நடித்தும் பாடியும் கலை அனுபவங்களை வளர்த்துக் கொண்டார்.தன் குருவோடு நாடகங்களில் சிறுசிறு பாத்திரங்களை ஏற்று நடித்து நாடகக்கலைஞராகவும் நாராயணகவி விளங்கினார்.

இவர் தன் குருவைப் பல பாடல்களில் நினைவுறுத்திச் சேர்த்துப் பாடி கொள்வார்.

"நொடி நொடிக்கும் காலமதில்
நூதன மாய்க் கவிநூறுசெய்யவல்ல
உடுமலையின் சரபக் கவி
உண்மைமிகு மாணவர்"

என்று தன்னைக் குறிப்பிடுகிறார்.

என்.எஸ்.கே.நாடகக் கம்பெனி

யதார்த்தம் பொன்னுசாமிப்பிள்ளை மதுரை பாலகான சபா என்ற நாடகக் கம்பெனியை நடத்திக்கொண்டிருந்தார். டி. கே சம்பங்கி, எத்திராஜு, எம்.இ.மாதவன்,லட்சுமிபதி ஆகியோர் அதன் நிர்வாகத்தைக் கவனித்து வந்தனர். பின்னர் இது தேவி மங்களகான சபாவாக மாறியது. இது நொடித்து போன போதுதான் இதனை கலைவாணர் விலைக்கு வாங்கினார். அதன் விலை அப்போது 10 ஆயிரம் ரூபாய். பிறகு இது என்.எஸ்.கே.நாடக சபா ஆயிற்று.

இந்தச் சபாவில் உடுமலையார் ஆஸ்தான கவிஞராக இருந்தார். அத்துடன் அனைத்துக் கலைஞர்களும் மதிக்கின்ற மூத்தவராக விளங் கினார். கே.பி.காமாட்சி, புளிமூட்டை ராமசாமி,துரைராஜு, சுப்பு ஆறுமுகம், காக்கா ராதாகிருஷ்ணன், எம்.என்.ராஜம் போன்றோர் இங்கு தான்இருந்தனர் அவர்களுக்குக் கவிராயர் தமிழ்ச் சொல்லிக் கொடுத்தார். வெண்பா எழுதப் பயிற்சி கொடுத்தார்.ஒரு ஈற்றடியைக் கொடுத்து அல்லது ஒரு பொருளைச் சொல்லி அப்பொருள் வரும்படியான ஒரு வெண்பா எழுதச் சொல்லி சரியாக எழுதுபவருக்குப் பாராட்டிப் பரிசு கொடுப்பார்.

கலைவாணரின் நல்ல பண்புகளைப் புகழ்ந்து ஒருபாடலை 'நாடு நடக்கின்ற நடையில்'என்று தொடங்கி எழுதினார்.

'ஓர் இரவு' நாடகம்

கே.ஆர்.இராமசாமி கலைவாணருக்கு நன்றிக் கடனாக தன்னை ஆளாக்கியதற்கு அன்புக் கடமையாக ஒரு நாடகம் நடத்த நினைத்தார். அதில் காரணமில்லாமல் கலைவாணர் சிறையில் அடைத்து வைக்கப் பட்டிருக்கிறார் என்பதை நாடறியச் செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணம் இருந்தது. ஒரு நாடகம் எழுதித் தருமாறு அண்ணா விடம் வேண்டினார். அண்ணர ஒரே இரவில் 'ஓர் இரவு' நாடகத்தை எழதிமுடித்தார். மாலை 6 மணிக்குத் தொடங்கி காலை 6 மணிக்குள் நடைபெறும் சம்பவங்களும் திருப்பங்களுமே நாடகக்கதை, எம்.எஸ்.முத்துக்கிருஷ்ணன் நடிகர்களை அழைத்து அவரவர்க்கான பாடங்களைத் தந்ததுடன் கவிராயரை அழைத்து வந்தார். தஞ்சாவூருக்கு நாடகத்தில் எந்தெந்த காட்சிக்கு எந்தெந்தப் பாத்திரங்கள் பாடவேண்டும் என்று முடிவு செய்தனர்.

எம்.எஸ். முத்துகிருஷ்ணன் இசை அமைத்து மெட்டு போட்டுக் கொடுக்க இரண்டே நாளில் கவிராயர் பாடல்களை எழுதிக் கொடுத்தார். அனைத்தும் மிகச் சிறப்பாக இருந்தன என்று அனைவரும் பாராட்டினர்.

அண்ணாவும் ''நாம் எழுதும் பக்கம் பக்கமான வசனங்களுக்குப் பத்து வார்த்தைப் பாடல்களில் கருத்தை விளக்கி விட்டார் உடுமலை நாராயணகவி'' என்று புகழ்ந்தார்.

வேலைக்காரி

இதுவும் 'ஓர் இரவு' போலவே பெரும் வரவேற்பைப் பெற்றது. கே.ஆர்.ஆர்.நடித்தார். யதார்த்தம் பொன்னுசாமிபிள்ளை கிருஷ்ண நாடக சபா மூலம் இதனை நிகழ்த்தினார். இதன் பாடல்களைக் கவிராயரே எழுதினார்.

மனோகரா நாடகம்

இந்நாடகத்தில் ஒரு காட்சி. ஒரு கிழவனும் கிழவியும் திருவிழாவிற்குப் புறப்படும் போது பாடுவதாக ஒரு பாடல்.

பெண்: போட்டாச்சா வெத்திலை
போகனும் சீக்கிரம் புறப்படுங்க.

ஆண்: வீட்டைவிட்டு வெளியிலே வர
வேலை என்னா தெரியலை
சொல்லு.

என்று ஆரம்பித்த பாடல்,

ஆண்: அட எனக்கும்தான்! முன்னாலே நடந்ததை
இன்னாளிலே நினைச்சா
தன்னாலே ஆடுது
போட்டா செவக்கலை பொம்பளை
நீ பக்கத்திலே
இல்லாத வெத்திலை போட்டா
சிவக்கலை

என்று பாடல் முடியும். இருவரும் தள்ளாடி விழுவார்கள். இந்தக் காட்சிக்கு ஏகப்பட்ட வரவேற்பு இருந்தது.

"சந்தேகமில்லை சந்தேகமில்லை
எதற்கும் என்றும் எள்ளளவேணும்"

என்று ஒரு பாடல். இதனை அண்ணா தனது திராவிட நாடு இதழில் பாராட்டி எழுதினார். இது வசந்தன் பாடும் பாடல். இது நகைச்சுவைப் பாட்டு. நடிகர் பி.டி.சம்பந்தன்தான் வசந்தன், மாதவன்தான் விகடன். இருவரும் சேர்ந்து பாடி கொட்டகையிலே சிரிப்பை அள்ளி அள்ளி வீசுகிறார்கள்.

தமிழச்சியின் கத்தி

இது பாரதிதாசனின் காவியம். இதனை நாடகமாக நடிகர் காக்கா ராதாகிருஷ்ணன் விரும்பினார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் போது பாடல்களுக்காகக் கவிராயரிடம் வந்தார். திம்மன் என்ற தோட்டக்காரன் தென்ன மரங்களைப் பற்றிப் பாடுவதாக ஒரு காட்சி. அதற்குப் பாடல் எழுதித் தந்தார்.

"தாளாலே உண்ட நீரைத்
தலையாலே தருவதடா தென்னை-அது
தாராள இயல்போடு
தலைநிமிர்ந்து பார்க்குதடா விண்ணை"

என்று பாடல் தொடங்கியது.

"அழகான காய்கள் தருமே-அதை
ஆட்டினால் எண்ணை தரும்
அகப்பைக்குத் தொட்டி தரும்
அடுப்பெரிக்க மட்டை தருமே
காவியாடை கட்டும் ஜீவன் முக்தர்கைக்கு

ஓடும் கொடுக்குதடா-திரு
ஓடும் கொடுக்குதடா"

என்று முடிகிறது. இப்பாடலை கே.ஆர். இராமசாமி" இது அருமையான பாடல்" என்று பாராட்டினாராம்.

"கம்பெனி நாடகங்களின் தலைநகரமான மதுரையில் தன் பாடலாசிரியர் பணியைத் தொடங்கினார் நாராயணகவி. நாடகங்களுக்கு நகைச்சுவைப் பாடல்களை வடிவமைத்துக் கொடுப்பது இவரது வேலை. சில கம்பெனிகளில் வாத்தியாராக (இயக்குநர்) பணியாற்றியது மட்டுமன்றி ஆரியகான சபாவின் சில நாடகங்களில் நடிக்கவும் செய்தார்" என்று எழுதியுள்ளார் எஸ்.தியடோர் பாஸ்கரன்.

கல்கியும் உடுமலையாரின் பாடல்களுக்கு ரசிகர் ஆவார். கோவலன் கண்ணகி பாடல்களை அவர் வரிவரியாகச் சொல்லிப் பாராட்டினார். அத்துடன் 'ஓர் இரவு' நாடகப் பாடல்களையும் பொருத்தமானது என்று பாராட்டினார்.

4

திரைப் பாடல் சாதனைகள்

''சினிமா பாட்டு என்னும் போதினிலே-செந்
தேள் வந்து பாயுது காதினிலே''

என்று ஒரு பாடலைக் கவிராயரே எழுதினார் என்றால் வியப்பாகத்தான் இருக்கும்.

இதற்கான மனநிலை எப்படி வந்தது எப்பொழுது வந்தது என்றுதான் தெரியவில்லை. சுப்பு ஆறுமுகம் இதைப்பற்றிச் சொல்லும் போது கவிராயர் பூளவாடிக்குச் சென்ற பிறகு இப்படி எண்ணி யிருக்கிறார் என்பார் கடைசி காலத்தில் 'சட்டி சுட்டது கைவிட்டது' என்ற ரீதியில் சொன்னார் என்று நினைக்கக்கூடாது. அவ்வப்போது இவருக்கு இந்த எண்ணம் தோன்றியிருக்கிறது.

ஜூபிடரின் ஆஸ்தான வித்வானாக இருந்தபோது இவரிடம் பாட்டெழுதி வாங்குகிற வேலை எம்.எஸ்.விஸ்வநாதனுடையது அந்தப் பாடலில் ஓசை குறைந்திருக்கிறது; இந்தப் பாடலில் ஓசைநயம் குறைந்திருக்கிறது என்று கூறி பாட்டுவரிகளை மாற்றச் சொல்லுவாராம். அதற்குக் கவிராயர், ''பாமரர்களுக்கும் தூய தமிழ் தெரியாதவர் களுக்கும் பாட்டெழுதி என்னுடைய தமிழ் தேய்ந்து போகுமோ என்று பயமாக இருக்கிறதடா'' என்று வருத்தப்படுவாராம். அதோடு, ''மக்களுக்குப் புரியாது. மக்களுக்குப் புரியாது என்று இறங்கி எழுதியே நான் படித்த இலக்கியத் தமிழை மறந்துவிட வேண்டியதுதானா?'' என்று அலுத்துக் கொண்டிருக்கிறார்.

'பந்தபாசம்' படத்திற்குப் பாட்டெழுதிய கவிராயர் பாடலோடு ஒரு கடிதமும் கொடுத்தாராம். அதில், ''கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பாச்சு, உலக்கை தேஞ்சு உளிப்பிடியாச்சு! என் தமிழ் என்ன ஆகுமோ என்று பயமாக இருக்கிறது. உன் விருப்பப்படி பாடல்களை மாற்றி எழுதித் தருகிற ஒருவரை வைத்து எழுதி வாங்கிக் கொள். நான் கற்ற தமிழைக் கொஞ்சமேனும் காக்க வேண்டும் என விரும்புகிறேன். தமிழ் இனி என்ன நிலைமை ஆகப் போகிறதோ'' என்று

எழுதியிருந்தார் என்பார் எம்.எஸ்.வி. ஆனால் ''வெறும் வார்த்தைகளுக்கு இடையில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழ்த் திரைப்படப் பாடல்களை வாழ்க்கைக்கு இடையில் நகர்த்திய வரலாற்றுக் கவிஞர். கலைவாணரின் கணிப்பில் அவர் ஒரு திரை உலகப் பாரதி, அண்ணாவின் அகத்தில் அவர் பாட்டாளிகளின் எழுச்சிக்காகக் கொட்டும் பகுத்தறிவு முரசு, கலைஞரின் கருத்தில் ஆயிரம் ஆயிரம் எழுச்சிப் பாடல்களைத் தந்த அரிமாக் கவிஞர். எம்.ஜி.ஆரின் எண்ணத்தில் அவர் ஒரு திரைப்பட உலகத் திருப்பம். அவர்தான் திரைப்படப் பாடல்களில் சங்கீதச் சாயங்களைப் பிழிந்து விட்டு, கருத்துமை பூசி உறைய வைத்த உலவ வைத்த உடுமலைக் கவிஞர்'' என்று நெல்லை ஜெயந்தா பாராட்டும் வகையில் கவிராயர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். (கலை உலகில் சாதித்தக் கவிஞர்கள், மதுரைமணி 22.2.2001)

புலவர் புலமைப் பித்தன், ''கவிராயர் என்று கனக மகுடம் சூட்டிக் கொண்டு கலைத்துறையில் பாட்டு ராஜாங்கம் நடத்தியவர், பாட்டுக் களின் வயிற்றில் பகுத்தறிவு பால் வார்த்தவர். நான் அண்ணாந்து பார்க்கும் அளவுக்கு உயரமானவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு இவர் நல்ல சான்று. நான் என்னை எண்ணி இறுமாந்து போகிற வேளையில் என்னைப் போன்ற பாட்டனுக்குப் பாட்டன் என்று இருந்திருக்கிறான் என்பதைப் பார்க்கிறேன். திரைப்பாடல்களுக்கு இலக்கிய மரியாதையைக் கொடுத்தவர்'' என்று புகழ்பாடுகிறார்.

அத்துடன் ''பழுத்த சிந்தனையும் அழுத்தமான தமிழறிவும் கவிராயருக்கு வாய்த்தது போலத் தமிழ்த் திரையுலகில் எல்லாருக்கும் வாய்த்ததில்லை. தமிழ்த் திரையுலகில் இவர் பிடித்திருந்த பேனா அன்று செந்தமிழ் இசைப்பாடல் அரசாட்சி செய்த செங்கோல் ஆகும். எந்தப் படாதிபதியும் இவரிடம் தலை வணங்கி நின்றிருக்கிறார்களே தவிர இந்தச் சுயமரியாதைக் கவிஞரின் தலை எந்தப் படாதிபதியிடமும் தாழ்ந்து நின்றதில்லை. பட்டுக்கோட்டைகள் வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னாலேயே இந்தப் பாட்டுக்கோட்டை தான் அரசாட்சி நடத்தியது. 'ஜாலிலோ ஜிம்கானா' என்ற விவரமற்ற வெறுஞ் சந்தங்களை விற்க வந்த எழுத்து வியாபாரியல்ல, கள்ளிக்கோட்டை முல்லை காடாக மாற்றிய முற்போக்கு சிந்தனையாளர் இவர். உடுமலையாரும் பாபநாசம் சிவனும் ஒரே காலத்தில் திரையுலகப் பாட்டுப்பணியில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் பாபநாசம் மணிப் பிரவாளம் என்ற கதம்ப மொழியைக் கையாண்டார். உடுமலை தான் தமிழ்க் குற்றாலமாகக் கரைபுரண்டவர்'' என்றும் கூறினார். (உ.நா.பா., அணிந்துரை).

நாராயணகவிராயரின் கலை உலக வாழ்க்கையை மூன்று பகுதிகளாகப் பகுத்துக் கூறுவார் சுப்பு ஆறுமுகம்.

1. மதுரையில் நாடகங்களுக்குப் பாடல் எழுதிய காலம்.

2. கலைவாணருடன் நாடக திரை உலக வாழ்வின் காலம்.

3. ஏ.வி.எம். போன்ற நிறுவனங்களுக்கு எழுதிய காலம்.

1931-இல் ஊமைப் படங்களின் காலம் முடிந்து பேசும் படங்களின் காலம் தொடங்கியது. அப்போது நாடகத் துறையில் உள்ள கலைஞர்கள் அனைவரும் ஆர்வத்தோடு திரையுலகில் நுழைந்தனர்.

நாடக வசனகர்த்தவாக, இயக்குநராக, நடிகராக, பாடலாசிரியராகப் பயிற்சிப் பெற்றிருந்த உடுமலையாருக்குத் திரைவாசல் திறந்தது. அவரது அறிமுகத்துக்குக் கிராமப்போன் தட்டுகளாக ஏற்கெனவே வெளி வந்திருந்த கவிராயரின் பாடல்களும் துணை புரிந்தன.

முனைவர் அமுதன் கூறுவது போன்றே, ''ஓர் இருபது ஆண்டுகாலம் (1950-1970) தமிழகத்துத் திரை வானில் ஒரு மின்னலைப் போன்று மின்னிக் கொண்டிருந்தார். எப்படி மின்னுவது என்று மின்னல் களுக்கெல்லாம் சொல்லிக் கொடுத்த மின்னலாக விளங்கினார். கவிமழை கொட்டிய அம்மின்னலின் பெயர்தான் உடுமலை நாராயணகவி.''

கிருஷ்ணலீலா

1933-இல் சிதம்பரம் ஜெயராமன் கதாநாயகனாக நடித்த திரைப்படம். இதற்கு வசனம் பாடல்களைக் கவிராயர் எழுதினார். இந்த வாய்ப்பை வழங்கியவர் திரு.நாராயணன். இதில்,

> **"அருந்தவ குலமணிக் கொழுந்தே**
> **உன்னைப் பிரிந்தே யிரேன் மறந்தே"**

என்ற பாடலை எழுதினார். இதுவே இவர் திரைப்படத்துக்கு எழுதிய முதல் பாடலாக இருக்க வேண்டும். இதில் தேவ்கி வசுதேவன், கம்சன் மூவரும் தர்க்கம் செய்வது போன்று அமைந்துள்ளது. ''நாரியே உன் சொல்தான் கேளேன்'' என்று கூறுவது பெண்ணடிமைத் தனத்தைக் காட்டுவது. எனினும் இது கம்சனின் குரல் என்பதால் இயல்பாகவும் உள்ளது.

திரௌபதி வஸ்திராபரணம்

இது 1934-இல் வெளிவந்தது. இதற்குப் பாடல் எழுதுவதற்காகக் கல்கத்தாவிற்குப் போய் வந்தார். இப்படத்திற்கு இவர் பாடல்களோடு வசனமும் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரமோகனா அல்லது சமூகத் தொண்டு

இது 1935-இல் வெளிவந்த படம். இது முழுக்க முழுக்க பம்பாயில் தயாரிக்கப்பட்டது. இதனை ராஜா சந்திரசேகர் இயக்கினார். இதுதான் இவரால் பாடல் எழுதப்பட்ட முதல் படம் என்பாரும் இருக்கிறார்கள்.

தூக்குத் தூக்கி

இது 1935-இல் வெளிவந்தது. இதற்குக் கவிராயர் பாடல்களோடு வசனமும் எழுதினார். இது ராயல் டாக்கீஸாரின் படம்.

இந்திர சபா

கவிராயர் பாடல் எழுத 1936-இல் வெளிவந்த திரைப்படம் இது. இப்படத்துப் பாடல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

விப்ரநாராயணர்

இதுவரை கவிராயர் ஓரிரு பாடல்களை மட்டுமே ஒவ்வொரு படத்துக்கும் எழுதி வந்தார். 'விப்ரநாராயணர்' என்ற படத்தின் அனைத்துப் பாடல்களையும் அவரே எழுதும் வாய்ப்பு கிடைத்தது. இப்படம் 1937-ல் வெளி வந்தது.

இதில் கொத்தமங்கலம் சீனு நடித்திருந்தார். இதனை முசிறி சுப்பிரமணிய ஐயரின் தம்பி 'சவுண்ட் சிட்டி' நாராயண ஐயர் தயாரித்திருந்தார்.

இதில் உள்ள பாடல்களில் ஒன்று கூட கிடைக்கவில்லை. இதனைத் தமிழிசைக்கு ஏற்பட்ட இழப்பு என்றே குறிப்பிட வேண்டும்.

தமிழறியும் பெருமாள்

இதில் வி.ஏ. செல்லப்பாவும் எம்.ஆர். சந்தான லட்சுமியும் நடித்திருந்தனர். ஜே.ஆர். ரகுநாத் இதன் இயக்குநர். இது 1937-இல் வெளி வந்தது. இதில்

> **"கல்வியைப் போலொரு செல்வம் உள்ளே**
> **காணவேணும் புவியோரே"**

என்று ஆரபி ராகத்தில் ஒரு பாடல் எழுதினார் இது நக்கீரர் பாடுவதாகவும், ஆதி தாளத்திலும் அமைந்துள்ளது கவிராயர்,

''வெள்ளத்தாலும் கனல் விழினும் குலையா
வேந்தர்கள் எவரும்தான் கொள்ள முடியா
அள்ளி கொடுப்பினும் எந்நாளும் குறையா
அறிவிற்கு உணவுமாம் யாதினும் அழியா''

என்றும் கல்வியின் சிறப்பை வலியுறுத்தினார்.

''பரணி முதலாய் காதலுடன் அந்த மாதிரி
திருவாயிர மணிமாலை புராணம்
குறவர் வஞ்சி கலம்பகமும்
என்று வந்து பண்பாடும் பரபல
கலைஞானமே இல்லார்கானில் வாழ்மரம்''

என்று இப்பாடல் முடியும். தமிழின் பிற்கால இலக்கியங்களை இவ்வாறு வரிசை படுத்துகிறார். இது தமிழ்ப் பெண் புலவரின் கதை.

சதி அநுசூயா

இத்திரைப்படம் 1937-இல் வெளியாயிற்று. இதில் கவிராயர் எழுதிய பாடல்களில் இரண்டு கிடைத்துள்ளன.

இவற்றில் ஒருபாடல் சரசுவதி, லட்சுமி, பார்வதி, நாரதர், அநுசூயா ஆகிய ஐந்துபேரும் பாடுவதாக அமைந்துள்ளது இதனைக் சீர்காழி கோவிந்தராஜன், வசந்த குமாரி, ஜமுனாராணி, ஏ.பி கோமளா, ரத்னமாலா ஆகியோர் பாடினர். இது ஒரு போட்டிப் பாடல். இது,

''அக்கா மார்களே
பெண்களுக்கு எல்லாம்
பெரியவள் நானே
சரசுவதி நான்''

என்று தொடங்கியது. இறுதியில் அனுசூயாவே உயர்ந்தவள் என்று பாடல் முடிந்தது. 'கணவனே வாழ்வில் என்றும் கண்கண்ட தெய்வம்' என்ற கருத்தை இதில் வற்புறுத்தினார்.

ஜமுனா ராணியால் பாடப்பட்ட இன்னொரு பாடல் ஒரு மாயப் பெண் பாடுவதாக அமைந்தது.

''மாயமாகிய ஜாலந்தனிலே
வந்த மாது நானே உடனே
மாறும் எந்தன் உருவமாகுமே''

என்று அந்தப்பாடல் தொடங்கும்.

திருநீலகண்டன்

இதில் எம்.கே. தியாகராஜ பாகவதர் கதாநாயகன். இதிலும் கவிராயர் கலைவாணர் கூட்டணி. இதற்காக கவிராயர் "பங்கையன் நாவில் வாழும் பான்மைபோல்" என்ற பாடலைக் கலைவாணருக்காக எழுதிக் கொடுத்தார். இப்படம் வெளிவந்த ஆண்டு 1939; மாதமோ செப்டம்பர்.

இந்த லாவணிப் பாடலை மருதையும் சொக்கனும் பாடுவதாகப் படத்தில் அமைத்தனர்.

> **"அந்த கணபதிக்குத் தொந்தி பெருத்தவிதம்**
> **கொழுக்கட்டை தின்றதினால் அண்ணே**
> **அண்ணே"**

என்றும்,

> **மறையவன் நாவிலவன் உறைவது நிஜமானால்**
> **மலஜலம் கழிப்பது எங்கே? எங்கே?"**

என்றும் இவர் புராணங்களையும் தெய்வங்களையும் கேலி செய்தார். இதனை நாத்திகப் பிரச்சாரத்தின் தொடக்கம் என்று கூறலாம். கலைவாணருக்கும் கவிராயருக்கும் தொடர்பு ஏற்பட இது காரணமாக இருந்தது என்றும் கூறலாம். 'பொட்டச்சி புலவனே' என்றும் 'மங்கு சனி பிடித்த மண்டுப் புலவனே' என்று சொக்கன் திட்டிக் கொள்வது சுவாரஸ்யமானது. இப்பாடல்களைப் பாகவதருடன் திருநெல்வேலி பாப்பா, செருகளத்தூர் சர்மா, என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ. மதுரம் ஆகியோர் பாடி நடித்தனர். ராஜாசாண்டோ இயக்கினார்.

சகுந்தலை

இது 1940-இல் வெளிவந்த படம். இதில்தான் கலைவாணரும் கவிராயரும் ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் ஆயினர். இதற்கு உதவியவர் நடிகர் சி.வி.வி.பந்தலு. இதன் இயக்கம் ஆர்.டங்கன்.

> **"எங்கள் தந்தை தாயின் நாடு**
> **சங்கத் தமிழ்த் திருநாடே"**

என்ற பாடலை இதில் எழுதினார். இதனை எம்.எஸ். சுப்புலட்சுமி பாடினார். இவரே சகுந்தலையாக நடித்தார்.

> **"சங்கத் தருந்தரள பவளம்**
> **தங்கம் விளைநாடு**
> **கங்கைக்கிணை ஆமெனுங்கா**
> **விரிவளம் செய்நாடு"**

என்று தமிழக வளத்தையும்

"குடகும் குணகடலும் குமரி
வடவேங்கடம் மருங்கில்
இடமாய் எழில் பலவும் நாடும்
இன்பம் வாய்ந்த நாடு"

என்று தமிழக எல்லைகளையும் இப்பாடலில் கவிராயர் விவரித்துள்ளார். தமிழக வாழ்த்துப் பாடும் நாட்டுப் பாடலாகத் திகழும் சிறப்பு இதற்கு உண்டு.

இப்படத்தில்

"காலையிலே எழுந்திருச்சி
கஞ்சித் தண்ணி இல்லாமே
கஷ்டப்படுகிறேனே கடவுளே"

என்ற பாடல் மிகவும் பிரபலம் ஆயிற்று.

இழந்த காதல்

இது 1941-இல் திரைப்படமாயிற்று. முதலில் நாடகம். பின்னர் இது என்.எஸ்.கிருஷ்ணனின் படம். இதில் வேணு, வேணியாக கலைவாணரும் மதுரமும் நடித்தனர். இதிலுள்ள பாடல்களில் பலவற்றை உடுமலை நாராயணகவி எழுதினார். கணவனால் கைவிடப்பட்ட வேணியிடம் வேணு காதல் கதை பேசத் தொடங்கும் பாடல் ஒன்று. வேணி வசப்பட்டிருக்கக் கூடும் என்பதை இப்பாடல் மூலம் யூகிக்க முடிகிறது என்பதை அறந்தை

"மாப்பிள்ளை போலே பத்தரமாத்துப்
பொன்னாலே பொண்ணுக்கு
காப்புக் கல்லாலே மத்தாப்பு பூஞ்சேலை"

என்பது பாடலின் பல்லவி.

"தொங்கலு மாட்டி
வேலைத் தந்திரங்காட்டி
தங்கக் கம்பியை நீட்டிச்
செய்த சங்கிலி பூட்டி
உலுக்கினா குலுக்கினா ஆரும்
ஆசைப் படுற மோலாக்கு
சலக்குச் சத்தம் கேக்கிறாப் போலே
சலங்கை கொலுசு காலுக்கு
பிலுக்கினா பேசினா கூடப்
பேசறாப்பிலே மூக்குக்குப்
பேசரி பண்ற ஆசாரிக்கு
யோசனை சொன்னேன் புல்லாக்குக்கு".

என்று நகைகளை விவரித்து பாட்டு எழுதியுள்ளார்.

கவிராயரிடம் உள்ள சிறப்புகளில் ஒன்றாக இவ்வாறு பட்டியலிடும் பாங்கையும் குறிப்பிடலாம்.

கண்ணகி

1942-இல் வெளிவந்த இப்படத்தின் அனைத்துப் பாடல்களையும் கவிராயர் எழுதினார். எஸ்.வி. வெங்கட்டராமன் இசை அமைத்தார்.

"அன்பில் விளைந்த அமுதமே
அன்னமே என் கண்ணகி"

"சந்திரோதயம் இதிலே"

"தேவமகள் இவள் யார்? இவள் யாரோ?
தேனின் மொழியாள் தென்றலின் ஒயிலாள்
பூவில் அயன்மால் புரமெரித்தோனும்
யாவரும் மயங்கும் மோஹினிதானோ?"

என்ற பாடல்கள் சிருங்கார ரசம் சொட்டின.

"மானமெல்லாம் போனபின்னே வாழ்வது
தானொரு வாழ்வா"

என்று பி.யு.சின்னப்பா பாடியபோது ரசிகர்கள் கண்கலங்கி அழுதனர். அதுபோல் கண்ணகியை நினைந்து,

"பத்தினியே உன்போல்
இத்தரை மீதினில்
உற்றவர் யார் புகல்வாய்"

என்று பாடிய போதும் ஏற்பட்டது.

உச்சரிக்கவே மிகவும் கஷ்டமான ஒரு பாடலை உடுமலையார் எழுதினார். அது,

"நண்டு சிப்பி வேய்கதலி
நாசமுறுங்கால்
தான் கொண்ட க்ருவையே
அழிக்கும் கொள்கையதுபோல்"

என்று தொடங்கியது. இதனை பி.யு. சின்னப்பா இதன் கம்பீரம் குறையாமல் பாடினாராம்.

கண்ணகி படப்பாடல்களுக்குப் பிறகு உடுமலையாரின் புகழ் திரையுலகில் பரவ ஆரம்பித்தது. பக்திப் பாடல்களுக்குப் பாபநாசம் சிவனையும் சமூகப் பாடல்களுக்கு உடுமலையாரையும்

தயாரிப்பாளர்கள் அழைக்கும் காலம் தொடங்கியது. எனினும் 1947க்குப் பிறகே கவிராயர் முன்னனிக் கவிஞராய் விளங்கினார்

இதிலுள்ள 17 பாடல்களும் கிடைத்துள்ளன. இவை பூபாளம், பிலஹரி, சங்கரா பரணம், மாண்டு, நவரசகானடா, காம்போதி, கமாஸ், இந்துஸ்தானி, பைரவி, தேசிக சிந்து, பஹாடி, மிஸ்ர சாரங்கா, மிஸ்ர சாமா, சகானா, பிஹாக், புன்னாகவராளி போன்ற இராகங்களில் அமைந்துள்ளன.

"தயாபரி சகாயம் நீ
செய்யா விடில் எவ்வாறு உய்வேன்"

என்று கண்ணகி பாடுவதாகத் தொடங்கும் பாடல் குறிப்பிடத்தகுந்தது.

"தாயே இருந்தும் சேயும் இரங்கி
தவித்திடும் நிலைபோல் ஆனேனே
தரணிமீதென் ஆருயிர்நாதன்
சங்கடம் தீர்ந்திட தயை புரிவாயே
சதிபதியாய் சுமைச் சேர்ப்பாய்"

என்ற கண்ணகியின் வேண்டுகோளும் அவலத்தில் முடிகிறது. கண்ணாம்மா சிறப்பாக நடித்தார். வசனம் பாடல் இரண்டிலும் இது வெற்றிக் கொடி நாட்டியது.

மாயா ஜோதி

'மாயாஜோதி' என்றொரு திரைப்படம். 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' கதையைத் தழுவியது என்ற அறிவிப்புடன் 1942ஆம் ஆண்டில் வெளிவந்துள்ள இப்படத்தில் அலாவுதீன் பெயர் அமலாதித்தன். இளவரசியின் பெயர் பரிமளா. பாடல்களை உடுமலை நாராயணகவி எழுதினார்.

ராணுவச் சேவைக்காக ஏராளமான இளைஞர்களை பிரிட்டீஷ் அரசாங்கத்தினர் பட்டாளத்தில் சேர்த்துக் கொண்டிருந்தபோது வெளி வந்துள்ள படத்தில் 'போருக்குப் போகாதே' என்றொரு பாடல். மிக சாமர்த்தியமாக கட்டபொம்மன் தெருக்கூத்துப்பாடல் பாடி நடிக்கப் பட்டுள்ளது. பாதர் வெள்ளை போருக்குப் புறப்படுகிறான். அவன் மனைவி வெள்ளையம்மாள் 'போருக்குப் போகாதே என்று பாடுகிறார்.'

"போகாதே போகாதே
என் கணவா
பொல்லாத சொப்பனம்
நானும் கண்டேன்

ஆந்தை இருந்து
அலறக் கண்டேன்
பட்டத்து யானையும்
மண்மேல் சரியக் கண்டேன்''.

என்பது இந்த பாடல்.

''விளக்கோ விளக்கு வெள்ளி விளக்கு
வெங்கல விளக்கு வீட்டுக்கேத்த விளக்கு''

என்று மந்திரவாதி பாடுவதாக இன்னொரு பாடலையும் இவர் எழுதியுள்ளார்.

குபேர குசேலா

இதில் பி.யூ. சின்னப்பாவும் டி.ஆர். ராஜகுமாரியும் நடித்தனர். கலைவாணரும், ஏழைக் குசேலராக பாபநாசம் சிவனும் நடித்திருந்தனர். 1943-இல் இப்படம் வெளிவந்தது

''நடையலங்காரம் கண்டேன் அன்னப்
பெடையும் பின்னடையும் பொற்
கொடியிவள் மலரடி''

என்ற இவரது பாடலை பி.யு. சின்னப்பா பாடினார்.

''மாலை சூட வந்தேன் மல்லிகா
மாசில் குசேலன் உந்தன் நேசன் மாமா''

என்றும் ஒரு பாடல்.

''செல்வமே சுகஜீவாதாரமே
திருமகள் அவதாரம் போலவே''

என்று செல்வச் சிறப்பை விவரித்துள்ளார்.

இப்படத்துக்கு இவர் எழுதிய 10 பாடல்களும் கிடைத்துள்ளன. இங்கிலீஷ் நோட்டோடு வரும் இசை நாடகமும் கலைவாணரோடு மற்றவர்களும் பாடும் காமிக் பாட்டும் பூசாரி பாட்டும் குறிப்பிடத்தக்கவை.

''அஞ்சு வள்ளம் நெல்லு குத்தி பொங்கலும் வச்சு
ஆடும் கடாவும் வெட்டி பலி கொடுப்போம்
கஞ்சா அபிணிகள்ளுக்குடங்கள் வச்சு பட்டைக்
கட்டுச் சாராயம் கோழி முட்டையும் வச்சு''

அம்மனை வழிபடுவதாக பூசாரி பாடுவதில் ஒரு விமர்சனத்தையும் காணலாம்.

பூம்பாவை

இந்தப்படம் 1943-இல் வெளி வந்தது. இதில் கலைவாணருக்காக ஒரு பாடல் எழுதிக் கொடுத்தார்.

**"சின்ன வயதினிலே கன்னித் தமிழிலே
சொன்னாள் ஒரு பாட்டு
என்று போடுறாயே வேட்டு"**

என்று எழுதி ஞானசம்பந்தர் பார்வதியிடம் ஞானப் பால் உண்டதை 'அருளா பொருளா?' என்று வினா எழுப்பி விமர்சிக்கிறார். 'அடிப்பேன் உதைப்பேன்' என்றும் மிரட்டுகிறார். இசைக்கு முக்கியத்துவம் அளித்த படம். கே.ஆர். ராமசாமி நடித்திருந்தார்.

பர்த்ருஹரி

இது 1944இல் வந்த திரைப்படம். இதில் செட்டியாரும் அவரது மனைவியும் பாடுவது போன்று ஒரு பாடலை எழுதினார்.

**"போயிருந்தே டப்பா
மனகு பொல்லாத வேளை - தேவுடா"**

என்று தெலுங்கு கலந்த பாடலாக அது அமைந்தது.

இதிலும் கிண்டலும் கேலியும் கலந்திருந்தன. அநியாயமாக சம்பாதித்தால் அது நிற்காமல் அழிந்து போகும் என்று நகைச்சுவை யோடு கூறி விடுகிறார். இதில் இவர் எழுதிய 'காக்கா' பாடல் மிகவும் பிரபலம் ஆயிற்று.

பைத்தியக்காரன்

இது ஒரு வெற்றிகரமான நாடகம். என். எஸ். கே பிலிம்ஸ் நிறுவி டி.ஏ.மதுரம் இதனைப் படமாக்க விரும்பினார். கிருஷ்ணன்பஞ்சு இயக்கினார். சிறையிலிருந்து விடுதலை பெற்று வந்த கலைவாணருக்கு ஏற்ற முறையில் கதையைக் கொஞ்சம் மாற்றி அவரையும் நடிக்க வைத்தனர். சகஸ்ரநாமமும், எம்.ஜி.ஆரும் நடித்தார்கள். 1947இல் தீபாவளியன்று வெளிவந்தது.

**"ஆசையாகப் பேசிப் பேசி
ஆளை ஏய்க்காதே மாமா"**

என்று ஒரு டூயட் பாடல்.

**"பணக்காரர் தேடுகிற இன்பம்-ஏழை
பாட்டாளி மக்கள் படுந்துன்பம்"**

என்ற பாடலைக் கலைவாணர் பாடினார்.

"சன்மார்க்கமே இல்லாச்
சமூகப்பேயின் சதியாலே
என்போலே பேதை
எத்தனை பேருள்ளாரோ"

என்று ஒரு சோகப் பாடல் எழுதினார் உடுமலையார். இதைத் தவிர "காதலே தாவதும் உண்டோ" என்ற பாடலையும் எழுதியுள்ளார்.

"ஜெயிலுக்குப் போய்வந்த சிரேஷ்டர்-மக்களை
சீர்திருத்து வாங்கோ"

என்ற பாடல் கலைவாணரின் சிறை அனுபவத்தைச் சொல்லிற்று அவரே அதைப்பாடினர். இவருக்கு பம்பல் சம்பந்த முதலியாரால் இப்பொழுதுதான் பட்டம் கொடுக்கப்பட்டது 'கலைவாணர்' என்று.

ராஜகுமாரி

1947இல் வெளிவந்த திரைப்படம். இதில் டி.ஆர்.ராஜகுமாரிதான் கதாநாயகி. எனவே படத்தின் பெயரும் 'ராஜகுமாரி' கதாநாயகனாக முதலில் பி.யு. சின்னப்பாவைப் போடலாம் என்று எண்ணிப் பின்னர் எம்.ஜி.ஆரைக் கதாநாயகனாக்கினார் கலைஞர் வசனம் எழுதினார். இதற்காக,

"பாட்டையென்ன சொல்லுவேன் - பாங்கி
பாவலர் ஞான ஒவியமான"

"மாரன் அவதாரம்

"கொண்டாடும் சுபதினமே
இன்றுநாம் எல்லோரும்
மணிமுடி கொண்டாளும் ராஜகுமாரி"

"வாழ்வோம் வாழ்வோமே"

என 4 பாடல்களை எழுதினார். அவற்றில் ஒரு காதல் பாடலை சுகுமாரும் மல்லிகாவும் பாடுவதாக அமைத்துள்ளார்.

"திருமுருக எழிலைத்
திருடிக் கொண்டது தாமரையது
அதனால் நானே
பெரியவன் என்றது தாமரையது"

என்று எழுதப்பட்ட அக்காதல் பாடல் பலரால் பாராட்டப் பட்டது.

விஸ்வாமித்திரர்

இதில் ஒரு சோம்பேறி வேதாந்தம் பாடுவதாக ஒரு பாடலைக் கவிராயர் எழுதினார். இதனைக் கலைவாணரும் மதுரம் அம்மையாரும் பாடினார்கள் இது 1947இல் வெளியாயிற்று.

பெண்: சோம்பேறி வேதாந்தம்
சோத்துக்கு ஆகாது
வீட்டுக்கு வாங்க.
ஆண்: நாம் போறேன் மாமாங்கத்துக்கு
நாயகியே என்னை நம்பாதே போ.
பெண்: மோட்ச லோகம் கண்டதற்கு
சாட்சியம் உண்டா?
உங்கள் மூளையைக் குழப்பிவிட்ட
ஆளையும் கொண்டா?
ஆண்: ஓட்டைக்காய் கொட்டைக்காய்
கழுத்தில் மாட்டி
குப்பை மேட்டில் போடும்
மாட்டுச் சாணச் சாம்பல் தீட்டி
வீட்டை விடுத்து காட்டை அடுத்து
காவிவேட்டி தரித்து.

இப்பாடல் அவர்களால் நகைச்சுவையும் சொற்சுவையுமாகப் பாடப்பட்டது.

"நாட்டுக்குள்ளே பாட்டைப் பட்டு
நாளைக் கழிப்பவன் அஞ்ஞானியா"

என்ற பகுத்தறிவுப் பாடலையும் எழுதினார். இரண்டுமே பெரிதும் போற்றப்பட்டன.

பொன்னி

இது 1947-ல் வந்த படம். இதில் ரிக்ஷாக்காரர்களுக்காக

"ஆடுவதும் பாடுவதும் எதுக்கு?
நய்னா எதுக்கு?
ஓடுவதும் தேடுவதும் எதுக்கு
எல்லாம் இதுக்கு!"

என்ற பாடலை உடுமலையார் தெினார். அத்துடன்

"உலகம் போற போக்கிலே
உள்ளது எதுவுமே நடக்கலே
குலமும் குணமும் சந்தியிலே-இப்பப்
பணந்தான் பேசது பந்தியிலே"

என்றும் ஒரு பாடல் எழுதினார். இதனை முனுசாமி கோரசோடு பாடுவதாக இருந்தது. இவற்றைத் தவிர,

"பாம்போடு பழகலாம் பெண்மணி
பண்பில்லா மாந்தருடன்
பழகினால் கூடாது என் கண்மணி"

என்று ஒரு புத்திமதி கூறும் பாட்டும்.

"மழையை நம்பி உயிர்வாழும்
மானம் பாத்த சீமையிலே"

என்று ஒரு நாட்டுப் பாடலும் எழுதினார்.

கிருஷ்ண பக்தி

1948இல் இது பி.யு.சின்னப்பாவால் நடிக்கப்பட்டது. ஆஷாட பூதியாக சின்னப்பா பகலில் கிருஷ்ண பக்தியும், இரவில் ஸ்திரி பக்தியும் கொண்டவராக உள்ளார். இசை எஸ்.வி. வெங்கட்டராமன்.

கபட சன்யாசியாக, பெண் பித்தனாக இருந்தபோது சின்னப்பா,

"சாரஸம் வசீகரக்கண்கள் சீர்தரும்
முகம் சந்திரபிம்பம்! சாரஸம்
மனோகர ஓவிய பெண்ணாள்
வாய்த்தால் பேரின்பம், ஸ்வாரஸ்யம்"

என்று பாடினார். அவர் திருந்தி மனவருந்திப் பாடும்போது,

"எல்லோரும் நல்லவரே உலகினில்
எல்லோரும் நல்லவரே"

என்று உருகுகிறார்.

இவற்றைத் தவிர

"கனவில் கண்டேனே
கண்ணன்மேல்:
காதல் கொண்டேனே"

என்று ஒரு பாடல். இதனை நடன ஆசிரியரான வி.கே. ராமசாமி குசலகுமாரிக்குச் சொல்லி நடனம் பயிற்று விப்பார். சிறு பெண் குழந்தைகளுக்குப் பரத நாட்டியம் காதல் பாட்டுக்களைச் சொல்லித் தருவதைக் கலைவாணர் இதில் கண்டிப்பார்.

"தேவகுமாரி தேவகுமாரி
சித்திரமிதில் உள்ள சிங்காரி-யோ
சித்திட இவள் ராஜகுமாரி
கனிதான் ஏதோ தவறி
கன்னியான மாதிரி"

என்று இன்னொரு பாடலைக் கலைவாணருக்காக எழுதியிருந்தார். இது ஒரு காதல் பாடல், "உழைப்பினிலே பழக்கத்திலே ஒன்றுபட்ட இன்பக் காதல் தன்னாலே" என்ற இன்னொரு காதல் பாடலும் எழுதினார்.

தூய உள்ளம்

1948இல் வெளி வந்துள்ள 'தூய உள்ளம்' என்ற படத்தில் கவிராயர் நான்கு பாடல்களை எழுதியுள்ளார்.

"ஓழைச்சுத் திங்க நமக்குப் பலமிருக்குதே
உண்மையோடு உதவிக்காக நீயுமிருக்கிறே"

"நமப்பார்வதி பதே ஓம்
நமப் பார்வதி பதே
பிள்ளையே இல்லேன்னா
கதிமோட்சம் இல்லேன்னு"

"கண்ணே கண்ணே உன்னைத்தொடும்
ஆளை இப்போது
இன்னாருன்னு கண்டுபிடிக்க
வேணும் தப்பாது"

"இன்ப லோகஜோதி ரூபம்போலே
நீலவான வீதி மேலே
சந்திரிகா நீ வந்தாய்
அன்பாய் ஆடவே"

என்பவை அவை. இவை உழைப்பு, பக்தி, விளையாட்டு, காதல் என்று விரிந்துள்ளன.

வேலைக்காரி

'வேலைக்காரி' திரைப்படம் ஆனபோது அதில் கே.ஆர்.இராமசாமி, வி.என். ஜானகி ஆகியோர் நடித்தனர். எஸ்.ஏ. சாமி இயக்குநர். அண்ணா வசனம் எழுதினார். பாடல்கள் அனைத்தையும் உடுமலையார் எழுதினார். படம் வசனம் மற்றும் பாடல்களுக்காகவே சிறப்பாக ஓடியது.

"உடுமலைக்கவிஞரின் பாடல்கள் உயரிய முறையில் உள்ளன. தொழிலாளர் மேன்மை, பெண்களின் உரிமை, கடமை, பக்தனின் உருக்கம், பணக்காரர் கொடுமை, பொருள்களின் நிலையாமை, காதலின் உயர்வு, பொதுவாக உலகநிலை ஆகிய நற்கருத்துகள் விரவிடத் தூய தமிழில் நயமுடன் கவிதை வடிவில் அமைந்து நல்க

ஏற்று மெட்டுக்களுடன் இனிதாகப் பாடப்படுகின்றன'' என்று பெரியாரும் 'குடியரசு' இதழில் பாராட்டியுள்ளார்.

இப்படத்தில் உள்ள ''ஓரிடந்தனிலே நிலையில்லாது உலகினிலே'' என்ற பாடல் மிகவும் பிரபலம். இதைப்பற்றி கவியோகி சுத்தானந்த பாரதியார் கூறும்போது, ''பிரான்சு நாட்டில் பாரீஸ் நகரில் உடுமலையின் இப்பாடலைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்துப் பாடிய போது அந்நாட்டு மக்கள் ஆரவாரம் செய்து ரசித்தார்கள். மொழி தெரியாமலே கருத்து மட்டும் இப்படி ரசிக்கப் படுகிறதென்றால் தமிழறிந்தவர்களுக்கு எவ்வளவு நன்றாக இருக்கும்'' என்று பாராட்டினார்.

''ஓரிடந்தனிலே நிலையில்லா துலகினிலே
உருண்டோடிய பணங்காசெனும்
உருவமானபொருளே''

லலிதா பத்மினியின் நடனபாடலாக அமைந்தது. தூர்வானி ராகத்தில் புகழ்பெற்றது.

''வாழ்விலே சுகம் மருவு சீரெலாம்
வளர்வது பெண்ணாலே''

என்ற பாடல் பெண்ணின் பெருமையைச் சொல்லிற்று. இது மாதர் சங்க நடனப் பாடல்.

''உழுது புலன் காப்போம் ஏர் - ஆநிரை
உதவியென்றே மேய்ப்போம்''

என்று பாடுபடும் தோழர்களைப் பற்றிப் பாடுகிறார்.

''எப்படி வாழ்வேன் இனிமேல்
இப்புவியின் மீது ஏழையேன் நான் அந்தோ''

என்று பகுத்தறிவு ததும்பும் பாடல் எழுதினார். இதனை கே.ஆர். ராமசாமி பாடினார். இத்தோடு

''லாலிசுப லாலி காதலர்
லாலி சுபலாலி
வாலிப வயதும் அழகும் அறிவும்
வளரும் கல்விப் பொருத்தம்''

என்றும் சீர்திருத்தக் கருத்துள்ள பாடலைப் பாடினார். இது நலங்குப் பாடல். டீ பார்ட்டி நடனத்தில்,

''வாழிய நீடூழி! மெய் வாழிய நீடூழி
பகுத்தறிவாளன் ஆனந்தன் - சதா
மனோகரமாய் வாழிய நீடூழி''

என்று ஒரு வாழ்த்துப் பாடலையும் எழுதினார். இவ்வாறு எழுதிய பாடல்களில் ஆனந்தன் பாடும்,

"இன்னமும் பாராமுகம் ஏனம்மா ஏழை
இனம் தவிப்பது பாரம்மா அம்மா"

என்ற பாடல் உருக்கமும் புரட்சியும் உடையது:

"சிங்காரப் பண்பாடுவேன் சரச
ஜீவ சிந்தாமணி உந்தனோடு நானே"

என்ற காதல் பாடலும் குறிப்பிடத் தக்கது. இதனை மூர்த்தியும் அமிர்தமும் பாடினர்.

சம்சார நவுகா

1948-இல் வெளிவந்த இப்படத்தில் கவிராயர் ஈச்சம் பழக்காரனுக்காகச் சாமிப்பாட்டு ஒன்று எழுதினார்.

"ஈச்சம்பழம் பேரீச்சம் பழம்
இது பேரீச்சம் பழம்
ஈராக்குப் பழம் இது - கிராக்கி அதிகம்
ஐரோப்பியர் முதல் எல்லாரும் திங்கிற"

என்பதுதான் அந்தப் பாடலாகும் இதுபோன்ற வியாபாரப் பாடல்களை எழுதுவது இவருக்கு வெல்லம் தின்பது போன்றதாகும்.

தேவதாசி

இதில் கலைவாணருக்காக இவர்,

"கச்சேரி வச்சுப் பாக்கோணும்
கல்யாண வீட்டில் என்னை"

என்று ஒரு பாடல் எழுதியுள்ளார். இந்தக் கச்சேரிப் பாட்டு கொஞ்சம் நகைச்சுவை கலந்ததுதான்.

நல்ல தம்பி

இதில் அண்ணாவின் கதை வசனம். இதற்குப் பாடல் உடுமலையார். இவர் எழுதிய கிந்தனார் கதாகாலட்சேபம் மிகவும் பிரபலம் ஆயிற்று. இதனைக் கலைவாணர் 1944இல் பல ஊர்களில் நடத்தி 11 இலட்சம் வரை வசூலித்து செஞ்சிலுவை போன்ற நலச் சங்கங்களுக்கு இலவசமாகக் கொடுத்தாராம். 1949இல் படம் வந்தது. இதில் 21 பாடல்கள்.

"கிந்தனார் காலட்சேபத்திற்கும் மது விலக்குப் பிரச்சாரத்திற்கும் இடையில் என் கதையும் சாமர்த்தியமாக அடைக்கப்பட்டுவிட்டது" என்று அண்ணா கூறினாராம். இது உடுமலையாரின் பாடலின்

சிறப்பைக் குறிக்கும்.

"வழி மறைத்திருக்கிறார் - மலைபோல்
டிக்கெட் கலெக்டர் தடுத்து நிற்குறார்
புது ஸு"ட்டும் கோட்டும் போட்டு"

என்று கிந்தனார் பாடல் தொடங்கியது.

"அன்னியர்கள் நமையாண்டது
அந்தக் காலம்
நம்மை நாமே ஆண்டு கொள்வது
இந்தக் காலம்"

"நாடு செழிக்குவேணும் ஆமடி தங்கம்
நாகரீகமாக வேணும் ஆமா சொல்லு"

என்பது பாணப் பெண்கள் தெருக்கூத்தாகும்.

"விடுதலை விடுதலை
அடிமை ஏழையென எவருமில்லை இனி"

"குடிச்சு பழகணும் குடிச்சு பழகணும்
படிச்சுப் படிச்சு சொல்லுறாங்கோ
பாழுங் கள்ளை நீக்கிப் பாலை"

"குடிகெடுத்த குடி ஒழிஞ்சது
அடிதடி சண்டை அதுங் கொறைஞ்சது
ஆணும் பெண்ணும் புத்தி அறிஞ்சது
எங்க நாட்டிலே"

என மது விலக்குக்காக ஒரு மகிழ்ச்சியான பாட்டு

"மனுசனாகிப் போனேன் - இப்ப நான்
மனுசனாகிப் போனேன்
பனைமரப் பாலு பட்டை பிராந்தி
பக்கம் வந்தா எடுக்கிறே வாந்தி"

என்ற பாடலைக் கலைவாணரே பாடுகிறார்.

"கலை முதலாகத் தொழில்முறையாவு
காத்து வளர்ப்பது தமிழ்நாடு"

என்று கலைவாணர் தமிழ் நாட்டைப் புகழ்ந்து பாடுகிறார்.

உலகில்முதலில் கள்ளை ஒழித்தது
எம் தமிழ்நாடு
உத்தமர் காந்தியின் சொல்லை
நன்றாய் உணர்ந்து

நடப்பதில் எமக்கீடில்லை

என்ற வரிகள் உண்மை வெறும் புகழ்ச்சியில்லை.

"நாட்டுக்குச் சேவை செய்ய
நாகரீகக் கோமாளி வந்தானய்யா"

என்று எழுதிய பாடல் கலைவாணரை நாகரீகக் கோமாளியாக்கிற்று.

1947 அக்டோபர் மாதம் 23,24 தேதிகளில் ஈரோடு நகரில் 'திராவிடர்க் கழகத் தனி மாநில மாநாடு' அண்ணா தலைமையில் நடைபெற்றது. திரு.வி.க., பெரியார், விடுதலை குருசாமி ஆகியோர் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் முதல் நாளன்று, கலைவாணர் பகுத்தறிவுப் பிரச்சாரப் பாடலைப் பாடினார். அப்பாடலை உடுமலை நாராயணகவி எழுதிக் கொடுத்தார். பாடல் இதுதான்:

"மனுசனை மனுசன் ஏச்சுப்
பொளச்சது அந்தக்காலம் - அந்த
மடமை நீங்கி பொதுஉடைமை
கோருவது இந்தக் காலம்.
நெனச்சதை எல்லாம்
எழுதி வச்சது அந்தக் காலம்
எதையுமே நேரில் கண்டே
நிச்சயிப்பது இந்தக் காலம்"

மாநாட்டில் இப்பாடல் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

1949இல் வெளிவந்த 'நல்லதம்பி' படத்தில் இந்தப் பாடல் சிறு மாற்றங்களுடன் இடம்பெற்றது.

"அன்னியர்கள் நம்மை
ஆண்டது அந்தக் காலம்
நம்மை நாமே
ஆண்டு கொள்வது இந்தக் காலம்
பேசுவதற்கும் உரிமை
அற்றது அந்தக்காலம்
பிரச்சாரம் பெருமை
உற்றது இந்தக் காலம்"

என்று பாடல் தொடங்கியது.

பாரிஜாதம்

1950இல் 'பாரிஜாதம்' என்ற படம் வந்தது. இதில் கவிராயர்,

"பாதுகாக்கணும் பாங்கு பார்க்கணும்
பழகி வைக்கணும்
பசுவை ஆமாம் பக்குவமாக

அக்கறையோடே பகலும்"

எனப் பசுவின் பெருமையை எழுதியுள்ளார். எஸ்.வி. வெங்கட்ராமன் பாடியுள்ளார்.

ஓர் இரவு

'ஓர் இரவு' இதே ஆண்டில் வெளிவந்த படம். இதில் கவிராயர்,

"என்ன உலகமடா - இது
ஏழைக்கே நரகமடா
தன்னலப் பேய்களுக்கே - இத
தங்கச் சுரங்கமடா"

என்று ஏழ்மையின் கொடுமையை விவரிக்கிறார். இது அனைத்து மக்களின் நாவுகளிலும் அபிநயித்தது. அண்ணாவின் கதை வசனம். ப. நீலகண்டனின் இயக்கம் ஆகியவை படத்தைப் பெருமை படுத்தியது.

விஜயகுமாரி

இது 1950இல் வெளிவந்த படம். இதில் கவிராயர் எட்டு பாடல் களைப் எழுதியுள்ளார். இப்பாடல்களுக்கு சி ஆர். சுப்பாராயன், சிதம்பரம் ஜெயராமன் இருவரும் இணைந்து இசை அமைத்தனர்.

"கொண்டாடும் சுபதினமே இன்று நாம்
கொண்டாடும் சுபதினமே"

"கீதானந்தம் பேரின்பம்
சங்கீதானந்தம் பேரின்பம்"

"கற்பனை கலைஞன் கருத்தினிலே - நிதம்
கலங்கிடும் பலவித கவலையுண்டாமோ?"

"உபமான உப்மேயமே"

"அழகாக நீயாடு கலைமாமணி"

"பன்றிமலை பனிமாமலை
பவழமலை பழனிமலை எங்கமலை"

"பொழுது விடிஞ்சா ராஜாராணி"

"காட்சி யாவையும்

கலைஞன் ஆட்சியே''

என்பவை அப்பாடல்களாகும். இவற்றில் குறத்திப் பாட்டு பிரபலம். கே.என்.தண்டாயுதபாணிபிள்ளைதான் நடன இயக்குநர். கதை வசனம் எழுதி ஏ.எஸ்.ஏ. சாமி இயக்கியிருந்தார். பாடல் பிரபலமான அளவு படம் ஏனோ ஓடவில்லை.

மணமகள்

இது 1951இல் வெளிவந்த படம். இதில் 'நல்ல பெண்மணி' என்ற பாடல் மிகவும் பிரபலம் ஆயிற்று. இப்படத்தின் பாடல்களைக் கவிராயரும் வசனத்தைக் கலைஞரும் எழுதினர். இதனால் படம் சிறப்பாகப் பேசப்பட்டது.

இப்படத்தில் கலைவாணருக்கு மெய்கண்டார் என்னும் குணச்சித்திரப் பாத்திரம் இதில் இவர் பாடிய மெய்கண்டார் பாட்டு மாகவும் பிரபலமாயிற்று.

''சுதந்திரம் வந்ததுன்னு
சொல்லாதீங்க சொல்லிச்
சும்மா சும்மா வெறும் வாயை
மெல்லாதீங்க''

என்று சி.ஆர்.சுப்பாராயன் இசையில் கலைவாணரே பாடினார்.

''ஆயிரத்தி தொளாயிரத்தி
அம்பது அறுபது இந்நாடாம்
ஆடும் எங்களை ஆதரிக்க வேணும்
அறிஞர் எல்லோர்க்கும் வணக்கம்.''

என்றும் ஒரு பாடலைக் கலைவாணருக்காக எழுதினார். இது ஓர் இசை நாடகம்.

''ஆனா விலாசந்தானப்பா உலகில் பெரியது
அதற்கிணையானது வேறேதப்பா''
''அன்பே கடவுள் என்பதெதனாலே-அதில்
ஆத்ம சக்தி இன்பம் இருப்பதாலே''
''யாகாவாராயினும் நாகாக்க''

எனும் பாடல்களையும் எழுதியுள்ளார்.எல்லாம் கலைவாணரால் பாடப் பட்டன.

''பொதுக் கூட்டங்களுக்குப் போறதும்
பூமாலை வாங்கறதும் -நீங்க
புகழைத் தேடுவதும்-வீட்டில்
பெண்டாட்டி புள்ளே திண்டாட்டப்படுப்
புவ்வாவுக்குச் சாகிறதும்

நல்லால்லே நல்லால்லே நல்லால்லே"

என்ற பாடலையும் கலைவாணர் பாடினார்.

"எல்லா இன்பமயம்-புவிமேல்
இயற்கையினாலே இயங்கும் எழில்வளம்"

"நல்ல பெண்மணி-மிக
நல்ல பெண்மணி-தாய்
நாட்டு நாகரீகம் பேணி
நடப்பவள் எவளோ அவளே
நல்ல பெண்மணி"

எனும் பாடல்களையும் இப்பாடத்தில் கவிராயர் எழுதியுள்ளார்.

"இரு காதலர் மகிழ்ந்தே கொண்டாடு
உறவே ஆனந்த எழில்"

"கானம் ஞானம் கலந்து
கொஞ்சும் காலமிதே"

"திறந்த கூட்டைத் துறந்தும் கிள்ளை
பறந்திட வசதியில்லை"

எனும் பாடல்களும் குறிப்பிடத் தக்கவை.

மர்மயோகி

1951இல் இது வெளிவந்தது. எம்.ஜி.ஆர். கதாநாயகன் இப்படத்துக்காக "நம்ம கழுதை மிக நல்ல கழுதை, நாட்டுக் கழுதை போல நாகரீகமில்லை, வாட்டசாட்டம் உண்டு" என்று தொடங்கும் பாடலை கவிராயர் எழுதிக் கொண்டிருந்தார். இதற்கு அடுத்த வரி வரவில்லை.

அப்போது அப்பக்கமாக வந்த நாடக நடிகர் ஏ.கே காளீஸ்வரனிடம் " குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்" என்று கேட்டார் அதற்கு அவர் "எல்லாக் கழுதையும் குதிரையைப் போல ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். மூக்குமட்டுந்தான் வெள்ளையாக இருக்கும்" என்றாராம். உடனே உடுமலையார் பிடித்துக் கொண்டு

"வாட்ட சாட்டம் எல்லாம் உண்டு
மூக்கு மட்டுந்தான் வெள்ளை"

என்று எழுதினார்.அதோடு திரைப்படத்தில் டைட்டில் போடும் போது

இப்பாடலை எழுதி உதவியது ஏ.கே.காளீஸ்வரன் என்று போடும்படி செய்தார். இப்பாடல் பெரிதும் வரவேற்பு பெற்றது என்பதும் கவனிக்கத் தக்கது. கவிராயரின் உயர்ந்த பண்பு இதன் மூலம் வெளியானது. இப்பாடலுக்காகத் தயாரிப்பாளர்கள் ஏற்கெனவே கொடுத்த சம்பளத் தோடு சிறப்பு செய்ய விரும்பினர். அதனால்,ஒரு வென்பட்டு வேஷ்டியைக் கொடுத்து இரண்டு கைகளாலும் பிடித்துக் கொள்ளச் சொல்லி,திரையரங்க வசூலை இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளிப் போட்டார்கள்.கிட்ட தட்ட எட்டாயிரம் ரூபாய் வரை இருந்ததாம். இப்படத்தில் இசை அமைந்தவர் சி.ஆர்.சுப்பாராமன். இதில்

> **''தில்லாலங்கடி தில்லாலே**
> **தேசம் போற போக்கப்பாத்தா**
> **லேசாக் கூட நல்லால்லே**
> **நாடோடி நடன மாது**
> **ராஜாங்கத்தைக் கொடுத்துட்டா''**

என்ற பாடல் மிகவும் பிரபலம் ஆனது.

> **''கழுதயிலே ரெண்டுவிதம்'**
> **நல்லதுண்டு கெட்டதுண்டு''**

என்றும் ஒரு பாடல் எழுதினார்.

> **''உழுது வெதச்ச உழைப்பாளி**
> **உளவில் லேங்குறா-கையில்**
> **பணமில்லேங் குறா!''**

என்று பாட்டாளியின் சிறப்பைப் பாடியுள்ளார். இதில்

> **''பாட்டாளியை வளர்க்கனும் நல்ல**
> **படிப்பாளியை மதிக்கனும்**
> **பண்டம் மாற்றிப் புசிக்க ஜனங்கள்**
> **பகைமை நீங்கி வாழனும்''**

என்ற வரிகள் அவரது கொள்கையின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன.

வனசுந்தரி

'வனசுந்தரி' என்ற படம் 1951-ல் வெளிவந்தது.இதற்காக 10 பாடல்களைக் கவிராயர் எழுதியுள்ளார்.

> **''மொழிமேலே விழி வைத்தே**
> **முடிமன்னர் ஆண்ட தமிழ் நாடு''**

எனத் தமிழ்நாட்டு பெருமை பற்றி ஒரு பாடல் எழதினார்.

> **''பொழுது விடிஞ்சா ராஜா ராணி- நாம்**
> **பூமியறிய புருஷன் நீ,மனைவி நான்''**

"சொந்தமாக நெனச்சு நானும்
தொட்டுப் பார்த்தேன்"

என்று இரு காதல் பாட்டுகளை எழுதினார்.

"பூ...பூவோ மணம் வீசும் புதிசான பூவு
பொம்பள தலையில் வச்சா
புருசன் வாடை பிடிக்கும் பூ"

என ஒரு பூக்காரிப் பாட்டை எழதினார்

"பன்றிமலை பனிமாமலை பவழமலை
பழனிமலை எங்க மலை"

என்பது ஒரு குறவஞ்சியின் குறிசொல்லும் பாட்டு.

டி.கே.பட்டம்மாள் பாடிய,

" நாடு செழித்திடவும் உள்ளமே நாடு
நல்ல மழை பெய்யவும் நலமே தேடு"

என்ற பாடலைப் பாடினார்.

" நானே மகாராணி மகாராணி இந்த
நாடாளும் யுவராஜ மோகினி"

என்ற பாடலை எஸ்.வரலட்சுமி பாடியுள்ளார். பிற பாடல்களை டி.ஏ.மதுரம், பி.ஏ.பெரிய நாயகி, கே.வி.ஜானகி, பி.லீலா, சின்னப்பா, ராஜாகுமாரி,என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் பாடினர்.

ஸ்திரி ஸாகஸம்

1951இல் 'ஸ்திரி ஸாகஸம்' என்றொரு படம் வந்தது. இதில் கவிராயர் "காய்ச்சல் குளிரு கண்ணுவலி காதுவலி காமநோய் நாநூத்து நாப்பத்தெட்டுக்கும் மருந்தோ மருந்து" என்று பாடல் எழுதினார், மருந்து விற்கும் சிங்கிக்காக. அத்துடன் மொத்தம் 15 பாடல்களை எழுதியிருந்தார்.

"கலைகளின் மாமணி
கற்பின் உயிர் மானினி
நம் பாரத பெண்மணி"

"உன்னைத்தான் பெண்ணே
உன் கண்ணில் பார் என்னை"

"நீதானல்லால் ஆதாரம் யார்

"பாற்கடல் தனிலே
பாம்பின் மீதிலே"

"ஒன்றானால் துன்பம் - மனமே
ஒன்றானால் துன்பம்"
"காதல் கலையில் இந்த மேதினிதனில்"

"அன்போடும் ஜீவ சஞ்சீவி"

"ஆனந்தமே ஆகும் பேரானந்தமே
இதுவே ஆனந்தமே"

என்பவை குறிப்பிடத் தகுந்த பாடல்கள்.

பராசக்தி

"பராசக்தி படத்திற்குப் பாடல்கள் எழுதியவர் உடுமலை நாராயணகவி. இப்போது (1952) அவர் அதிகமாகப் பாடல்கள் எழுதுவதில்லை. காக்காய் இனம் தன் இனத்தை ஒற்றுமையாகக் கரைந்து அழைத்தச் சேர்ந்து சாப்பிடுகிறது. அதைக் கூட மனிதர்களாகிய நாம் செய்வதில்லை' என்கிற அற்புதமான கருத்து அமைந்த "கா...கா . கா" என்ற பாட்டை எழுதினார். இந்தப் படத்தின் மூலம் அந்தப் பாட்டு பிரபலமாகியது" என்பார் ஏவி.எம். (எனது வாழ்க்கை அனுபவங்கள், ப.121)

புத்தனேரி சுப்பிரமணியன் இந்தப் பாட்டை எழுதியவர் கலைஞர் மு.கருணாநிதி என்று மறுத்து எழுத "கா...கா...கா" பாடலை எழுதியவர் உடுமலை நாராயண கவிதான் என்று ஏவி.எம். சரவணன் உறுதியாகச் சொன்னார். அதோடு "தேசம் ஞானம் கல்வி" என்ற பாடலையும் எழுதியதைச் சுட்டிக் காட்டினார். (ப.169)

முதலில் உடுமலையார் குணசேகரன் பரோபகாரச் சிந்தனை பற்றி ஆடிப் பாடுவதாக வேறு ஒரு பாடல் எழுதி இருந்தார். அது,

"நான்கண்ட மனிதன் - இந்த
நாட்டின் கண்போலே - இன்று
நாட்டின் கண்போலே
ஊன்கண்டு கரைந்த காக
உறவுத்தேர் விவேகி
உலகம் நன்றாய் வாழ
ஒன்றே எண்ணும் உயர்ந்த தியாகி"

என்று தொடங்கியது. தயாரிப்பாளருக்கு இதில் திருப்தியில்லை. "இதில் உங்கள் பாணி இல்லை. கலைவாணரை நினைத்துக் கொண்டு வேறு எழுதுங்கள்" என்று பி.ஏ. பெருமாள் அவர்கள் சொல்லவே "கா...கா...கா" என்ற பாடலை எழுதிக் கொடுத்தார்.

பராசக்தியில் கலைஞர் மு.கருணாநிதியின் வசனம் சிவாஜி கணேசனின் நடிப்பு கவிராயரின் பாடல் மூன்றும் பேசப்பட்டது. சி.எஸ். ஜெயராமன் குரலில் கா...கா...கா... பாடல் காதுகளில் எல்லாம் கரைந்தது.

"எச்சிலை தனிலே எறியும் சோத்துக்குப்
பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே
இளைச்சவன் வலுத்தவன் இனச்சண்டை
இன்னும் எத்தனையோ இந்த நாட்டிலே"

என்ற கவிராயரின் வரிகள் கலைஞரின் வசனத்தோடு கைகோர்த்து சமூகத்தின் அவலத்தைச் சாடிற்று.

அதே படத்தில் இடம்பெற்ற,

தேசம்ஞானம் கல்விஈசன் பூசை எல்லாம்
காசுமுன் செல்லாதடி - குதம்பாய்
காசுமுன் செல்லாதடி"

என்ற பாடலும்,

"ஓ...ரசிக்கும் சீமானே வா"

என்ற பாடலும் திசைதோறும் தெறித்தன.

ராணி

1952-இல் 'ராணி' என்றொரு படம். ராணியும் விஜயனும் பாடுவதாக ஒரு டூயட் பாடலை எழுதினார்.

"சமரசம் நிலைபெறும் தவழும் மென்மேலே
சரசமெனும் வழியால் சுகமே நாமே காணும்"

என்ற இப்பாடலைப் பானுமதி பாடினார்.

"சீப்பு சிணுக்கிணி சிமிளி
சீப்பு சிமிளி பொம்மைகள்
சில்லறை சீமான்
காப்பு வளையல் கண்ணாடி
வாய்யா வாம்மா"

என்ற வியாபாரப் பாடலையும் பானுமதி குழுவினர் பாடினர். "உள்ளே ஒண்ணு வெளியே ஒண்ணு உலகம் இதுதாங்க" என்ற பாடலும் குறிப்பிடத் தக்கது.

அபலை அஞ்சுகம்

இதே ஆண்டில் 'அபலை அஞ்சுகம்' என்ற படம் வந்தது. இதில்,

"நல்வழிலே நடந்தாத் துன்பம் வந்தாலும்

இன்பமாய் மாறும் பின்னாலே''

என்று நம்பிக்கை தொனிக்கும் பாடல் ஒன்றை எழுதினார்.

பெண்

1952-இல் 'பெண்' என்ற படத்தில் கவிராயர்,

''வாள் முனையில் கத்தியினால்
உலகை யாளுவோம் - இதன்
வலிமையினால் பகையை வீழ்த்தி
வாகை சூடுவோம்''

என்ற பாடலை எழுதினார்.

''எளியோர் மனம்பாடும் பாட்டிலே
எழும் ஓசையாம் தாலாட்டிலே''

என்று பிச்சைக்காரன் பாடலை எழுதினார்.

பணம்

இந்த ஆண்டில் வெளி வந்த இன்னொரு படம் இது

''தீனா மூனா கானா எங்கள்
தீனா மூனா கானா
அறிவினைப் பெருக்கிடும்
உறவினை வளர்த்திடும்
பகுத்தறிவோடு நாட்டினர் வாழ
திருக்குறள் தந்தார் பெரியார்
வள்ளுவர் பெரியார்''

என்று ஒரு பாடல் எழுதினார். இது திருக்குறள் பிரச்சாரம் மட்டுமல்ல; தி.மு.க பிரச்சாரமும் கூடத்தான்.

''எங்கே தேடுவேன் பணத்தை
எங்கே தேடுவேன்''

என்றும் ஒரு பாடல் எழுதினார். இரண்டும் பிரபலம் ஆயின.

தேவதாஸ்

1953-ல் 'தேவதாஸ்' படத்தில் எழுதிய,

''துணிந்தபின் மனமே
துயரம் கொள்ளாதே
சோகம் பொல்லாதே''

பாடலில் இடம் பெற்ற வரிகள் கல்வெட்டுக்கள் ஆயின. இதனை கண்டசாலா பாடினார்

சி.ஆர். சுப்பராமன் இசையில் இப்பாடல் நாடு முழுவதும் எதிரொலித்தன. நாகேஸ்வரராகவும் சாவித்திரியும் 'உயிரைக் கொடுத்து' பாடல்களுக்கு உயிரூட்டினர்.

மருமகள்

1953-இல் 'மருமகள்' என்றொரு படம். இதில் கவிராயர் சில பாடல்களை எழுதினார்

> **"சின்ன சின்ன வீடுகட்டி**
> **சிங்கார வீடுகட்டி**
> **ஒண்ணாக ஆடினோம் முன்னாலே**
> **நமது சொந்தம் இந்நாளில் லோதோ பொன்னாலே"**

என்ற பாடலை பி.ஏ. பெரிய நாயகியும், ஏ.எம்.ராஜாவும் பாடினர். இவர்கள் இதில்,

> **பேசாத மவுனம் ஆமோ? என் கிளியே**
> **பிழையேதும் நான் செய்தேனோ**

என்றும் இன்னொரு பாடலைப் பாடியுள்ளனர்.

> **"சின்ன சின்ன வீடுகட்டி**
> **சிங்கார வீடுகட்டி**
> **பொண்ணு மாப்பிள்ளை**
> **வச்சு ஆடுவோமே"-**

என்று சிறு மாற்றங்களோடு ஜிக்கியும் ஏ.பி. கோமளாவும் பாடினர் இதைத்தவிர,

> **"ஓ...ஓ...நீதான் என் சொந்தம்**
> **ஓ...ஓ...நினைவில் நீ இன்பம்**
> **காதல் நிலையே பேரின்பம்"**

> **"நான் நெனைக்கிற மாதிரி எல்லாம்**
> **உனக்கு இருக்குது"**
> **"ருமானி மாம்பழம் ரூபந்தான் மாறிவந்தது"**

> **"லாலி சுபலாலி காதலர் ஜாலி வெகு ஜாலி"**

என 9 பாடல்கள் எழுதினார். அவற்றில் "ஆணுக்கொரு பெண்பிள்ளை" என்பது நெடும்பாடல்.

சொர்க்கவாசல்

இது நாடகமாக இருந்து திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டது கே.ஆர். இராமசாமி, பத்மினி நடித்தனர் இது 1954-இல் வெளி வந்தது.

ஏ. காசிலிங்கம் இயக்கியிருந்தார். உடுமலை நாராயணகவி இதற்குப் பாடல்களை எழுதியிருந்தார். சி.ஆர். சுப்பராமன் இசையமைத்தார். இவருக்கு உதவியாக இருந்தவர் விஸ்வநாதனும் ராமமூர்த்தியும். இப்படம் பாடல்களின் சிறப்புகளுக்காகவே சிறப்பாக ஓடியது என்பர்.

"ஆத்திகம் எது? நாத்திகம் எது?
அறிந்து கொள்வீரே"

என்று ஒரு பாடல் எழுதினார். இதனைத் தணிக்கைக் குழு அனுமதிக்க மறுத்துவிட்டது. இதனால் படம் வெளி வருவது தாமதம் ஆனது. அண்ணாவின் ஆலோசனைப்படி "ஆகும் நெறி எது? ஆகா நெறி எது?" என்று மாற்றி எழுதித்தந்தார். படம் வெளியாகியது. 1967-ல் அண்ணா ஆட்சிக்கு வந்ததும் மீண்டும் "ஆத்திகம் எது? நாத்திகம் எது?" என்ற வரியைச் சேர்த்துக் கொண்டனர்.

"ராஜாமகள் ராணி – புது
ரோஜா மலர் மேனி
பேஷான ஒரு மாமி
வரப்போறாள் பாரு நீ"

"கன்னித் தமிழ்ச் சாலையோரம் சோலையிலே
கவிதைக் கனிகள் உண்ணும் பறவைகளே
தென்னவர் மூவேந்தராம் தமிழ்வளர்த்த
சேர சோழ பாண்டியனைப் பாடுங்களே"

எனும் பாடல்களைக் கே.ஆர். ராமசாமி பாடினார்.

1954-ல் வெளியான 'சொர்க்கவாசல்' படத்தில் தான் எழுதிய பாடல்களின் வரிகள் மூலம் சொர்க்கத்தை வரவழைத்தார் என்பார் நெல்லை ஜெயந்தன்.

23.2.2001-ல் கவிராயரின் மணிமண்டபத்தைத் திறந்து வைத்துப் பேசிய கலைஞர் கருணாநிதி தமது உரையில் 'சொர்க்கவாசல்' படப்பாடல்கள்தான் கவிராயருக்கு மிகச் சிறப்பாக அமைந்ததென்று சுட்டிக் காட்டினார்.

"எங்கே சொர்க்கம் எங்கே சொர்க்கம்
என்றே தேடுறீர்! ஏமாந்தே ஓடுறீர் அது
அங்கே இல்லை இங்கே உண்டு
அன்பால் நாடுவீர். ஒன்றாய் கூடுவீர்"

"நிலவே நிலவே ஆடவா
நீயன்புடனே ஓடிவா
மலராம் அரம்பின் எழில்மேவும்
மரகத மணியுடன் ஆடவா"

என்ற பாடல்களும் பிரபலம். இவற்றையும் கே.ஆர்.ராமசாமியே பாடினார்.

"மாவொடு தழுவும் மலர்க்கொடி போலே
மாது நான் மருவ முடியாதோ"

என்றும் ஒரு பாடல் எழுதினார். இது காதல் ரசம் மிக்கது.

"வீரம் செறிந்த முகம் சுடர்போலே - அருள்
மேவும் இரண்டு விழிமலர் போலே"

என்று தமிழரின் வீரம் பற்றி ஒரு பாடல் எழுதினார்.

"வாழிய மாநிலம் வாழியவே - தமிழ்
மாண்பெழில் நூல்முறை வாழியவே"

என்ற வாழ்த்துப் பாடலோடு மொத்தம் 18 பாடல்கள் இயற்றினார்.

ரத்தக் கண்ணீர்

1954-ல் வெளி வந்தது.

"மாலையிட்ட மங்கையாரோ? என்ன பேரோ?
அந்த மானினியாள் எந்த ஊரோ?"

என்றும்

"பெண்களே உலகப் பெண்களே
பிழைகள் செய்பவர் ஆண்களன்றோ
அழிவை அடைபவர் நீங்களன்றோ"

"கதவைச் சாத்தடி - கையில்
காசில்லாதவன் கடவுள் ஆனாலும்"

என்ற பாடல்களை இயற்றியுள்ளார்.

இவ்வாறு இவர் எழுதிய 3 பாடல்களும் மிகவும் பிரபலம் ஆயிற்று. இப்படத்தின் பலமே பாடல்களும் வசனங்களும்தான். பாடல்களுக்குக் கவிராயரே பொறுப்பு. கிருஷ்ணன்-பஞ்சு இயக்கம்.

தூக்குத் தூக்கி

1954-இல் 'தூக்குத் தூக்கி' வெளி வந்தது. இதில சிவாஜி கணேசன் சிறப்பாக நடித்திருந்தார்.

"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்
கொம்பேறித் தாவும்
குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்"

என்ற பாடலை டி.எம். சௌந்திரராஜனும் சுசீலாவும் போட்டி போட்டுக் கொண்டு பாடினர்.

"ப்யாரி நிம்மள் மேலே நம்கி மஜா"

என்ற பாடலைச் செல்லமுத்துவும் ராஜேஸ்வரியும் பாடினர்.

"ஆணும் பெண்ணை அழகு செய்வது
ஆடை ஆடை மேலாடை அதை
அடுத்தவர் பார்த்து ஆசைப் படுவதும்
ஆடை ஆடை பட்டாடை"

என்ற பாடலை சௌந்திரராஜன் பாடினார்.

இவ்வாறு ஐந்து பாடல்களைக் கவிராயர் எழுதினார். இவை பெரிதும் பிரபலம் ஆயிற்று.

நல்லகாலம்

1954-இல் 'நல்ல காலம்' என்ற படம் வந்தது இதில்

"சும்மா இருக்காதுங்க - அது
சும்மா இருக்காதுங்க"

என்று ஒரு பாடல் எழுதியுள்ளார்

சுறுசுறுப்புள்ளவன் கையும் காலும்
என்ன செய்யும்?
நோண்டும் தோண்டும் தாண்டும்
எப்படி?
பக்கத்திலே உள்ளவனை நோண்டும்
கடப்பாரை எடுத்துக்கிட்டுத் தோண்டும்
தக்கதொரு வாலிப பருவத்திலே
தைரியமாகவே சுவரெட்டித் தாண்டும்

என்று அந்தப் பாடல் நீண்டு செல்லும்.

மனோகரா

இதுவும் அதே ஆண்டில் வெளிவந்து சக்கைப்போடு போட்டது. ஆனால் அத்தனையும் வசனங்களுக்காக. இதற்காக கவிராயர் ராஜாவும் பெரியநாயகியும் பாடிட,

"சிங்காரப் பையங்கிளியே பேசு-செந்
தமிழ்த் தேனை அள்ளிஅள்ளி வீசு".

என்ற பாடலை எழுதினார். இது மிகவும் பிரபலமானது. பின் "வசந்த விழா மிக வசந்தவிழா"என்னும் ஒரு பாடலை எழுதினார். தயாரிப்பாளர் என் சேதமசுந்தரம் செட்டியார் சிறந்த கலாரசிகர். இப்பாடலை ஓஹோ என்று புகழ்ந்தார். தன் அலுவலக மேலாளரிடம் "பையில் எவ்வளவு இருக்கிறது?" என்று கேட்டு அதனுள்

ஒன்பதாயிரத்து சொச்சம் பணத்தையும் கவிராயருக்குக் கொடுத்து விட்டாராம்.

மங்கையர் திலகம்

'மங்கையர் திலகம்' என்ற படம் 1955-இல் வெளி வந்தது. இது 'நல்ல பெண்மணி' என்ற பாடலுக்கு எதிரான பாடல் டி.வி.ரத்தினம் பாடுவதற்காக,

"கெட்ட பெண்மணி-புத்தி
கெட்ட பெண்மணி-தன்
இஷ்டம் போல் அலைந்து வாழ்வை
அழிப்பவள் எவளோ"

என்று எழுதினார்.

"அதிகப் பேச்சுக்காரி பெரும்
ஆணவக்காரி"

என்று பாடல் தொடரும். இதனை எஸ். இ. கிருஷ்ணன், எஸ்.கே. காந்தா, கே. ஆர். செல்வமுத்து, பென்னுசாமி, ஆகியோர் பாடினர்.

செல்லப்பிள்ளை

இதே ஆண்டில் 'செல்லபிள்ளை ' வெளிவந்தது. இதில் கவிராயர்,

"நாடு நடக்கிற நடையிலே
நமக்கே ஒன்னுமே புரியலே
நாகரிகத் தினுசுகளாலே
நல்லது கெட்டது தெரியலே"

என்ற பாடலை எழுதினார். அத்துடன்,

"போடோணும் குல்லாப் போடோணும்
நாம் நல்லா இருக்க நாடு மதிக்க"

"ஆனந்தம் இங்கே இருக்குது பாருங்க
கொஞ்சம் பாருங்க கண்ணாலே பாருங்க-அது
வேறு எங்கோ இருக்குதுன்னு தேடாதிங்க

என்றும் 3 பாடல்களை எழுதியுள்ளார். குல்லாப் பாட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. தங்கவேலு 'அவதாரம்' என்ற பாத்திரத்தில் இதைப் பாடினார்.

நீதிபதி

1955-இல் 'நீதிபதி'என்ற படத்துக்காக இவர்,

"வருவார் வருவாரென்று பார்த்தேன்
வழிமேல் விழிவைத்து உடல் வேர்த்தேன்"

என்று எழுத இதனைக் கே.ஆர்.ராமசாமி குழுவினர் சிறப்பாக பாடினர்.

"உண்மையான உறவு முறை உணர்ந்திடாமலே
உறவாடுதுபார் உள்ளமிரண்டும் பாசத்தினாலே"

என்று உறவு பற்றி பாடல் எழுதியுள்ளார்.

"ஜிலுஜிலு வென ஜொலிக்கும் மிட்டாய்
திங்காது உங்கர்த திங்கிர்த மிட்டாய்"

என்பது மிட்டாய் விற்கும் பாட்டு

"மாதவி வீடென்பது இதுதானோ
மாலையிட்டாள் வீடு இதுதானோ
தாம்பூலம் தந்தாள் வீடு இது தானோ"

என்ற ஒரு பாடலைச் சோகச் சுவை சொட்டச் சொட்ட எழுதியுள்ளார்

"தாயும் சேயும் பிரிந்ததனைப்
பார் சதியினாலே
சன்மார்க்கம் இல்லாத
கொடியவன் தன்னலத்தாலோ"

என்ற ஒரு பாடலைத் தத்துவச் சாயலோடு எழுதி உள்ளார் ஆக ஐந்து பாடல்கள் இவரால் இப்படத்தில் எழுதப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

'டாக்டர் சாவித்ரி:1955-இல் வந்த படம்.இதற்காக,

"காசிக்குப் போனா கருவுண்டாகு மென்ற
காலம் மாறிப் போச்சு-இப்ப
ஊசியைப் போட்ட உண்டாகுமென்ற
உண்மை தெரிஞ்சு போச்சு"

என்று ஒரு பாடல் எழுத அதனைக் கலைவாணர் பாடினார் அவரே

"வாதம் பண்ணக் கூடாது-பிடி
வாதம் பண்ணக் கூடாது
பெண்கள் வகையில்லாப் பொருட்கள் வேண்டிப்
புருஷனிடம் எப்போதும்"

என்று பாடல் இன்னொன்றைப் பாடினார்.

"தென்பழனி மலைமேல் வசிப்பவனே
திருப்பதி மலைமேல் இருப்பவனே"

என்று ஒரு குரங்காட்டிப் பாடல் எழுதினார்

"மூலை வீட்டுக்குள்ள முடங்கிக் கிடக்கிற
முனியப்பா! ஒரே முனியப்பா
வேலைக் காரி வந்த விஷயம் கேளுசகோதரா"

என்று தெலுங்கு கலந்த பாடலை எழுதினார்.

"ஆட்டத்திலே பலதினுசுண்டு
பல் பலே பல் பலே பலே பல் (ஆ)
அதையறியாதவன் மண்டு"

என்று ஆட்ட வகைகளைப் பற்றி ஒரு பாடல் எழுதினார்.

முதல் தேதி

1955-இல் இருந்தத் திரைப்படம் வெளிவந்தது. இதில் கலைவாணருக்காகக் கவிராயர் எழுதிய ஒரு பாடல் மிகவும் பிரபலம் ஆனது.

"ஒண்ணுல இருந்து இருபது வரைக்கும்
கொண்டாட்டம் -இருபத்
தொண்ணுலே இருந்து முப்பது வரைக்கும்
திண்டாட்டம்"

என்று பாடல் தொடங்கி,

தென் பழனி திருப்பதிக்கும்
சீரங்கம் போவதற்கும்
சில்லறையைப் போட்டு
வைப்பார் தேதி ஒண்ணிலே
அன்புடனே போட்டு வைத்த
உண்டியல் வாயைக் கொஞ்சம்
அகலமாக்கி ஆட்டிப் பார்ப்பார்
இருபத்து ஒண்ணில,
சினிமா டிராமாக் காட்சிகளுக்கு
டிக்கெட் கிடைக்காது ஒண்ணிலே
தியோட்டர் காலி ஆள் இருக்காது
தேதி இருபத்தொண்ணிலே
சிகிரெட்டு பீடி வெத்தில பாக்கு
விற்பனை அதிகம் ஒண்ணிலே
தெருவில் எறிந்த பீடிக்கு
கிராக்கி வந்திடும் இருபத்தொண்ணிலே

என்று எதார்த்தமாக நீளும்.

'காவேரி'

1955-இல் வெளிவந்த படம். இதில் கவிராயர் 12 பாடல்களை எழுதியுள்ளார்.

"காவேரித் தண்ணீர் பட்டால்

கன்னியர் மேனி தங்கம் ஆகும்''

''சந்தோஷங் கொள்ளாமே
சாப்பாடும் இல்லாமே
தாய்நாடு திண்டாட்டம் போடுதே''

''மஞ்சள் வெயில் மாலையிலே
வண்ணப்பூங்காவிலே
பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சம்
பரவசம் பார்!''

''அன்பே என்னாருயிரே
அங்கு நிற்பதேனோ''
''மனதினில் நான் கொண்ட மாப்பிள்ளை வாய்த்தார்
வாழ்க்கையில் வேறோர் பாக்கியம் உண்டோ?''

''ஏழெட்டு நாளாகத் தான் ஏமாமா-நீ
என்னை விட்டு எங்கே போனே வாமாமா''
''என் சிந்தை நோயுந் தீருமோ
தீயன் சூழ்ச்சி மாறுமா
ஸ்நேகம் ஒன்று சேருமா?''

''சரியில்லே உலகம் சரியில்லே
தெரியாமல் எதையும் எவரும்
செய்கிறதும் சரியில்லே''

''காலை தூக்கி நின்னாடும் தெய்வமே''

''சிந்தை அறிந்துவாடி
செல்வக் குமரன்''
எனும் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

அலிபாபாவும் நாற்பது திருடர்களும்

இதன் இந்தி மெட்டுகளுக்குப் பாட்டெழுதும் வாய்ப்பு உடுமலைகவிக்குக் கிடைத்தது. அவர் அந்த வாய்ப்பை மருதகாசிக்குக் கொடுத்து விட்டார். ஒரே ஒரு பாடல் மட்டும் தான் அதில் எழுதினார். பாட்டுகளை எழுதிமுடித்தவுடன் ஒப்பந்தப்படி 25000ரூபாய் உடுமலையாருக்குத் தரப்பட்டது. அத்தொகையை மருதகாசியிடம் தந்து

உனக்கு எவ்வளவு வேண்டுமோ எடுத்துக் கொள் என்று சொன்னாராம்.இது 1956-ல் நடந்தது.

ரங்கோன் ராதா

இதே ஆண்டில் வந்த இந்தப் படத்தில் கவிராயர்

"என்றுதான் திருந்துவதோ நன்றி கெட்ட
ஆடவர் உலகம்-இனி
என்றுநான் திருந்துவதோ
தொன்றுதொட்டு வந்த மடமை
சொல்ல வெக்கம் ஆகுதையோ
கொடுமை கொடுமை"

என்ற பாடலை எழுதினார். இது பெண்கள் மீது ஆண்கள் செலுத்தும் அத்து மீறல்களையும் அக்கிரமங்களையும் வெளிபடுத்துகிறது. பெண் குலத்துக்காக இப்பாடல் வழக்காடியது;வாதாடியது.

மதுரை வீரன்

1956-இல் எம்.ஜி.ராமசந்திரன் நடித்த படம் 'மதுரை வீரன்'. இதற்காக இவர் எழுதிய,

என்ற பாடலை ஜிக்கியும் லீலாவும் பாடினார்.

"அழகர் மலையானை ஆனை முகத்தானை
கழுகுமலை யானை கதிர்காம வேலவனைத்
தொழுது குறிபார்த்துச் சொல்லுவதும் மாறாதே"

என்று குறிக்காரி பாடலை எழுதினார்.

"குன்றுதோறாடிவரும் குமரவடிவேலன் எங்கள்
குரவர்குலக் கடவுள் துணைக் கூப்பிடுவேணம்மே"

என்று ஒரு குறவர் பாடலை எழுதியுள்ளார்.

"நங்கை தூங்காமல் ஏங்குறாளே
நாவாலேதான் சொல்ல நாணுது"

என்று ஒரு காதல் பாடலை எழுதினார்.

"ஆடல் காணீரோ-விளை
யாடல் காணீரோ-திருவிளை
யாடல் காணீரோ"

என்ற நடனப்பாடல் பத்மினியின் புகழுக்கு மேலும் புகழைச் சேர்த்தது.

"வேலை வேலை என்று ஓலமிட்டு அழுதா
அளைத்தேடியது வீட்டுக்கு வருதா
மூளையோடு நல்ல முயற்சியும் இருந்தா

வேலைக்கேது பஞ்சம் விபரம் புரியுதா''

என்றவர்கள் காலம் கடந்தும் உயிரோடு உலவுகின்றன.

ஆசை

1956-இல் வெளிவந்த இப்படத்தில் கலைவாணருக்காக கவிராயர் ஒரு பாடல் எழுதினார்.

''டிக்கிடி டக்கிடி டக்கிடி டக்கிடி
சல்சலோ சலோ
டிக்கிடி டக்கிடி டக்கிடி டக்கிடி
சலசலோ சலோ
நாலுகால் குதிரை
நல்ல தொரு பாதையில்
நன்றாக நடக்குது ஓடுது
நாகரிகம் அடைந்த
ரெண்டு கால் குதிரை
நல்ல வழியில்
நடக்கத் திண்டாடுது''

என்று கலைவாணர் பாடி ஆடினார். இதில் மனிதனை விட குதிரை சிறந்தது என்ற சுட்டிக் காட்டினார்.

''வித்தியாசம் இல்லாமல் நாலுகால் குதிரை
மேலேற்றி வேகமாய்ச் செல்லும்-எவரையும்
மேலேற்றி வேகமாய்ச் செல்லும்
மேலென்று கீழென்று ரெண்டுகால் குதிரை''

என்று பாடல் முடிந்தது.

'மாதர் குல மாணிக்கம்'

1956-இல் வந்த படம். இதில்,

''டேஞ்சரு-அய்யா டேஞ்சரு
வெரிவெரிடேஞ்சரு வெரி வெரி டேஞ்சரு
உலகினில் மனிதர்கள் நடைமுறை
தவறுதல் டேஞ்சரு''

என்ற ஒரு பாடலைக் கவிராயர் எழுதினார். டி வி.ரத்னமும் ஈஸ்வரியும் பாடினார். இதில் 33 முறை 'டேஞ்சரு' என்ற ஆங்கில வார்த்தையைப் போட்டிருந்தார். எனினும் மக்கள் அதைக் கண்டு கொள்ள வில்லை.

அமர தீபம்

1956-ஆம் ஆண்டில் சிவாஜி கணேசனால் நடிக்கப் பட்டு வெளி வந்தது.

"நாடோடிக் கூட்டம் நாங்க
தில்லேலே லேலோ-நாட்டில்
நல்லது கெட்டது தெரிஞ்சவுங்க"

என்ற இவரது பாடல் பிரபலம். இதனை டி.எம்.சௌந்திரராஜன்,சீர்காழி கோவிந்த ராஜன் ,ஏ.பி.கோமளா,டி.வி.ரத்தினம் ஆகியோர் பாடினார்.

"செந்திருமாதும் கலைமாதும்-சிவ
காமி என்றோதும் மலைமோதும்
சொந்தமுடன் நவராத்திரி நாளன்று
தோன்றிடுவார் ஒன்று சேர்ந்திடுவார்"

என்ற பக்திப் பாடலைச் சுசிலாவும் ரத்தினம் குழுவும் பாடினார். டி.சலபதிராவின் இசையில் பாடல்கள் பிரபலம் ஆயின.

எங்க வீட்டு மகாலட்சுமி

1957-இல் எங்க வீட்டு மகாலட்சுமி என்ற படம் வந்தது. இதில் கவிராயர் 6 பாடல்களை எழுதினார்.

"காரிலே சவாரி செய்யும்
கன்னம் சிவந்த பொன்னம்மா-உன்
கன்னம் சிவந்தது என்ன என்று நீ
எண்ணிப் பார்த்ததும் உண்டுமா?"

என்றொரு பாடலைக் கண்டசாலா பாடினார்.இது உழைப்பின் உயர்வை. உலகுக்கு உணர்த்துவதாக இருந்தது.

"நாட்டுக்குப் பொருத்தம் நாமே நடத்தும்
கூட்டுப் பண்ணை விவசாயம்-பட்ட
பாட்டுக்குத் தகுந்த ஆதாயம்-உண்டு
பழைய கொள்கைகளை விடுவது ஞாயம்"

என்ற பாடலை டி.எம்.சௌந்திரராஜன் பாடினார். இது பொதுவுடைமைச் சமுதாயத்தின் சிறப்பைச் சொன்னது.

"ஆடிப்பாடி வேலை செஞ்சா
அலுப்பிருக்காது-அதில்
ஆணும் பெண்ணும் சேராவிட்டால்
அழகிருக்காது"

என்ற பாடலைக் கண்டசாலாவும் பி.சுசிலாவும் பாடினார். இது காதலின் மகிழ்ச்சியை விவரித்தது.

"பட்டணந்தான் போகலாமடி-பொம்பளே

பணங்காசு தேடலாமடி-நல்ல
கட்டாணிமுத்தே யென் கண்ணாட்டி நீயும்
வாடி பொண்டாட்டி தாயே''

என்ற பாடலைச் சீர்காழி கோவிந்தராஜன் பி.சுசிலாவும் பாடியுள்ளனர். பி.சுசிலா தனியாகப் பாடிய ''தாலேலோ''வும் குறிப்பிடத்தக்கதுதான்

கற்புக்கரசி

1957-இல் கற்புக்கரசி என்றொருபடம். இதில் கவிராயர் ஒரு தத்துவப் பாடலை எழுதியிருந்தார்.

''தத்தக்கா புத்தக்கா நாலு காலு
தானே நடக்கையிலே ரெண்டுகாலு
உச்சி வெளுத்தா மூணு காலு
ஊருக்கு போகையிலே பத்துக் காலு''

என்ற அந்த பாடல் மிகவும் பிரபலம் ஆனது. இதில்

''காயமே இது பொய்யடா-இதில்
கண்ணும் கருத்தும் வையடா
நோயும் நொடியும் வராமல் காத்து''

என்று நுட்பமாக எழுதினார். இது 'காயமே இது பொய்யடா' என்ற பாடலுக்கு எதிரானது.

புதையல்

இது கலைஞர் மு கருணாநிதியின் கதைவசனத்தில் உருவானப்படம். சிவாஜியும் பத்மினியும் இணைந்து இழைந்து நடித்தனர் இவர்களுக்குகாக,

''விண்ணோடும் முகிலோடும்
விளையாடும் வெண்ணிலவே
கண்ணோடு கொஞ்சும்
கலையழகே இசையமுதே''

என்ற பாட்டை எழுதினார். இதனைச் சிதம்பரம் ஜெயராமன் பாடியிருந்தார் அற்புதமாக. இது அன்று 'காதலின்' தேசிய கீதம் ஆயிற்று.

பொம்மைக் கல்யாணம்

1958-இல் 'பொம்மைக் கல்யாணம்' என்ற படம் வந்தது. அதில் கவிராயர்,

''அன்பினால் என்றும் நீங்கள்

ஒன்றாய் வாழனும்-ஓர்
ஆயிரம் காலம் சேர்ந்து
நன்றாய் வாழனும்''

என்ற பாடலை எழுதினார் அத்துடன்,

''கல்யாணம் கல்யாணம்
கண்டுகளிக்கும் கல்யாணம்''

என்றும் ஒரு பாடலை எழுதினார்.

நல்லதீர்ப்பு

இதே ஆண்டில் வெளிவந்த 'நல்லதீர்ப்பு' என்ற படத்தில் கவிராயர் எழுதிய 3 பாடல்கள் குறிப்பிடத்தக்கவை

''முன்னறியும் தெய்வமடா அன்னை பிதா-அவர்
மொழிந்த தெல்லாம் நமக்கு வேதமடா''

''தாயின் மொழி வழியே தந்தை மொழி காத்தான்
தரணியில் ரவிகுல ராமன்''

''தெய்வத்தால் ஆகாது என்றாலும் முயற்சி
மெய்வருத்தக் கூலி தரும் என்பதாலும்-நீ
செய்வன திருந்தச் செய்''

என்ற பாடல்களை டி.எம். சௌந்தரராஜன் சிறப்பாகப் பாடினார்.

அபலை அஞ்சுகம்

1959-இல் வெளியான படம். தயாரிப்பாளர் கவிராயரிடம் 'அமுதும் தேனும் எதற்கு' என்ற பாடலைப் போன்று ஒரு பாடல் இயற்றித் தர வேண்டும் என்று கேட்டார். கவிராயர் சுரதாவைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். சுரதா,

''வெண்ணிலா குடைபிடிக்க
வெள்ளிமீன் தலையசைக்க
விழிவாசல் வழிவந்து
இதயம் பேசுதே''

என்று எழுதினார். பின்னர் இசையமைப்பாளரோடு ஏற்பட்ட தகராறு காரணமாக சுரங்களை எழுத மாட்டேன் என்று போய்விட்டார். எனவே கவிராயர் மீதிப் பாடலை எழுதவேண்டிய நிலை ஏற்பட்டது.

''கொல்லாமல் கொல்லுகிறாய்
கோமள விழியாலே
சொல்லாமல் சொல்லுகிறாய்

சுத்தத் தமிழ் மொழியாலே''

என்று எழுதினார். இதனை டி.ஆர். மகாலிங்கமும், பி.சுசிலாவும் பாடினார்.

''சமானம் மனிதர் பிறவாயில் ஒருமை
என்பதே முறைமை''

என்று சமரசப் பாடல் எழுதி இருந்தார் அத்துடன்

''கிஜிலி கித்தாங்
கிஜிலி கித்தாங்
கிஜிலி கித்தாங்

என்று ஒரு பாடலை எழுத அதனை எஸ்.சி.கிருஷ்ணன், ராகவன், பி.லீலா ஆகியோர் பாடினர்.

மஞ்சள் மகிமை

1959ஆம் ஆண்டில் வெளிவந்த 'மஞ்சள் மகிமை' படத்தில் கவிராயர் ஒரு அருமையான காதல் பாடல்களை எழுதியுள்ளார்

''கோடை மறைந்தால் இன்பம் வரும்-கூடிப்
பிரிந்தவர் சேர்ந்தால் சொந்தம் வரும்
ஓடும் தென்றல் முன்னால் வரும்-இசை
பாடும் குயிலோசை தன்னால் வரும்''

''ஆகாய வீதியில்
அழகான வெண்ணிலா
அலங்காரத் தாரகையோடு
அசைந்துஞ்சல் ஆடுதே
ஆனந்தம் தேடுதே''

என்ற பாடல்கள் மிகவும் பிரபலமாயின

'' மாறாத சோகந்தானோ
யாரோடு நான் செல்வேனோ
வளம் பெறும் காதல்
மலராது போமோ?''

என்ற பாடலையும் கண்ட சாலாவும் பி சுசிலாவும் பாடினர்

''திருப்பதி வெங்கடேசனே-ஒன்னே நம்பி
இருக்கிறான் இந்த தாசனே''

என்று ஒரு சீர்திருத்தப்பாடலையும் எழுதினார்.

''அன்பினால் என்றும் நீங்கள்
ஒன்றாய் வாழனும்''

என்பது போன்று ஏழு பாடல்கள் பாடினார்.

தங்கப் பதுமை

1959-இல் 'தங்கப் பதுமை' வெளிவந்தது. இதில் மங்கையரின் மகத்துவம் பற்றிக் கவிராயர் பாடல் எழுதினார்.

"விழிவேல் வீச்சிலே
கனிவாய் பேச்சிலே
வீரர்தமை வெல்வார்ஒரே மூச்சில்"

என்ற அந்தப் பாடலை ஏ.பி. கோமளா, ஜமுனாராணி குழுவினர் பாடினார்.

"மாண்பதனை நாயகள்
பறைசாற்றி வருவோம்
பெண்ணால் ஆகாததும்
இனிமேல் ஏது"

என்று பெண்ணின் பெருமையோடு முடிந்தது பாடல்

தாய்மகளுக்குக் கட்டிய தாலி

இதே ஆண்டில் 1959-இல் 'தாய் மகளுக்குக் கட்டிய தாளி'படம் வந்தது

"ஒன்றல்ல இரண்டல்ல தம்பி-சொல்ல
ஒப்புமை இல்லாத சுற்புத் தமிழ் நாட்டில்"

என்ற கவிராயரின் பாடலைச் சீர்காழிக் கோவிந்தராஜன் பாடினார்.

"தஞ்சாவூருக்கு பொம்மையைப் பாரடி-அடியாத்தே
சாஞ்சிநிக்கற அழகைப் பாரடி"

என்ற ஆண் பெண் ஏசல் பாடல் ஒன்றை எழுதியுள்ளார்.

"சின்னஞ்சிறு வயது முதல்
சேர்ந்து நாம் பழகி வந்தோம்
இனியொரு பிரிவும் உண்டோ
இன்பம் பெற தடையுமுண்டோ"

என்ற காதல் பாடல் மிகவும் பிரபலம் ஆயிற்று.

'மாமியார் மெச்சிய மருமகள்' இப் படம் 1959-ல் வெளிவந்தது. இதில் எஸ்.சி கிருஷ்ணன்,

"ஒரு பத்து மாதம் உயிர்விந்து நாதம்
சொரூபத்தைக் கொண்டல்லவோ ஞானத்தங்கமே
தூலம் ஒன்றாச்சுதடி"

என்ற பாடலைப் பாடினார். இது கவிராயரால் எழுதப்பட்டது. இவரது,

"பணம்..பணம்..பணம்..பணம்
பணம் பந்தியிலே

குணம்..குணம்..குணம்..குணம்
குணம் குப்டையிலே''

என்றொரு பாடலைச் சீர்காழி கோவிந்தராஜன் பாடினார்.

''வாக்காலே பிறர் வாழ்வைக் கெடுத்தே வாழ்வாரும்
மனத்தாலே கொடுக்க வழிபார்த்தே இருப்பாரும்''

என்ற பாடலையும் எழுதியுள்ளார்.

மாங்கல்ய பாக்கியம்

இப்படத்துக்காகக் கவிராயர்,

''ஒன்றே மாந்தர் குலம் ஒருவனே கடவுள்
என்றே தேருவது அறிவாகும் அது
நன்றே ஆகுமென உணர்ந்திடாரை மக்கள்
என்றே கூறுவது தவறாகும்''

என்று ஒரு பாடல் எழுதினார். இதனைச் சீர்காழி கோவிந்தராஜனும், ரத்னமாலாவும்,ஜமுனா ராணியும் பாடினார்.

காவேரியின் கணவன்

1959-இல் 'காவேரியின் கணவன்' என்றொரு படம் வந்தது. இதில் கவிராயர்,

''வண்ணத் தமிழ் சொர்ணக்கிளி
வாய் திறந்தாள்
வள்ளுவன் சொல்வதெள்ளமுதை
மெல்ல மொழிந்தாள்.''

என்ற பாடலை எழுத எம் எல்.வசந்தகுமாரி பாடினார்.இது வள்ளுவருக்கு வளமை சேர்த்தது. இதில்,

''மன்னும் செவிக்குணவு இல்லாத போது-சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும்-என வோதும்
பொன் எழுந்து ஏடுதனை''

என்னும் திருக்குறளை மேற்கோள்காட்டிப் பாராட்டுவார்

தெய்வப்பிறவி

இப்படம் 1960-இல் வெளி வந்தது இதில் கவிராயர் சில பாடல்களை எழுதினார். சிவாஜிகணேசன், பத்மினி, எஸ்.எஸ்.ராஜேந்திரன் போன்றோர் நடித்தனர்

''அன்பாலே தேடிய என்
அறிவுச் செல்வம் - தங்கம்

அம்புவியின் மீது நான்
அணி பெரும் ஓரங்கம்''

என்ற உறவின் மேன்மையைப் புலப்படுத்தும் பாடலை சி.எஸ்.ஜெயராமனும், ஜானகியும் பாடினர்.

''தன்னைத்தானே நம்பாதது சந்தேகம் - அதற்கு
சந்தர்ப்பம் சூழ்நிலை தாய்தந்தையாகும்''

என்ற பாடலைச் சி.எஸ். ஜெயராமன் பாடினார்.

''தாரா தாரா வந்தாரா
சங்கதியேதும் சொன்னாரா? அவர்
சந்தோஷமாக வந்தாரா - இல்லை
சஞ்சலமாக இருந்தாரா?''

என்ற பாடலும் பிரபலமானது. இதனை ஜமுனாராணி சிறப்பாகப் பாடியிருந்தார்.

''பூத்த முல்லை மலர் தன்னை
பார்த்து மெல்ல சிரித்தாரா
வாய்த்த இவளை மனதில் எண்ணி
மரத்தைக் கட்டிப் பிடித்தாரா''

என்று இப்பாடல் கிண்டலும் கேலியுமாக அமைந்தது.

சவுக்கடி சந்திரகாந்தா

1960-இல் வெளி வந்த படம் 'சவுக்கடி சந்திரகாந்தா' இதற்காகக் கவிராயர்,

''மலர்வன வீதியிலே வசந்த தேரிலே
மோகன ராஜன் வந்தான்
குளிர்மதி குடையாகவே - மகரக்
கொடியாட குயில் பாடவே''

என்ற பாடலை எழுதி பி.சுசிலா சிறப்பாகப் பாடியுள்ளார்.

''உசுரு நம்மகையிலே - நல்ல
கோமான்கள் ஆனாலும் சீமான்கள் ஆனாலும்
சாமான்யமானவர்கள் ஆனாலும் அவுங்க''

என்று கவிராயர் எழுதிய பாடலைத் திருச்சி லோகநாதன் பாடினார்.

ராஜாதேசிங்கு

1960ஆம் ஆண்டில் வெளிவந்த இப்படத்தில் நான்கு பாடல்களை எழுதியிருந்தார்.

''பழனிமலை இடும்பன் குளம் யேஅம்மே-நாங்க

பால வடிவேலர்குலம் பச்சைகுத்தி குறி
சொல்லுவோம்''

''கானாங்குருவி காட்டுப்புறா
வானம்பாடி வக்க தாரா
காடை கவுதாரி மைனா இருக்குதுங்க
வாங்கலையோ வவ்வா நய்னா''

''சரசராணி கல்யாணி - சுக
சங்கீத ஞானராணி மதி வதனி''

''பாற்கடல் அலைமேல் பாம்பணையின் மேலே
பள்ளி கொண்டாய் ரங்க நாதா''

என்பவை அப்பாடல்களாகும். இவற்றை லீலா, சீர்காழி, எம்.எல். வசந்தகுமாரி ஆகியோர் பாடினர்.

பாட்டாளியின் வெற்றி

1960இல் இப்படத்தில் வேணுவின் இசையில் 7 பாடல்களை எழுதினார் கவிராயர்.

''நாகரிகமான ரோட்டு
நாலு பேருகாணும் ரோட்டு
எங்கே போச்சு கோவிந்தா''

என்ற பாடலைச் சீர்காழி கோவிந்தராஜனுக்காக எழுதினார்

''பொண்டாட்டி புருஷனுக்கு
பலமான சொந்தமே''

என்ற பாடலைச் சுசீலா, டி.வி.ரத்னம், ஸ்வர்ணலதா பாடினர்

''அன்ன நடை தனிலே
சின்ன நடைதான் கலந்தே
முன்னாலே போகுதடா
முத்துப் பல்லுச் செல்லக்கண்ணு
நன்னானே நானே''

என்ற சிந்துப் பாடலை டி.எம். சௌந்திரராஜன் பாடினார்.

''சிங்காரப் பொம்மை - என்
சிங்காரப் பொம்மை''

என்ற காதல் பாடலை எஸ்.ஸி.கிருஷ்ணனும், ஜிக்கியும் பாடினர்.

''ஒழவன் முன்னாலதான் இந்த
ஒலகம் சுத்தணுமவன் பின்னாலேதான்''

என்ற டூயட் பாடலை டி.எம். செளந்திரராஜனும் சுசீலாவும் பாடினர்.

"ஹா கமகமகமகம கமங்குது
காட்டுப்பூ ஜவ்வாது"

என்ற பாடலைச் சீர்காழியும் பாடினார்.

அன்புமகன்

1961-இல் வெளிவந்த இப்படத்தில் ஒரு நாடகப் பாடலை எழுதினார்.

"ஒரு ஊரில் ஒரு ராஜா ஒரு ராணி
உன்னைப்போல் அவங்களுக்கும் ஒரு பிள்ளை"

என்று தொடங்கியது. தாய், சேய் உரையாடலாகத் தொடர்ந்தது, பி.சுசீலா இனிமையாகப் பாடினார்.

"வருவார் என்று வழிமேலே
விழிவைத்திருந்த மகாரணி
வந்திட்டாரு என்னும் நினைவில்
வாசல் கதவைத் திறந்தாள்"
என்ற பாடலுடன் நாடகம் முடிகிறது.

சித்தூர் ராணி பத்மினி

1963-இல் வெளி வந்த இந்தப்படத்தில் சிவாஜிகணேசன், பத்மினி முதலியோர் நடித்துள்ளனர். இதில் கவிராயர் ராணியின் அழகை வருணிக்கும் பாடலை எழுதினார்.

பார்த்துக் கொண்டிருந்தாலே போதும் - உன்னை
பார்த்துக் கொண்டிருந்தாலே போதும் - எந்தன்
பக்கத்திலே வைத்து எப்போதும் உன்னை

என்ற அந்தப் பாடலைச் சீர்காழி கோவிந்தராஜன் பாடினார்.

பூம்புகார்

இது கலைஞரின் காவியம். 1964-இல் வெளி வந்தது. இதில் கவிராயர் ஒரு பாடல் எழுதினார்.

"பொன்னாள் இதுபோலே
வருமா இனிமேலே
முன்னால் வந்தது எத்தனையோ
நன்னாள் அதிலே"

என்ற பாடலை டி.எம்.செளந்திரராஜனும் ஜானகியும் பாடினர்.

"மலர்வாழ் திருவின் வடிவம்
உனதல்லவா தமிழ்
மறைபேசும் நிறைஉன்
நிறை மேலும் நான்
சொல்லவா பக்கம்
மெல்லவா
குலமாதர்கள் கொண்டாடும்
குணமாமணியே."

என்று பாடல் தொடருகிறது. இக்காதல் பாடலில் குறளும் குலமும் கொஞ்சுகின்றன.

சித்தி

1966-ல் இப்படத்தைக் கே.எஸ். கோபால கிருஷ்ணன் இயக்கினார். அவரது நட்புக்காக

"சைக்கிள் வண்டிமேலே - பசுந்
தங்க நிறப் பொம்மை போலே - நீ
தனியாச் செல்லலாமா?"

என்று ஒரு கேலிப் பாடலை எழுதிக் கொடுத்தார்.

கண்கண்ட தெய்வம்

1967-இல் கே.எஸ். கோபால கிருஷ்ணன் இயக்கத்தில் வெளிவந்தது இப்படத்தில் கவிராயர்,

"நான் தென்ன மரத்துல குந்தியிருப்பதை
சின்ன பாப்பா அது தெரிஞ்சிக் கிட்டா
சிரிச்சிக்கிட்டே என்ன பாப்பா
எதுத்த ஊட்டு பாப்பா"

என்று ஒரு கேலிப் பாடலை எழுதினார். இதனை டி.எம். சௌந்திரராஜன் பாடினார்.

பேசுந்தெய்வம்

இதுவும் 1967-ஆம் ஆண்டில் வெளிவந்த கே.எஸ். கோபாலகிருஷ்ணனின் படம். இதற்காக,

"கண்டவர் கண்ணுபடும் செல்லத்தா - ஒரு
கருப்புப் பொட்டெ வச்சிவிடச் சொல்லாத்தா
தண்டைச் சிலம்பெடுத்து போடாத்தா - நல்ல
தமிழாலே தாலாட்டு ஒண்ணு பாடத்தா"

என்ற பாடலை எழுதினார். இதனை டி.எம் சௌந்திரராஜனும் சுசீலாவும் பாடினர்.

விவசாயி

கவிராயருக்கு எம்.ஜி.ஆரோடு கருத்து வேறுபாடு இருந்து வந்தது. அதனால் அவரது படத்துக்கு இவர் பாட்டெழுதாமல் இருந்தார். 1967-இல் சின்னப்பத் தேவர் விரும்பிக் கேட்டதால் எம்.ஜி.ஆருக்காகப் பாட்டு எழுதினார். அதில்

''நல்ல நல்ல நிலம் பார்த்து
நாளும் விதை விதைக்கணும்
நாட்டு மக்கள் மனங்களிலே
நாணயத்தை வளர்க்கணும்''
''இப்படித்தான் இருக்கவேணும் பொம்பளே
இங்கிலீஷ் படிச்சாலும்
இன்பத் தமிழ் நாட்டிலே''

''காதல் எந்தன் மீதில் என்றால்
காதில் இனிக்கிறது- தாலி
கட்டிக் கொள்ளத் தட்டிக் கழித்தால்
கவலைப் படுகிறது''

கலைஞர் ''நல்ல நல்ல நிலம் பார்த்து'' என்ற இந்தப் பாடலைக் கவிராயர் தன் வாயால் சொல்வதைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தவர்.

''கன்னியர்க்கும் காளையர்க்கும்
கட்டுபாட்டை விதைத்து
கற்புநெறி தவறாத
காதல்பயிர் வளர்த்து''

என்ற வரிகளைக் கேட்டதும் தன் இருக்கையிலிருந்து துள்ளி எழுந்து வந்து கவிராயரைக் கட்டிப் பிடித்து ''அருமை அருமை'' என்று பாராட்டி மகிழ்ந்தார்.

ஆதிபராசக்தி

கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் உடுமலையாரிடம் உதவியாளராக இருந்தார் 1961 முதல் 1971 வரை. பின்னர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஆதிபராசக்தி எடுத்த போது உடுமலையார் திரையுலகைவிட்டு விலகியிருந்தார்.

இயக்குநர் இவரை விடவில்லை. ஒரு பாடலாவது எழுத வேண்டும் என வேண்டினார். அபிராமி அந்தாதியைப் போன்று சந்தப் பாடல் அமைய வேண்டும் என்று கேட்டார். கவிராயர் மாயூரத்தில் காவிரிக் கரையில் இரண்டு மூன்று நாட்களாகப் படித்து வியந்து பாராட்டினார்.

ஓம்!..ஓம்!..ஆதிபராசக்தி ஆதிபராசக்தி
உலகம் எங்கணும் பரவி நின்றதும்
என்று தொடங்கி,
"மனதில் நிலைபெறும் இனிய கலைகளும்
புகழுயர்வுறு தெருளும் பல..பல..
பொருளும் உலகியல் அறிவு தரும் சக்தி
த(ஜ்)ஜம் கஜம் ததிதாஜனம் ததிதகிடஜம்
ஜதி முழுங்கிட நடமிடும் சக்தி"

என்ற பாடலை முடித்தார் இவர் ஒரு நாத்திக வாதியாக இருந்தாலும் தனது சீடனின் வேண்டுகோளுக்கு மதிப்பு அளித்து பக்திப் பாடல் துறையிலும் தமிழுக்கு வெற்றிக் கொடி ஏற்றி வைத்தார்.

இந்தப் படம் கே எஸ் கோபாலகிருஷ்ணனை நஷ்டத்திலிருந்து காப்பாற்றியது. இது 1972-இல் திரைக்கு வந்தது.

குறத்தி மகன்:

1972-இல் இந்தப் படத்தைக் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கினார் இதில் கவிராயர்,

"சீனாச் சிட்டு சிகினாப்பட்டு
சின்ன ரயில் ஏறிக்கிட்டாச்
செங்கல் பட்டு "

என்று ஒரு குறத்தி பாடலையும்

"சவாலே சமாளி படத்துக்குப் பேரு
கவாலி கொளத்துக்குள்ளே
டவாலி பாரு"

என்று ஒரு வேடிக்கைப் பாடலையும் எழுதினார். ஜெமினியும் கே.ஆர்.விஜயாவும் குறவனும் குறத்தியுமாக நடித்தனர்.

வாழையடி வாழை:

இதுவும் 1972-ஆம் ஆண்டில் வெளிவந்த கோபாலகிருஷ்ணனின் படம். இதில் கவியராயர் பூப்புச் சடங்கு பாடல் ஒன்றை எழுதினார்.

"ரோஜா மொட்டு மலர்ந்ததாம்
மலர்ந்த மொட்டு சிவந்ததாம்
ரூப சுந்தரம் புதிய மாற்றம்
சோபிதமாய் அமைந்ததாம்"

என்பது அந்தப் பாடல் அத்துடன்

"மழையைத் தாங்கும் முகில்

குழலைத் தாங்கும் உந்தன்
வதனம் போன்றது சந்திரோதயம்"

என்ற பாடலையும் எழுதியுள்ளார்.

இனி, கவிராயர் சினிமாவில் செய்த போராட்டங்களையும் செய்த சாதனைகளையும் காணலாம்.

பாவேந்தருடன்

கவிராயர் பாவேந்தர் மீது மதிப்பும் அன்பும் உடையவர். பாவேந்தரின் நம்பிக்கைக்கும் அன்பிற்கும் கவிராயர் ஏற்றவராக இருந்தார்.

ஒரு முறை பாவேந்தர் பாட்டெழுத சென்னைக்கு வர படஅதிபரோ அவரை உதாசீனப் படுத்தினார். இதனை அறிந்த கவிராயர் சென்னைக்குப் போய் பட அதிபரோடு கோபித்துக் கொண்டாராம்.பின்னர் பாவேந்தரிடம் "சினிமாக்காரர்கள் என்னையே ஏமாற்றக் கூடியவர்கள். நீங்கள் இலக்கியவாதி உங்களால் இங்கு காலந்தள்ள முடியுமா?" என்று வருத்தப் பட்டார். மேலும் அன்போடு புதிய ஆடைகளைப் பாவேந்தருக்குத் தைத்துக் கொடுத்து ஊருக்கு அனுப்பி வைத்தாராம்.

பாவேந்தரின் குடும்ப நண்பராகவும் கவிராயர் விளங்கி யிருக்கிறார். ஒரு முறை பாவேந்தர் தன் மகன் மன்னர் மன்னனுக்குப் பெண்பார்க்க அரக்கோணம் செல்லக் கவிராயர் தன் காரைத் தம் மூத்தமகன் இராமகிருஷ்ணனோடு அனுபினார்.

பாபநாசம் சிவனுடன்

தியாகராஜ பாகவதர்-பாபநாசம் சிவன் கூட்டணி அக்காலத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. பாகவதருக்குப் போட்டியாக இருந்தார் பி.யு.சின்னப்பா. இவருக்குப் பாகவதரைப் போலவே சிவனையும் மதிக்க வில்லை.அதனால் ஒரு நாள் அவர் உடுமலையாரை அழைத்தார். ஒரு கதையின் சூழலுக்குச் சிவன் எழுதிய பாடல் சரியில்லை என்றார். அச்சூழலுக்கு உடுமலையாரே பாடல் எழுத வேண்டும் என்றார்.

உடுமலையாருக்கு இது தர்மச் சங்கடமாக இருந்தது. 'சிவன் எழுதிய பாட்டுக்கு மறு பாட்டுங்களா? அது வராதே. சரி சிவன் எழுதிய பாட்டைச் சொல்லுங்கள்' என்று கேட்டார்.

"உள்ளம் அவளோடு சென்றது
வெள்ளம் தடையின்றி

பள்ளத்திலே விழும் தன்மைபோல்"

என்று சொன்னார் சின்னப்பா.

இதற்கு உடுமலையார்,"சிவன் தொட வேண்டிய இடத்தைத் தொட்டுவிட்டாரே இதற்கு மேல் என்ன எழுத முடியும்" என்று கூறிவிட்டார்.

கடைசியில் கதையின் சூழல் மாற்றப் பட்டது. அதற்கென்று ஒரு பாடலை உடுமலையார் எழுதினார். அந்தப் படம் 'குபேர குசேலர்' . ஆண்டு 1943. அவர் எழுதிய பாடல் அன்று மிகவும் பிரபலம் ஆயிற்று.

"நடை அலங்காரம் கண்டேன்
அன்னப் பெடையும்
பின்னடையும் பொற்கொடி
இவர் மலரடி"

என்பது தான் அந்தப் பாடல்.

பாபநாசம் சிவனுக்கு இணையாகப் பணிபுரிந்தவர் உடுமலை நாராயணகவி அவர்கள்.

திராவிட பாரம்பரிய தயாரிப்பாளர்கள்,வசனகர்த்தாக்கள், இயக்குனர்கள், நடிகர்கள் போன்றோர் உடுமலை நாராயணகவியை ஊக்குவித்தவர்கள். அண்ணாவின் நெருங்கிய நண்பர் இவர். இவரின் மிகப் பெரிய ஆதரவாளர் கலைவாணர்.

''பாபநாசம் சிவனின் பாடல்களோ சமநிலை சிந்தனை கொண்டதாக இருக்கும். சிவனின் பாடல்களில் சமஸ்கிருத பிரவேசம் அதிகம். உடுமலையார் தனித்தமிழ் கவிதைகளையே எழுதுவார். சிவனிடம் மரபு மேலோக்கி நிற்கும் உடுமலையார் மரபுகளை மறுத்துச் சொல்லுவார் ஆனால் இருவருமே கற்பனையின் ஜீவ நதிகள்,"என்பார் முக்தா வி.சீனிவாசன், (தமிழ்த் திரைப்பட வரலாறு,197)

ஒரு முறை கவிராயரிடம் ஏ.எல். நாராயணன் ''மணிப்பிரவாள நடையில் தான் பாபநாசம் சிவன் பாடல் எழுதுவாரா? தூய தமிழில் பாடல் எழுதத் தெரியாதா?'' என்று கேட்டார்.

உடனே கவிராயர்,''அப்படி நினைப்பது தவறு பாபநாசம் சிவன் சிறந்த கவிஞர் பெரும் மேதை. தமிழ் மொழிப் புலமை மிக்கவர். 'சொல்லு குழந்தாய்' என்ற பாடலில் 56 தேசத்து ராஜகுமாரர்களை இளவரசிக்கு அறிமுகப்படுத்துவது போன்றது அவரது புலமையைக் காட்டும்'' என்றாராம்.

இன்னொரு முறை சிவனின் பாடல் பதிவு நடந்தது. ''முகமது சந்திர பிம்பமோ'' என்ற பல்லவி. அந்தப்பக்கம் வந்த கவிராயர்.

"இங்கு எதற்கு முகமது வந்தார்" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். சிவன் கவிராயரிடம் 'எப்படி மாற்றலாம்' என்றுகேட்க "வதனமே சந்திர பிம்பமோ" என்று மாற்றிக் கொடுத்தராம் கவிராயர்.

சிவனும் ஒரு முறை கவிராயருக்குக் கடிதம் எழுதி தன் வீட்டில் வந்து ஒரு நாள் தங்கிப் போகுமாறு வேண்டினாராம். கவிராயரும் போய் வந்தாராம்.

கவிராயரும் பட்டுக்கோட்டையரும்

பாவேந்தர் பாரதிதாசனிடமிருந்து அறிமுகக் கடிதம் வாங்கிக் கொண்டு கல்யாணசுந்தரம் கவிராயரிடம் வந்தார். கவிராயரும் அவரைப் பற்றி விபரமாக எல்லா வற்றையும் கேட்டு அறிந்து கொண்டார்.

இறுதியில் "நீ என்னுடனேயே இருந்து கொள். உனக்கான வாய்ப்புகளை நான் உருவாக்குகிறேன். நீயும் முயற்சி செய்" என்று சொன்னாராம். தங்கப் பதுமை படத்துக்குப் பாட்டு எழுத தனக்கு வந்த வாய்ப்பினைப் பட்டுக்கோட்டையாருக்குக் கவிராயர் தந்தார்.

பட்டுக்கோட்டை இறந்த போது,"பட்டுக்கோட்டை இறக்க வில்லை. பாட்டுக்கோட்டை சரிந்தது"என்று கவிராயர் கலங்கிப் போனார்

கவிராயரும் மருதகாசியும்

கவிராயர் மருதகாசியின் வளர்ச்சிக்கும் பெரிதும் துணை புரிந்தார். இருவருக்கும் 1951-52ல் தான் தொடர்பு ஏற்பட்டது, "டியூனுக்கு நன்றாகப் பாட்டு எழுதுவார்" என்று கேட்டும் பழகியும் அறிந்தார். கவிராயர் கலைவாணரிடம் அவரைப் பற்றிப் பாராட்டிக் கூறினார். "மருதகாசி நன்றாக எழுதக் கூடிய பையன். திறமை உள்ளவன். வளர்ந்து விட்டால் நிலைத்து நிற்பான்" என்று .கலைவாணரிடம் கூறினார்.

'ராஜாராணி' படத்தில் வரும் 'சிரிப்பு அதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பது நம்பொறுப்பு' என்ற பல்லவியைக் கலைவாணரிடமிருந்து கவிராயர் வாங்கினார். அதனைக் கவிராயரோ மருதகாசியிடம் பல்லவியைக் கொடுத்து இதை வைத்துப் பாட்டெழுதிக் கலைவாணரிடம் கொடுத்து விடுமாறு சொல்லிவிட்டு ஊருக்குப் போய் விட்டார். மருதகாசியும் அந்தப் பாடலை எழுதி முடித்து எடுத்துக் கொண்டு போய் கலைவாணரிடம் கொடுத்தார். (பாடிப் பறந்த குயில்,)

கவிராயர் விவசாயி படத்திற்கான பாடல்களை எழுதிக் கொடுத்துவிட்டு குற்றாலத்துக்குப் போய்விட்டார். பிறகு தேவருக்கு இன்னுமொரு பாடல் தேவைப்பட்டது அவர் கவிராயருக்கு ஆள் விட்டார். கவிராயரோ தனது சீடன் மருதகாசியிடம் எழுதி வாங்கிக் கொள்ளும் படிச் சொல்லி விட்டார். அப்பொழுதுதான் அவர் 'விவசாயி விவசாயி'என்ற பாடலை எழுதிக் கொடுத்தார்.

கவிராயரும் கண்ணதாசனும்

''அப்போது சில கம்பெனிகளில் உடுமலை நாராயண கவிக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது மற்றீ பாடலாசிரியர்களை அவர் அலட்சியமாகப் பார்ப்பார். ஒரு நாள் மங்களவிலாசில் *சி.ஆர்.சுப்பராமன், விஸ்வநாதன் ராமமூர்த்தி*, பாடலாசிரியர் கே.டி.சந்தானம் ஆகியோர் இருக்கும் போது அது பற்றி விவாதம் வந்தது. 'நாராயணகவியைப் போல் எழுதுவதற்கு இன்னொருவர் பிறக்கப் போவதில்லை'என்று சுப்பராமன் பேசினார். நான் ஆத்திரத்தோடு, அவரைப் போல ஆயிரம் கவிஞர்களை உருவாக்குவேன் *என்று சவால் விட்டேன் என்பார் கண்ணதாசன்* (என் சுய சரிதம்)

சங்கை வேலன் தனது நூலில் (உடுமலைநாரயண கவியின் பாட்டுப் பயணம், ப.82) கண்ணதாசனின் தவறானப் புரிதலை விளக்குவார் இதன் மூலம் உடுமலையார் கண்ணதாசன் மீது வைத்திருந்த மதிப்பு விளங்குகிறது.

ஒரு நாள் இசையமைப்பாளர் சுப்பராமன் கொடுத்த மெட்டை கண்ணதாசனிடம் பாடிக் காண்பித்தேன். அதற்கு பாடல் ஒன்று எழுதி மூன்று நாட்களுக்குப் பிறகு கொண்டு வந்தார்.

''காரணம் தெரியமல்-உள்ளம்
களி கொண்டே கூத்தாடுதே''

இது தான் கண்ணதாசன் எழுதியிருந்த பல்லவி. எம்.எஸ்.வி.யும் ஹார்மோனியம் வாசிக்கிற கோபால கிருஷ்ணன் என்ற பையனும் அதைப் பாடிப் பார்த்தனர். பிறகு கண்ணதாசனிடம் 'களிகூத்தாடுதே' இவையெல்லாம் நல்லா இல்ல மாத்துங்க என்றார். கண்ணதாசன் முறைத்தார். எம்.எஸ்.வி.'முறைக்காதீர்ங்க மாத்துங்க' என்றார். மூன்று மணிநேரம் கண்ணதாசன் போராடினார் முடியவில்லை.

அப்போது அந்த வழியாக வந்த உடுமலையார் ''என்ன பண்ணுறீங்க''என்று கேட்டார். அவரிடம் எம்.எஸ்.வி.அந்த வரிகளைச் சொன்னார். அவரும் உடனே கண்ணதாசனிடம் 'தம்பி அந்த களி கூத்தெல்லாம் வேண்டாம். வேறு போடுங்க'' என்று எம்.எஸ்.வி.

சொன்னதையே சொன்னார். அதிலிருந்து கண்ணதாசனுக்கும் எம்.எஸ்.வி மேல் காதல் பிறந்தது. கவிராயரே பிறகு சட்டென்று,

"காரணம் தெரியாமலே உள்ளம்
சந்தோஷம் கொண்டாடுதே"

என்று மாற்றிக் கொடுத்தார். அதேசமயம் எம்.எஸ்.வி.யிடம் தனியாக "மடையா அறிவிருக்கா. கண்ணதாசன் எழுதிய களி கொண்டு கூத்தாடுதே' என்ற வரியில்தான் கவிதையே இருக்கு அவன் தான் கவிஞர்டா" என்று கண்ணதாசனைப் பாரட்டினாராம்.

கண்ணதாசனுக்கு ஆஸ்தான கவிஞர் என்ற பதவி கிடைத்ததும் உடுமலையாரிடம் வாழ்த்த வேண்டும் என்று சுப்பு ஆறுமுகம் கேட்டார். அதற்கு கவிராயரோ "நானென்ன வாழ்த்துவது கண்ணதாசன் படைப்புகளே அவரை வாழ்த்தும்"என்று கூறினாராம்.

'செந்தாமரை' படத்தில் கண்ணதாசன் எழுதிய "பாட மாட்டேன் நான் பாடமாட்டேன்' எனத் தொடங்கும் பாடலைப் படிக்காமல் அவரது அண்ணன் ஏ.எல்.சீனிவாசன் உடுமலையாரிடம் வேறு பாடல் எழுதும்படி கேட்டுக் கொண்டார். இருவரும் இரண்டு மூன்று நாட்கள் முயன்று பார்த்து விட்டு,"என்ன மாற்றினாலும் கண்ணதாசன் எழுதியது போல் வரவில்லை" என்று கூறிவிட்டார்.

கலைஞர் மு.கருணாநிதி

உடுமலைக் கவிராயர் கலைஞரோடு சேர்ந்து மூன்று படங்களில் பணியாற்றியுள்ளார். இருவரும் பெரியாரின் தொண்டர்கள் என்ற வகையில் ஒரே அலைவரிசையில் சிந்தித்தனர். கலைஞரின் வசனங்களுக்குப் பொருத்தமாகவும் கதைகளுக்கு ஏற்றாற்போலவும் கவிராயரின் இசையில் பிரபலம் ஆனது. "கலைவாணரும் உடுமலை நாரயண கவியும் இணைந்து தமிழகத்தில் ஒரு கருத்துப் புரட்சியை உண்டாக்கினார்கள்" என்று கலைஞர் பாராட்டினார்.

கே.ஆர். இராமசாமியின் இறுதி ஆசையைக் கலைஞர் நிறைவேற்ற முன்வந்தார். அதன் படி 15,000 வெண்பொற்காசுகள் அடங்கிய பணமுடிப்பை வழங்கினார். அப்போது "உடுமலை நாராயணகவி வெறும் சினிமாக்கவிஞர் மட்டுமல்லர். அவர் ஒரு சிந்தனைக் கவிஞர். பாமர மக்களின் உள்ளத்திலே பதியத் தக்க அறவிற்கு அவர் கருத்துக்களை எடுத்துச் சொன்னவர்"எனக் கலைஞர் போற்றினார்.

பின்னர் பொன்னாடை போர்த்திப்பொற்கிழி வழங்கி கௌரவித்தார், கலைஞர். கவிராயரின் மறைவிற்கு 'தமிழர் தந்த அரிமாக் கவிஞர்' என்று அஞ்சலி செலுத்தினார்.

கவிராயருக்கு 2001-ல் பிறந்த ஊரிலேயே மணிமண்டபம் திறந்தார். இது அழியாத நினைவுச் சின்னம்.

''காவியமாகிய கவிப்பொருள் மாட்சி
கண்விழிக் காட்டும் சித்திரக் காட்சி
ஓவிய ஞான நூல் முறை ஆராய்ச்சி
ஓங் கிடவே கலைஞர் உலகினில்
செய்வார் ஆட்சி''

என்று கவிராயர் கலைஞரை வாழ்த்தியுள்ளார்.

கவிராயரும் எம்.எஸ் .விஸ்வநாதனும்

கண்ணதாசன் 'கன்னியின் காதலி படத்துக்குப் பாட்டெழுதி வந்தார். கண்ணதாசன் வந்த சமயத்தில் உடுமலை நாராயண கவிதான் ஜுபிடரின் ஆஸ்தான கவியாகக் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தார். ஆஸ்தான மியூக் டைரக்டர் எம்.எஸ். சுப்பையா நாயுடு, இவர் தவிர எஸ்.வி. வெங்கட்ராமன், சி.ஆர்.சுப்பராமன், சி.எஸ் ஜெயராமன் போன்ற பிரபலமான மற்ற மியூசிக் டைரக்டர்கள் வந்து போவார்கள். இவர்களுக்கெல்லாம் எம்.எஸ்.வி.தான் அசிஸ்டெண்ட்.

கண்ணதாசன் பாட்டு எழுத ஒரு சந்தத்தை ட்யூன் போட்டுக் கொடுத்திட்டாரு மியூசிக் டைரக்டர். இந்தச் சந்தத்தைக் கவிஞர் முன்னாடி ஒன்றரை நாள் எம்.எஸ்.வி.விடாமல் வாசித்தார். அப்புறம்தான் கவிஞர் கிட்டேயிருந்து வார்த்தைகள் வந்து விழ ஆரம்பித்தன.

''காரணம் தெரியாமல்
உள்ளம் களி கொண்டே கூத்தாடுதே''

என்று சொல்ல ஆரம்பித்தார். எம்.எஸ்.வி.உடனே;''இது என்னங்க களி கூத்துனு அசிங்கமா இருக்கு நல்லாயில்லையே. வேற ஏதாவது வார்த்தை சொல்லுங்களேன்''.னு சொன்னார்.

கண்ணதாசனுக்குக் கோபம் வந்துடுச்சு. அந்த நேரத்துல ஆஸ்தான கவிஞர் உடுமலை நாரயணகவி வந்தாரு''என்னடா பல்லவி எழுதியிருக்கான் இவன்?'' என்று எம்.எஸ்.வி.யிடம் கேட்டாரு. உடனே அவர் பல்லவியை வாசிச்சு காட்டினார்.

''என்னடா இது களி..கிளின்னு கேட்ட்டார் நாராயணகவி எம்.எஸ்.வி. சொன்ன குறையையே நாராயண கவியும் சொல்லவே கண்ணதாசன் எம்.எஸ்.வியை ஒரு பார்வை பார்த்தாரு'' (நான் ஒரு *ரசிகன்). கவிராயரின் சிறப்பு இதனால் வெளிப்படும்.*

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமியிடன்

கே.ஆர்.ராமசாமியே நடிப்பிசைப் புலவர். சின்னக் கலைவாணர் என்றும் அழைக்கப் பட்டார். கலைஞரால் "சிறந்த சீர்த்திருத்தவாதி" என்று பாரட்டப்பட்டவர்.

கவிராயாரோடு இருவருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அது பெரும் நட்பாகவும் அன்பாகவும் வளர்ந்தது கோவை. சென்ட்ரல் ஸ்டுடியோவில் சொர்க்கவாசல் திரைப் படத்தின் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. அங்கு கே.ஆர். ஆரோடு அவரது மனைவி கலியாணி இரண்டாவது பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்திருந்தார். பாடல்கள் எழுத வந்த கவிராயரோ அக்குழந்தையைத் தன் மடியில் தூக்கி வைத்துக் கொண்டார். "ராமசாமி, இந்தப் பிள்ளைக்குப் பூள வாடியில் நமது வீட்டில் தான் பெயர்வைக்க வேண்டும்" என்று கூறினார். கே.ஆர்.ஆர். எவ்வளவோ மறுப்பு சொல்லியும் கேட்காமல்,"உனக்கு நேரமில்லையென்றால் வந்து பெயர் சூட்டு விழாவில் கலந்துக்கொண்டு உடனே புறப்பட்டு வந்துவிடு. குழந்தையையும் மற்றவர்களும் சில நாட்கள் கழித்து வரட்டும்" என்று சொல்லி விட்டார்.

கவிராயர் பெரிய விருந்து எற்பாடு செய்தார். ஆயிரம் பேருக்கு அன்று அன்னதானம் செய்தார். குழந்தைக்கு இளங்கோவன் என்று பெயர் சூட்டினார். தன்னுடைய பரிசாக சங்கிலியை அணிவித்தார்.

நடிப்பிசைப் புலவர் மரணப் படுக்கையில் மருத்துவ மனையில் இருந்த போது கவிராயரின் பொருளாதாரச் சிக்கலை அறிந்தார். தலையணைக் கடியில் தாளில் பத்தாயிரம் ரூபாய் பொற்கிழி வழங்குமாறு எழுதி வைத்திருந்து கலைஞரிடம் கொடுத்தார்.

எம்.ஜி.ஆரும் உடுமலையாரும்

எம்.ஜி.ஆர். நடித்த 'மதுரைவீரன்' படத்திற்கு உடுமலையார் பாடல் எழுதிக் கொண்டிருந்தார். தனது படங்களில் இடம் பெறும் பாடல் வரிகளில் எம்.ஜி.ஆர் கவனம் செலுத்தத் தொடங்கிய காலம் அது. மதுரைவீரன் படத்திற்கு கவிராயர் எழுதிய வரிகளில் சில மாற்றங்களைச் செய்யுமாறு கவிராயரிடம் எம்.ஜி.ஆர் சொன்னார். இதனால் கவிராயர் கோபம் கொண்டார், "என பணியில் நீங்கள் எப்படி குறுக்கிடலாம்?"என்று கூறி விட்டு சென்று விட்டார்.

இப்படத்தில் நடித்துக் கொண்டிருந்த பத்மினி இதை அறிந்து வருத்தப் பட்டார். ஏனெனில் அந்தப் பாடல் அவர் ஆட வேண்டியதாகும். அதனைக் கவிராயர் எழுதினால்தான் சிறப்பாக இருக்கும் என்று எண்ணிய அவர் கவிராயரைத் தேட ஆரம்பித்தார்.

கடைசியில் அவர் கவிராயரை மகாபலிபுரத்தில் கண்டு பிடித்தார். அவரைச் சமாதானம் செய்து பாடலை எழுத வைத்தார் அதுவும் பிரபலமானது.

"ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ "

என்று எழுதிக் கொடுத்தார்.

கவிராயர் மீது எம்.ஜி.ஆர்.மரியாதை வைத்திருந்தார் ஒரு முறை அவர் மைசூரில் மருதநாட்டு இளவரசி படப்பிடிப்பின் போது கவிராயரிடம் தான் வி.என்.ஜானகி அவர்களை மணந்து கொள்வது பற்றி ஆலோசனை கேட்டிருக்கின்றார். இந்த அளவுக்கு மதிப்பு இருந்தது கவிராயரிடம்.

எம்.ஜி. ஆரோடு வேறுபாடு ஏற்பட்டதால் அவரது படங்களுக்குக் கவிராயர் பாடல் எழுதாமல் இருந்தார். 1959-இல் தாய் மகளுக்குக் கட்டிய தாலியில் பாடல் எழுதினார். பின்னார் 1960-இல் ராஜா தேசிங்கு; 1967-இல் 'விவசாயி' ஆகிய மூன்று படங்களுக்கு எழுதினார்.

இடையில் இருவருக்குள்ளும் பிளவு இருப்பினும் ஒருவர் மீது ஒருவருக்கு இருந்த மதிப்பும் அன்பும் மாறாமல் இருந்தது. ஒரு முறை எம்.ஆர். இராதாவிடமிருந்து உடுமலையாருக்கு அழைப்பு வந்தது. அந்த சமயம்தான் எம்.ஜி.ஆரைச் சுட்ட வழக்கில் எம்.ஆர்.இராதா சிறைவாசம் முடிந்து திரும்பியிருந்தார். எம்.ஆர்.இராதாவின் வீட்டிற்குப் போன உடுமலையாரிடம் தான் சில நாடகங்கள் நடத்த இருப்பதாகவும் அதற்குக் கவிராயர் பாடல் எழுதித் தர வேண்டும் என்றும் இராதா சொன்னார். சம்மதித்த கவிராயர் நாடகப் பிரதியைக் கொண்டு வரச்சொன்னார். நாடகத்தின் பெயரைப் பார்த்த கவிராயருக்குத் தூக்கி வாரிப் போட்டது. நாடகத்தின் பெயர் 'நான் தான் சுட்டேன்'..

மீண்டும் வந்து பாடல்கள் எழுதித் தருவதாக எம்.ஆர் இராதா விடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் கவிராயர். அவர் காரில் திரும்பும் போது அழைத்து வந்த நண்பரைக் கோபித்துக் கொண்டார். "எம்.ஜி.ஆரிடம் எனக்கு மனஸ்தாபம் இருக்கலாம் ஆனால் நான் பாடல் எழுதி அவை நடிக்கப்பட்டு எம்.ஜி.ஆர்.என்னிடம் கேட்டால் அவருக்கு நானென்ன பதில் சொல்வது?'' என்றாராம்.

ஒரு சமயம் கவிராயர் தனது மூத்த புதல்வர் இராமகிருஷ்ணன் பேத்தி கலாவதியோடு எம்.ஜி.ஆரின் இல்லத்திற்குச் சென்றார். எம்.ஜி.ஆரிடம் பேசிவிட்டு தான் வந்த காரில் ஏறியமந்தார் கவிராயர். கவிராயரின் மகனும் பேத்தியும் தொடர்ந்து சிறிது நேரம்

எம்.ஜி.ஆரிடம் பேசிக் கொண்டிருக்க காரில் காத்திருந்த கவிராயர் பொறுமை இழந்து ஹாரனை அடித்தார். உடனே எம்.ஜி.ஆர். கவிராயர் பேத்தியிடம்,

''நீங்கள் கேட்ட புகைப் படத்தை வீட்டுக்கு அனுப்புவைக்கிறேன். முதலில் நீங்கள் புறப்படுங்கள். இல்லையெனில் வாத்தியாருக்குக் கோபம் வந்து விடும்''

என்று சொல்லி இருவருக்கும் விரைந்து விடை கொடுத்து அனுப்பினாராம். எம்.ஜி.ஆரின் மதிப்பிற்குரியவர் உடுமலையார் என்பது இதனால் புரியும்.

கவிமணி விநாயகம்பிள்ளை

கவிமணி தேசியவிநாயகம்பிள்ளைக்கும் கலைவாணருக்கும் நெருங்கிய நட்புண்டு ''சினிமாப் பாடலசிரியர்கள் தரமான இலக்கிய வாதிகளாக இல்லை. புலமை நயமும் இல்லை. வசனத்தை வளைத்துப் போட்டுக் கவி ஆக்குகிறார்கள். இசையமைப்பின் சக்தியினால் கேட்கும்படி செய்து விடுகின்றனர். ''என்பது கவிமணியின் எண்ணம்.

ஒரு நாள் கலைவாணர் கவிமணியைப் புத்தனேரில் சந்தித்துப் பேசியபோது ''விஞ்ஞானத்தை வளர்க்கப் போறண்டி'', ''நல்ல பெண்மணி மிக நல்ல பெண்மணி'' என்ற பாடல்களைப் பாடிக் காட்டினார். இவற்றைக் கேட்டு ரசித்த கவிமணி''இவை சினிமாப் பாடல்கள் என்றால் நம்ப முடியவில்லை''என்றார்.

''கெட்டியான ஆசாமி எனது வாத்தியார் உடுமலை நாராயணகவி'' என்று பெருமையுடன் கூறினார்.

அதற்குக் கவிமணி,''வீண் பெருமைப்படாதீர்கள் எங்களோடு இருக்க வேண்டியவர் தப்பிப்போய் சினிமாக் கூட்டத்தில் சேர்த்து விட்டார்'' என்று கூறினாராம்.

ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார்

ஒரு சமயம் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் குற்றாலத்தில் தங்கியிருந்தார். அவரைச் சந்திக்கக் கலைவாணர் சென்றார்.

''சில பாடல்களை எழுதி வந்திருக்கின்றார். அவற்றைக் கேளுங்கள்''எனக் கூறி கலைவாணர் கவிராயரின் பாடல்கள் சிலவற்றைப் பாடினார்.

ரசிகமணி அவற்றை நன்கு ரசித்தார். அவர் ''கலைவாணரே! நிஜமாக நீங்களே எழுதிய பாடல்களா? என்று வினவினார்.

அவர் ஆமென்று உரைக்க,''இல்லை உன் வீட்டில் வாத்தியார் ஒருவர் இருக்கின்றாராம்''எனறார்.

அதற்கு கலைவாணர் ''அதெல்லாம் பொய். நான் தான் எழுதியது அதாவது வாத்தியார் அவ்வப்போது சொல்லுவார் நான் என் கைப்பட எழுதுவேன்'' என்று சிரித்துக் கொண்டே கூறினாராம்.

கலைவாணரும் கவிராயரும்

மதுரையில் கவிராயர் டி.கே.எஸ்.நாடகக் குழுவில் பணியாற்றி போது ஆறுமுகக் கவிராயரின் நட்பும் ஏற்பட்டது. டி.கே.எஸ். நாடகக்குழுவில் நடித்துக் கொண்டிருந்த கலைவாணரோடும் இவருக்கு நெருங்கிய உறவு எற்பட்டது. இது ஏறக்குறைய 1928 வாக்கில் எனலாம்.

பின்னர் 1939-இல் கலைவாணர் அசோகா பிலிம்ஸ் என்னும் பெயரால் ஒரு படக் கம்பெனியைக் கோவையில் தொடங்கினார். அதன் மூலம் புத்திமான் பலவான் ஆவான், நவீன விக்கிர மாதித்தன், சந்திரஹரி, இழந்த காதல், அலிபாபா போன்ற படங்களைத் தயாரித்தார்.

நடிகர் சி.வி.வி.பந்தலு மூலம் கலைவாணரைக் கவிராயர் 1940-இல் சந்தித்து தம் உறவைப் புதிப்பித்துக் கொண்டார். இது கவிராயரின் திரை உலகவாழ்க்கைத் திருப்புமுனை ஆயிற்று. 'சகுந்தலை' படத்துக்குக் கவிராயர் எழுதிய

''காலையிலே எழுந்திரிச்சுக்
கஞ்சித் தண்ணியில்லாமே
கஷ்டப் படுகிறேனே-கடவுளே''

என்ற பாடல் இருவரையும் பிரபலமாக்கியது. தொடர்ந்து 'இழந்த காதல்' படத்துக்கும் பாடல் எழுதினார். 1947-இல் 'பைத்தியக்காரன்', 1949-இல் 'நல்ல தம்பி', 1950-இல்'மணமகள்'என்று இவர்களது கூட்டணி தொடர்ந்து கொண்டிருந்தது.

இவர்களின் தொடர்பைப் பற்றி எஸ்.வி.சகஸ்ரநாமம் எழுதும் போது,''என்.எஸ்.கே.கம்பெனியின் நிர்வாகம் இப்போது பெரிய அளவில் நடந்து வந்தது. என்.எஸ்.கே.மதுரம் நடிக்கும் படங்கள் தனிப்பட்டு உள்ளவர்களில் கூட இவரிடம் ஹாஸ்ய பாகத்தை எடுத்துக் கொடுக்கும் படியான பல படங்களில் கொடுக்கப்பட்டது ஹாஸ்யப் பகுதி பாட்டெழுத அன்று சென்னையில் ஹெச் எம்.வி. கிராமபோன் கம்பெனியில் மாதச் சம்பளத்தில் கௌரவமாக இருந்து வந்த திரு.நாராயணகவி அவர்கள் அழைத்து வ்ரப்பட்டார்.

இவர் கலைவாணரின் ஆஸ்தான கவிஞராக இருந்த காலமே இவரது உச்சக்கட்டமாகும். பாமரர்களைக் கவரும் வகையில் எளிய சொற்களால் அரிய வரிகளை உருவாக்கினார்.

நாராயண கவி "விஞ்ஞானத்தை வளர்க்கப் போறாண்டி" என்ற பாடலை எழுதும்போது

"மாட்டு வண்டியிலே சுவிட்ச மாட்டி-என்
மாமியாருக்கு ஓட்டி ஓட்டிக்
காட்டப் போறாண்டி

என்று எழுதி இருந்தார் ஒரு வரி. இது அவ்வளவாக சரியில்லை என்று பின்னர் எண்ணினார்.

இதை மாற்ற வேண்டும் என்று இரண்டு நாட்களாக இடைவிடாமல் யோசித்தார். இதைக் கவனித்தார் கலைவாணர். இதைப் பற்றி உதவியாளரிடம் விசாரித்தார். அவரும் விஷயத்தைச் சொன்னார்.

கலைவாணரும் கவிராயரிடமும் போய் "அதில உன்னையும் வச்சுக்கிட்டு" என்று அடி எடுத்துக் கொடுத்தார்.

உடனே உடுமலையார் ,"இப்படி பொருத்தமான வார்த்தை கிடைக்காமல் யோசித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் பணம், பட்டு, மரியாதை எல்லாம் கொடுக்கின்றீர்கள். அவற்றையெல்லாம் விட நீங்கள் பாடலுக்கு வார்த்தைக் கொடுத்தது சிறப்பானதாகும்"என்று பாராட்டினார்.

இதைப் போலவே "நாட்டுக்குச் சேவைசெய்ய"என்ற அடியை வைத்துக் கொண்டு கவிராயரும் கலைவாணரும் யோசித்து போது திருமதி மதுரம் "நாகரீகக் கோமாளி வந்தேனய்யா" என்ற அடியைச் சொல்லியதாக தெரிகிறது.

இவை கவிராயரின் பரந்த மனத்தைக் காட்டும். சிறந்ததை ஏற்றுக் கொள்ளும் விரிந்த உள்ளத்தைக் காட்டும்.

கலைவாணர் மேடையில் பேசும் போது கூட மேற்கோள்களாக கவிராயரின் பாடல் வரிகளையும், பாடல் கருத்துகளையும் காட்டிப் பேசினார். 1944-ல் சென்னையில் தமிழிசை மாநாடு நடந்தது. அப்போது கிந்தனார் காலட்சேபத்தில் பெண்களின் சிறப்பு பற்றி பகுதியை எடுத்துக் காட்டி தமிழிசையை வலியுறுத்தினார்.

கலைவாணர் எங்கு நாடக நிகழ்ச்சி நடந்தாலும்,

"உவமையில்லா எங்கள் உடுமலையார்
உடுமலை முத்துசாமிக் கவிராயர் சீடனாம்
நவநவமாகக் கவிநாள் தோறும் வெளியிடுவார்

நாராயணன் என் குருவை நாளும் துதிப்பேனே''

என்று குருவணக்கமாகப் பாடுவாராம்.

1944-ல் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் மறுமலர்ச்சி வைபவம் நடந்த போது கவிராயருக்குக் கலைவாணர் டாலர் கோர்த்த தங்கச்சங்கிலியைக் குருகாணிக்கையாகத் தந்து கௌரவித்தார்.

ஒரு முறை இருவரும் காரில் சென்னைக்கு வரும் போது பின் சிட்டில் கவிராயரைத் தூங்க வைத்தார். கலைவாணர் இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தார். காரணம் கவிராயர் காலையில் பாடல் பதிவில் இருக்க வேண்டிய நிலை.

திரு.கி.வீரமணி கூறுவது போன்று, ''கலைவாணர் நகைச்சுவை அரசர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களது வயிரம் வாய்ந்த கொள்கை, பொருள் பொதித்த நகைச்சுவைகளுக்கெல்லாம் காரணம் உடுமலையாரின் கவிகள்தான் '' (உ.நா.பா.முன்னுரை)

''கால் நூற்றாண்டு காலம் கலைஉலகில் தன் ஆட்சியை நடத்திய கவிராயரை வெறும் பாடலாசியர் என்று மட்டும் முடித்து விட முடியாது. நீண்ட காலம் ஒரு நிழலில் தமிழை இங்கே தாலாட்டுவதற்காக அவர் காலம் வளர்த்த ஓர் ஆலமரம்.

பகுத்தறிவுக் காற்றைத் தன் குலைகளிலிருந்தும் கிளைகளி லிருந்தும் திசைதோறும் தெறிக்க வைத்து திருத்தும் பணியில் திளைத்த மரம் என்பார் நெல்லை ஜெயந்தா. சரிதான்.

5

கவிதை உத்திகள்

''முன்னோர் மொழிபொருளே யன்றி
அவர் மொழியும்
பொன்னே போல் போற்றுவர்''

என்பதும் முன்னோர் வாக்குதான். மரபார்ந்த ஒரு கவிஞன் தன் முன்னோரின் கருத்துக்களையும் வரிகளையும் பதிவும் செய்வதிலிருந்தும் பதியம் போடுவதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியாது. அவன் அறிந்தோ அறியாமலோ முன்னோர்களின் பாதிப்புக் குட்படுவதுண்டு. கவிராயரோ நல்ல புலமை உடையவர். அவர் அறிந்தே முன்னோரைப் பொன்போலும் பூ போலும் பல்வேறு பாடல்களில் பக்குவமாக கையாண்டிருக்கிறார். இதனை ஓர் உத்தியாகவும் கையாளுகிறார். திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார் ஆகிய பாடல்களும் அவ்வையார், சித்தர், பாரதியார் போன்றவர்களின் கருத்தும் கவிதை வரிகளும் கவிராயரால் பாடலாக்கப்பட்டுள்ளன.

திருக்குறள்

''கவிஞன் என்பவன் தன்னைச் சார்ந்துள்ள மனிதன் சீர்மையுற சமுதாய அக்கறையுடன் தன் சிந்தனைச் சிதறல்களைக் கோர்வையாக்கிப் பாடல்களை எழுதுகிறான். அப்பாடல்கள் காலந்தோறும் வாழும் மக்களைச் செம்மை படுத்துமானால் அவை கவித்துவம் வாய்ந்தவை அவ்வகையில் வள்ளுவர் மனிதன் வாழ்வதற்கு வேண்டிய வாழ்வியல் நெறிகளைச் செவ்வனே வகுத்துள்ளார். அதுபோலவே கதையின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு எழுதப்படும் திரைப்பாடல்களில் உடுமலையாரும் மனிதன் வாழ்வதற்குரிய நெறிமுறைகளை மிகச் செம்மையாக எழுதியுள்ளார் என்பார் கஸ்தூரிராஜா (உ நா.ப பா , ப.97)

''கூத்தாட்டு அவைகுழாத்து அற்றே
பெருஞ்செல்வம்

போக்குமது விளிந்து அற்று''

என்று வள்ளுவர் சொன்னதை இவர்.

''ஓரிடந்தனிலே - நிலையில் துலகினலே
உருண்டோடிடும் பணங்காசெனும்
உருவமானப் பொருளே''

என்று பாடியுள்ளார்.

- **பழுதற்ற வள்ளுவன் பைந்தமிழ் நீதி**
  உவழிச் சென்று மாண்டார் உயர்ந்த நாடு எமது
- **அமிழ்தினும் இனிய புகழ்சார் பொன்மொழி**
- **பொன்னெழுத்து ஏடு**

என்றும் கவிராயர் போற்றியுள்ளார்.

திருக்குறள் சிந்தனைகளைத் தமிழ்த் திரைப்படப்பாடல்களில் அதிகம் கலந்து பிரச்சாரம் செய்த பெருமையும் கவிராயரைச் சேர்கிறது.

'யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு'' சுகமிழப்பவர்
என்று
வாகார்ந்த வள்ளுவன் வரம்பை உணராது
சாகாமல் சாகாதீர் தாரணியோரே

என்று பாடுகையில் 'வாகார்ந்த வள்ளுவன்' என்று குறிப்பிடுவது சிறப்பிற்குரியது. வள்ளுவன் சொன்னபடி நாவைக் காக்காவிட்டால் அழிவும் அதனால் வரும் அவலமும் பெரிது என்று எச்சரிக்கிறார்.

'அபலை அஞ்சுகம்' என்ற படத்தில்,

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்'' என்றே
குறிப்பிட்ட வள்ளுவன் குறட்பாவை உணர்ந்தே
ஒருப்பட்டு வாழ உடன்படுவீரே''

என்று ஒரு பாடல்.எழுதினார். இதனை டி.ஆர். மகாலிங்கம் பாடினார். இது சாதி வேறுபாட்டைக் களையும் சமரசப் பாட்டு.

வண்ணத் தமிழ் சொர்ணக்கிளி
வாய் திறந்தாள்
வள்ளுவன் சொல் தெள்ளமுதை
மெல்ல மொழிந்தாள்.

என்று பாடும்போது வள்ளுவனது சொல்லானது தெள்ளமுது என்று குறிப்பிடுகின்றார். அத்துடன் 'பொன்னெழுத்து ஏடு' என்றும் 'அமிழ்தினும் இனியதொரு புகழ்சால் பொன்மொழி' என்றும் போற்றியுள்ளார்.

சிலப்பதிகாரம்

"மேருமலை மீதினிலே கொடி நாட்டினான் - சேரன்
வீரங்காட்டி விசயன் தலை வாட்டினான்
பாறாங்கல்லை உடைத்தெடுத்தான்
பகைவனைச் சுமக்க வைத்தான்
பத்தினிப் பெண் சிலைசமைத்தான் கேளுங்களே"

என்று சிலப்பதிகாரத்து வஞ்சிக்காண்டத்தைச் சுருக்கி உரைக்கிறார். இதில் செங்குட்டுவனின் வீரமும், கண்ணகி வழிபாடும் சிறப்பாக்கப் படுகின்றன. தமிழரின் மற நெறியும் பத்தினி வழிபாட்டு நெறியும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கலைஞரின் பூம்புகாரில் 'பொன்னாள் இதுபோலே' என்று ஒரு பாடலைக் கவிராயர் எழுதினார். கண்ணகியின் அழகை வியந்து கோவலன் பாடும் பாடல் இது. இதில்

"மாசறு பொன்னே வலம்புரிமுத்தே
காசறு விரையே கரும்பே தேனே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ"

என்ற சிலப்பதிகார வரிகளையும் பொன்னேபோல் போற்றி. அப்படியே பயன்படுத்தித் திரைப்பாட்டுக்குச் சிறப்பைச் சேர்த்துள்ளார்.

நாலடியார்

செல்லரித்த ஆலமரம் அடிப்புறம் சாய்ந்தாலும்
ஜீவனற்று போகமலே - அதன்
பிள்ளையெனவே விழுது பின்புவந்து
கிளைதாங்கிப்
பேணுகின்ற செயல்போலே
நல்லகுடி வழிவந்த மக்கள்குணம் அதுவென்றே
சொல்லுதடா தெள்ளுதமிழ் நூலே - அதை
உள்ளமதில் உணராத பிள்ளைகளுக்கே
கீரிப்பிள்ளை அணிப்பிள்ளை மேலே

என்று ஒரு சரணம் நல்லதீர்ப்பு படத்துக்கு எழுதிய பாடலில் வந்துள்ளது. "இதனை தினப்பட்ட ஆலமரத்தை" என்று தொடங்கும் நாலடியார் பாடலின் கருத்தையே இவ்வாறு வலியுறுத்துகிறார். நாலடியாரைத் 'தெளளுதமிழ் நூல்' என்றும் குறிப்பிடுகிறார். நாலடியாரைச் சொன்ன பிறகு "வயதான பெற்றோரைக் காக்காத பிள்ளைகள் அணில்பிள்ளை, கீரிப்பிள்ளைகளைவிட மோசமானவர்கள்" என் று தன் கருத்தையும் வற்புறுத்தி விடுகிறார்.

அவ்வையார்

வில்லம்பு பட்டபுண் வேதனை தராது
என்றும் வேதனை தராது
சொல்லம்பு பட்ட துன்பம் மாறாது
தெள்ளுதமிழ் ஏட்டிலுள்ள பாட்டினிலே
அவ்வைப் பாட்டினிலே - கண்டு நாம்
நல்லவராய் வாழவேண்டும் நாட்டினிலே''

என்று கவிராயர் அவ்வையாரின் பொன் மொழியையும் அதைப் போற்ற வேண்டிய அவசியத்தையும் இப்பாடலில் வலியுறுத்துகிறார்.

சித்தர் பாடல்கள்

'தூக்குத் தூக்கி' படத்தில் ஒரு பாடல்:

''பெண்களை நம்பாதே கண்களே
பெண்களை நம்பாதே''

என்று எழுதும்போது சித்தர்களின் சிந்தனைச் சுவடுகளைக் காணலாம்.

'பராசக்தி' படத்தில்,

''தேசம் ஞானம் கல்வி ஈசன் பூசையெல்லாம்
காசுமுன் செல்லாதடி - குதம்பாய்
காசுமுன் செல்லாதடி
ஈசனும் ஈசனார் பூசையும் தேசத்தில்
காசுக்குப் பின்னாலேடி - குதம்பாய்
காசுக்குப் பின்னாலேடி''

என்று பாடியுள்ளார். இதில் குதம்பைச் சித்தரின் குறிப்பிடத்தக்கப் பாணி குதித்துக் கும்மாளம் போடுகிறது.

பாரதியார்

'மணமகள்' படத்தில் ஒரு தொகையறா. அதில்,

''வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானம் அளந்த தனைத்தும் அளந்திடும்
வன்மொழி வாழியவே''

என்ற பாரதியாரின் வரிகள் 'காலைத் துயில் எழுவோம்' என்ற பாடலுக்கு வைரமுடி ஆயிற்று.

'பாட்டுக்குள்ளே நல்லபாட்டு - எங்கள்
பாரதி பாட்டு''

என்று ஒரு பாடல் முழுவதும் பாரதியின் புகழைப் பாடுகிறார். அது

கற்பனைச் சொற்பொருள்பாட்டு, பெண்ணின் விடுதலைக்கும் வந்த பாட்டு என்று போற்றுவார்

''நாராயணகவியின் பலகவிதைகள் கீர்த்தனை அமைப்புகளுடன் கருத்துகளுக்கும் இசைக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளன. மரபுவழியில் பாடுபொருளுக்கு ஏற்ற நிலையில், மெட்டமைப்பு. நிலையில் இசைப்புலமையும் வெளிப்படும் பாங்கில் இவர்தம் கீர்த்தனைகள் அமைந்துள்ளன. கருநாடக இசையில் மரபு வழி நின்று மக்களைக் கவரத்தக்க முறையில் புதிய மெட்டுகளில் கீர்த்தனைகளைப் படைத்தவர் உடுமலை நாராயண கவி, பல்லவி, அனுபல்லவி, சரணம், தொகையறா, கண்ணிகள், பாட்டு, இராகமாலிகா என்பது இவர்தம் கீர்த்தனையின் கூறுகள். நாராயணகவி தனது கீர்த்தனைகளில் சகானா, நவரங்கன்னட, தேசிய சிந்து, பஹாடி, மில்ரசாமா, கல்யாணி முதலான இராகங்களைப் பயன்படுத்தி உள்ளார். மேலும் பாரதி, தாயுமானவரின் மெட்டுகளும் இவர்தம் பாடல்களில் இடம்பெற்றன. இலக்கியம், பதங்கள், இசை நுட்பம் முதலான கூறுகள் அடங்கிய கீர்த்தனைகளும் கவிஞர் தம் படைப்புகளில் காணலாகின்றன. கீர்த்தனை மிக்க பண் இலக்கண நயம் பெற்றது என்பதற்கு இவர்தம் பாடல்களே சான்றுகளாம்'' என்பார் இரா. வசந்தமாலை. (உ நா.ப.பா., பக்.39)

கீர்த்தனை

இதற்கு இசைப்பாட்டு என்று பொருள் இறைவனைப் போற்றிப் புகழும் பாடல்களே கீர்த்தனைகள் தமிழில் முத்துத் தாண்டவர் அருணாசலக் கவிராயர், மாரிமுத்தாப் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி போன்றோர் கீர்த்தனைகளை எழுதியுள்ளனர்.

உடுமலையாரும் இசை நிலையிலும் கருத்தின் அடிப்படையிலும் பல கீர்த்தனைகளை எழுதியுள்ளார். இவற்றை இரா. வசந்தமாலை, ''மரபுவழிக் கீர்த்தனைகள், பாடுபொருளுக்கேற்ற கீர்த்தனைகள், மெட்டமைப்புக் கீர்த்தனைகள், இசைப்புலமை வெளிப்படும் கீர்த்தனைகள்'' என்று நான்கு வகையாகப் பகுக்கிறார். (உ.நா.ப.பா., ப.34)

உடுமலையார் 'கண்ணகி' படத்தில் மூன்று கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்.

''போர்வேநதர்கள் போற்றும் புனித ஏர் வேந்தர்கள்
நாடு
கார் வேந்தன் ஐந்தளுவும் போல கருணையாளர்
நாடு''

என்பது இவரது ஈரடிக் கண்ணியாகும். தொகையறா என்பதும் கீர்த்தனை ஓர் உறுப்பாகும்.

"கண்டால் கொல்லும் விஷமாம்
கட்டழகு மங்கையரை - நான்
கொண்டாடித் திரியாமல்
குருடாவது எக்காலம்"

என்பதும் ஒரு 'தொகையறா'.

ஒவ்வொரு சுவைக்கும் ஒவ்வொரு ராகம் உண்டு. பக்திச் சுவைக்குக் 'கல்யாணி' உகந்தது என்பர்.

"ஆவினன்குடி மேவும் குமரா
அகில லோக ஜீவாதாரா"

என்பது இவரது பக்திப் பாடல்.

இசைத்திறன்

ஒரு நல்ல பாடலாசிரியன் நிச்சயம் இசை நுணுக்கங்களை அறிந்தவனாக இருக்க வேண்டும். இவ்வகையில் நாராயணகவி முதன்மையானவர்.

1. நீதானல்லால் துணையார் அம்மா - கௌரி மனோகரி **(வேலைக்காரி)**
2. நடையலங்காரம் கண்டேன் - கரகரப்பிரியா (குபேர குசேலா)
3. கல்வியைப்போலொரு செல்வம்-ஆரபி (தமிழறியும் பெருமாள்)
4 மானமெல்லாம் போனபின்னே - மிஸ்ரசாமா **(கண்ணகி)**
5. வந்தனள் ஒரு சுந்தரி - தேசிகச் சிந்து **(கண்ணகி)**
6. ஆண்டருள் ஜெகதாம்பா - கதன குதூகலம் (குபேர குசேலா)
7 நாடு செழித்திடவும் உள்ளமே நாடு - தேசிகச் சிந்து **(வனசுந்தரி)**
8. ஓரிடந்தனிலே நிலையில்லா துலகினிலே - கீரவாணி **(வேலைக்காரி)**
9. பூதலம் புகழ் ஜோதிநிலவும் - பூபாளம் **(கண்ணகி)**
10. காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே - யதுகுலகாம்போதி **(காவேரி)**
11. உலகத்திலே உன்னதமாய் - ஆனந்தபைரவி **(வேலைக்காரி)**
12. கற்பனைக் கலைஞன் கருத்தினிலே - சண்முகப்பிரியா **(விஜயகுமாரி)**

திரைப்படத்தில் முதன்முதலில் சிந்துப் பாடல்களையும் சந்தங்களையும் புகுத்தியவர் கவிராயர்தான்.

தெருக்கூத்து, தெம்மாங்கு, வில்லுப்பாட்டு, தாலாட்டு, ஒப்பாரி, வழி நடைச் சிந்து, நாடகப் பாடல், லாவணி, வண்டிக்காரன் பாட்டு, தேசிங்கு ராஜன் பாடல், குறத்திப் பாட்டு, பள்ளுப் பாட்டு, குறவஞ்சி, கோமாளிப் பாட்டு என்று அனைத்து நாட்டுப்புறப் பாடல் வடிவங்களையும் திரைப்படங்களுக்காகப் பயன்படுத்தியுள்ளார்.

திரு. சங்கைவேலன், "பூக்காரன், மாட்டுக்காரன், விவசாயி, ஆலைத் தொழிலாளி, ஈச்சம்பழம் விற்பவன், விளக்கு விற்பவன், மருந்து விற்பவன், பொய்க்கால் குதிரை ஆட்டக்காரன், குல்லா வியாபாரி, ஏலம் போடுபவன், மீன் பிடிப்பவன் என்று சமுதாயத்தின் அத்தனை தரப்பு மக்களின் பாடல் பாணிகளையும் கையாண்டுள்ளார்" என்பார்.

நையாண்டி

இவரது பாடல்களில் நையாண்டியும் நகைச்சுவையும் மலிந்து கிடக்கின்றன. மதுவின் கேடு, கறுப்புப்பணம், விவசாயத்தின் முக்கியத்துவம், வேலையில்லாத் திண்டாட்டம், பெண்கள் முன்னேற்றம், அரசியல்வாதிகளின் அட்டகாசம், போலித் துறவியரின் தவசு, சம்பளப்பற்றாக்குறை ஆகிய கருத்தில் அமைந்த பாடல்கள் நையாண்டியாக இருந்தாலும் உண்மை நிலையைப் படம்பிடித்து காட்டுவதுபோல் உள்ளன.

> **"கருப்பு மார்க்கெட்டில் போய் மறைந்தாயோ**
> **கஞ்சன் கையில் சிக்கிக் கொண்டாயோ**
> **திருப்பதி உண்டியலில் போய் விழுந்தாயோ**
> **தேர்தலில் சிக்கித் தேய்ந்து போனாயோ"**

என்று 'பணம்' படத்தில் எழுதியுள்ளார்.

இத்துடன் இவர் சீர்திருத்தக் கருத்துக்களையும் நகைச்சுவையோடு சொன்னார்.

தாலாட்டுப் பாடல்

தாய்மையின் இசையே தாலாட்டு. தொட்டில்தான் மனிதனின் தொடக்கப் பள்ளி. அந்தத் தாய்தான் முதல் ஆசிரியர். உடுமலையார் தாலாட்டு வடிவிலும் சில பாடல்களைப் பாடியுள்ளார்.

> **"தாலேலோ தாலேலோ**
> **பலகாலம் வேதனைதான்**

நிலையான தல்ல
விழிமூடி இதுவேளை
துயில்வாய்என் கண்ணே"
"ஆராரோ ஆராரோ ஆராரோ
கோவில் காளை நீ பாப்பா
குண்டு பசவப்பா
கோமாளிக் குட்டிப்பாப்பா
கண்மூடித் தூங்கப்பா".

எனத் தாலாட்டுப் பாடல்களைப் புனைந்துள்ளார். இவற்றில் தாலேலோ என்பது புலவர் வழக்காகவும் ஆராரோ என்பது மக்கள் வழக்காகவும் உள்ளது.

கும்மிப்பாடல்

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் ஒலிக்க கொட்டி முழக்கு மந்த கூட்டமுதப் பாட்டே கும்மிப்பாட்டு. நாட்டுப்புறங்களிலும் ஏட்டிலக்கியங்களிலும் இதன் செல்வாக்கு மிகுதி. உடுமலையாரும் திரைப்படங்களில்,

"வாரீர் விளையாடுவோம்
எல்லோரும் கூடி ஓடி
கோகுல மங்கையர் போல்
கோதரும் பூங்காவில்
கோலாடிக் கும்மிகொட்டி
கோலாகலமாய் மகிழ்ந்து"

என்பது போன்ற பாடல்களை எழுதியுள்ளார்.

ஒப்பாரி

'மங்கையர் திலகம்' என்று ஒரு படம். அதில் திருந்தாத தாயைத் திருத்தத் தந்தைக்கு மகனே அதிரடித்திட்டம் தீட்டித் தருகிறான் மனைவியானவள் இவனைப் போய் கல்யாணம் பண்ணிக் கொண்டோமே என்று ஒப்பாரி வைக்கிறாள்.

"அத்தைமகன் கேட்டானே - ஒங்
கண்ணம்புள்ளை கேட்டானே
முத்துரங்கம் கேட்டானே
மோகன சுந்தரம் கேட்டானே
எம்.ஏ. கேட்டானே பி.ஏ. கேட்டானே
கொடுத்தியா பாவி".

என்று பாடி அழுகிறாள். இதில் ஒப்பாரியின் சாயலை ஏற்றியவர்

அடுத்த சரணமாக ஒப்பாரியையே சேர்த்துக் கொள்கிறார்.

"புளியங் கொம்பைத் தேடியல்லோ
புளியங் கொம்பைத் தேடியல்லோ
புலிமேல் தவம் கிடந்தேன்
புலிமேல் தவங்கிடந்தேன்
அடி என்ன பெத்த ஆத்தா
நான் பாவி சண்டாளி
புடிச்ச கொம்பு முருங்கக் கொம்பு
போனவிதம் காணேனே"

என்பது அசலான நாட்டுப்புறத்து ஒப்பாரி.

வில்லுப்பாட்டு

1948ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா தலைமையில் ஒரு மாநாடு நடைபெற்றது. அதில் உடுமலையார் எழுதிய வில்லுப் பாடலைக் கலைவாணர் பாடினார்.

துரோணர் மகனைக் குதிரைப் பெற்றதும்
அந்தக்காலம்! அது அந்தக்காலம்!
அதனைச் சொல்லிச் சொல்லி சிரிப்பாய் சிரிக்குது
இந்தக் காலம்! இது இந்தக் காலம்.

திருவரங்க ஏகாதசி நாளில்
சுவர்க்க வாசல் திறந்து
திவ்விய தரிசனம் காட்டுவது
அந்தக் காலம்! அது அந்தக்காலம்
மனவுறுதி மிகுந்த உலக சிரேஷ்டம்
மகாத்மா காந்தி திருவருப்
படத்தைத் திறந்து வைப்பது
இந்தக் காலம்! இது இந்தக் காலம்

என்று பாடினார். இப்பாடலைப் பின்னர் 'நல்லதம்பி' யில் சேர்த்தபோது இந்த மூன்று சரணங்களும் தணிக்கை குழுவால் விலக்கப்பட்டன.

கூத்துப் பாடல்

கூத்துகளில் கட்டியங்காரன் பலவிதமான பாடல்களைப் பாடுவான். அவற்றில் கொஞ்சம் பைத்தியக் காரத்தனம் இருக்கும். நகைச்சுவை இருக்கும்; கிண்டல் இருக்கும்; கேலி இருக்கும்.

"தன்னானத்தானா தன்னானத்தானா
தன்னானத்தானா தன்னானத் தானா"

என்ற மெட்டில் ஒரு பாடல். அதன் சாயலில் ஒரு பாடலை உடுமலையார் எழுத, அதனை மனோகரா நாடகத்தில் அரைப் பைத்தியமாக இருக்கிற வசந்தன் பாடினான்.

"சந்தேகமில்லை...சந்தேகமில்லை
எதற்கும் என்றும் எள்ளளவேனும்
சந்தேகமில்லை...சந்தேகமில்லை
காக்கா கருப்பு சந்தேகமில்லை
கடல்நீர் உப்பு சந்தேகமில்லை
ஆண்பிள்ளைக்கு மீசை முளைக்கும்
சந்தேகமில்லை
அது கிடையாது பொம்பளைக்கு
சந்தேகமில்லை
அப்பன் கூடப் பிறந்தவள் அத்தை
சந்தேகமில்லை
அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா
சந்தேகமில்லை"

என்பதுதான் கூத்துப் பாடலின் சாயலில் அமைந்த பாடல் இதனை அண்ணா பாராட்டும்போது, "பைத்தியக்காரன் என்ன பாடுவான், என்பதை யூகித்து அழகாக அமைத்திருக்கின்றார், அந்த ஒட்டி உயர்ந்த பேய்க்காற்றடித்தால் கீழே விழுந்து விடும்படியான உருவமைந்த உடுமலை நாராயணகவி," என்று குறிப்பிடுகின்றார். அவரும் இந்தச் சாயலில் "விழுந்து சிரித்தால் வயிற்றை வலிக்கும் சந்தேகமில்லை" என்று எழுதி விடுகிறார். கூத்துப்பாடலின் சிறப்பே இதுதான்.

லாவணி

1939-ல் திருநீலகண்டர் படப்பிடிப்புக்காக வந்திருந்த தியாக ராஜபாகவதர் ஓய்வில் கம்பெனி அலுவலகத்தில் இருந்த தபேலாவை வாசித்துக் கொண்டிருந்தார். அதற்கேற்ப லாவணி பாடிக் கொண்டிருந்தார். இப்படத்தில் கலைவாணரும் நடித்திருந்தார் அவருக்குப் பாட்டெழுத கவிராயரும் வந்தார்

பாகவதர் தபேலா வாசித்து லாவணி பாடுவதைப் பாராட்டிய கலைவாணர் திடீரென்று துள்ளிக் குதித்தார். "ஆ! ஒரு யோசனை திருநீலகண்டரில் என்ன பாட்டு பாடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இப்போது யோசனை கிடைத்துவிட்டது. காமன் கதையை நம் கிராமங்களில் பாடுவது வழக்கம். நானும் துரைராஜும் எரிந்த கட்சி எரியாத கட்சியாய் இருந்து இந்த 'லாவணி'யைப் பாடினால் என்ன?" என்றார்.

அனைவரும் ஆமோதித்தனர். உடனே உடுமலையார் ஒரு லாவணியை எழுதிக் கொடுத்தார். இதற்கு மக்களிடம் ஏகப்பட்ட வரவேற்பு இருந்தது.

மருதை: பங்கையன் நாவில் வாழும்
பான்மைபோல் அடியேன் நாவில்
மங்கையே நீ இருந்து
மாரவேள் கதை பாடம்மா.

என்று தொடங்கியது பாடல் விருத்தத்தில்.

கல்விக்கரசி தமிழ்ச் செல்வி என்றொரு பெண்ணைக்
கை கொழுதீரே அந்த மங்கை! மங்கை
மறையவள் நாவிலவள் உறைவது நிஜமானால்
மலஜலம் கழிப்பது எங்கே? எங்கே?

என்று பகுத்தறிவு வாதம் பேசுகிறார்.

-சட்டமாய்ப் பேசவந்த குட்டகவியே-சிவன்
கழுத்து கருத்த விதம் ஓது! ஓது!
-ஆலகால விஷத்தை அள்ளிக் குடிக்கும்போது
அமுக்கிப் பிடித்ததிலே அண்ணே அண்ணே
-அந்தக் கணபதிக்கு அந்தக் கணபதிக்கு
தொந்தி பெருத்த விதம்
கொழுக்கட்டை தின்னதினால் அண்ணே அண்ணே
-மங்கு சனிபிடித்த மண்டுப் புலவனே நீ
மரியாதை நீட்டு கம்பி! கம்பி

என்று லாவணிப்பாடல் வினா விடையாக விவாதம் தொடர்ந்தது.

புதிரும் பழமொழிகளும்

"தத்தக்கா புத்தக்கா நாலு காலு
தானே நடக்கையிலே ரெண்டு காலு
உச்சி வெளுத்தா மூணு காலு
ஊருக்குப் போகையிலே பத்துகாலு"

என்ற பாடல் நாட்டுப்புறத்து மக்களின் அழிப்பான் கதை பாணியில் அமைந்துள்ளது.

"தோலிருக்கவே பழத்தில் சுளை மறைஞ்சது"

(வனசுந்தரி)

"கூழென்றாலும் பசித்த வேளை
குளித்து நன்றாய் குடிக்கணும்"

(உ.நா.பா., ப.231)

"காற்று வந்தபோது தூற்றுவார்கள்"

(உ.நா.பா., ப.262)

என்பது போன்ற பழமொழிகளையும் ஏராளமாகப் பொதிந்து பாடல்களை எழுதியுள்ளார்.

கதா காலட்சேபம்

'கிருஷ்ணபக்தி' என்ற படத்தில் பி.யு. சின்னப்பாவுக்காக ஒரு காலட்சேபத்தை எழுதிக் கொடுத்தார். ஸ்வரநயங்களுடன் கூடிய சிறந்த நீண்ட பாடலாகும்.

மாமரத்தைக் காட்டி ராமராமராம என்று வால்மீகியைத் திருத்தியது போல நாராயணகவி அவர்கள் தாசி என்ற பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லி "சீதா சீதா எனவே ஜெபம் புரிவீர் தினமே" என்று பாட்டாகப் பாடியுள்ளார்.

கவிராயர் கதா காலட்சேபம் எழுதும் பயிற்சியை முத்தையா பாகவதரிடம் கற்றுக் கொண்டார். அவருக்குக் 'காயக சிகாமணி' ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் என்று பட்டம் உண்டு.

கிந்தனார்

அடித்தளத்தில் உழன்று கொண்டிருக்கும் மக்களின் மனப்போக்கை மாற்றி வாழ்க்கையை உயர்த்துவதற்கு அடிப்படை கல்வியே என உணர்ந்து அதை வலியுறுத்திப் பாடியுள்ளார். தீண்டாமை, வறுமை, அறியாமை, ஆதிக்கச் சாதி, சாதிப் பாகுபாடு, பிறப்பினால் ஏற்றத் தாழ்வு எனப் பல கொடிய நோய்களால் அல்லலுறும் ஆரோக்கிய மற்ற சமூகத்திற்கு கிந்தனார் 'சரித்திரக் கதாகாலட்சேபம்' மூலம் ஒரு மாற்றத்தை காண விரும்புவதை உணர முடிகின்றது என்பார் இரா. விமலா. (ப. 40)

1942-இல் டி.ஆர். ராஜகுமாரியின் புதுமனை புகுவிழா நடத்தினார். இதில் பாட்டுபாட எம்.எஸ். சுப்புலட்சுமி வர மறுத்து விட்டாராம். இதனைக் கேள்விப்பட்டு கலைவாணர் கவிராயரோட கலந்து 'கிந்தனார்' கலை நிகழ்ச்சியை உருவாக்கினார். இதில் உள்ள பாடல்களைக் கவிராயர் எழுதித் தந்தார். அன்று இது அரங்கேற்றமாகி மூன்றுமணி நேரம் நிகழ்த்தப்பட்டது.

''என்னைப் புரிந்து கொண்டு பாட்டெழுதக் கூடியவர் அவர் ஒருவர்தான். 'ஐயா' ஒருத்தருக்குத்தான் என் இதயத்தில் பாட்டெழுத இடம் கொடுத்திருந்தேன்'' என்று கலைவாணரால் பெரிதும் மதிக்கப்பட்டார்.

திருநெல்வேலியில் நெல்லையப்பர் கோயில் வசந்த மண்டபத்தில் ஒரு பாகவதர் நந்தனார் கதை நடத்தினார். அதே ரேநத்தில் ஒரு அரங்கில் கலைவாணர் கிந்தனார் கதா காலட்சேபம் நடத்தவே, கோவில் பக்தர்கள் அனைவரும் இங்கு வந்துவிட்டனர் கண்டவர்கள் கைத் தட்டிப் புகழ்ந்து கொண்டனர். கிந்தனார் கதையும் கல்வியின் அவசியத்தைத்தானே சொல்கிறது என்று எண்ணினார் பாகவதர்

அடுத்த சில மாதங்களில் பக்கத்து ஊரில் ஒரு சபாவில் கலைவாணரின் கிந்தனார் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைக் கேட்க அதே பாகவதர் வந்தார். கிந்தனை ரசித்தார். கதை முடிந்ததும் மேடையில் ஏறி ''சரசுவதியோட அனுக்கிரகம் உங்களுக்குப் பூரணமாக உள்ளது நீங்கள் தீர்க்காயுசா இருக்க வேண்டும்'' என்று ஆசி கூறினார்

இவ்வாறு பாகவதர்களையே வியக்க வைத்தது உடுமலையாரின் கிந்தனார் கதை என்ற. உண்மை விளங்கியது.

தஞ்சையில் கிந்தனார் கதா கலாட்சேபம் நடை பெற்றபோது அதனை அண்ணா பார்த்து மகிழ்ந்தார். 15.8.1943-ல் திராவிட நாடு இதழில், ''கதை -கிதையல்ல! கட்டுரையுமல்ல! காலட்சேபம் சார். கதாகாலட்சேபம். ஆமாம் நாகர்கோயில் சுடலை கிருஷ்ணபாகவதரின் அதிரச மிகு அலங்கிருத அபிநய நவயுகக் காலட்சேபம். உடுமலை ஈந்த உருவில் மெலிந்த நகைச்சுவை நாராயணகவியின் விருப்பப்படி ஜீவன் தாது நடமாட விடுபவர் நமது என்.எஸ். கிருஷ்ணன் கிந்தனாரைச் சந்தித்தேன்'' என்று எழுதினார்.

இவர் இன்னொருமுறை செங்கல்பட்டில் இக்கதாகாலட்சேபத்தைப் பார்த்துவிட்டு ''கோபால கிருஷ்ண பாரதியாரின் ஆன்மீகக் கருத்துகளுக்கு இணையாக சீர்திருத்தக் கருத்துகளைத் தாங்கி இருக்கின்ற அருமையான கதாகாலட்சேபம்'' என்று பாராட்டினார்.

ஒருமுறை தியாகராஜ பாகவதரின் வீட்டில் ஒரு நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் நந்தனார் கதா காலட்சேபம் நடத்த வேண்டும் என்று அவர் விரும்பி ஒரு பாகவதரையும் ஏற்பாடு செய்தார். ஆனால் அன்று பாகவதர் பாடுவதற்கு வரவில்லை. காரணம் பாகவதர் வீட்டில் பாடினால் தீட்டு ஏற்படும், குலச்சம்பிரதாயத்திற்கு இழுக்கு வரும் என்று எண்ணியதுதான். இதனால் பாகவதர் மிகவும் வருத்தப்பட்டார். உடனே கலைவாணர் கவிராயரிடம் நந்தனார் வேண்டாம் கிந்தனார் பற்றி

பாடுவோம். உடனே எழுதுக என்றாராம். இப்படித்தான் பிறந்தது கிந்தனார் கதாகாலட்சேபம். இது எகனை மொகனையாக வந்த தலைப்பு என்பவரும் உளர்

''அவ்வக்கால அடக்கு முறையாளர்களை, ஆதிக்க சக்திகளை ஒடுக்கப்பட்டவர்கள் எதிர்ப்பதும் ஆதிக்க முக்திகள் அவர்களை இழித்தவர்கள் என்று நாமகரணம் சூட்டுவதும் பின்னர் அழுத்தப் பட்டவர் முன்னணிக்கு வரும்போது அவர்களின் நியாயத்தையும் வீரத்தையும் போற்றுவது மேல் தட்டினரின் சாகசம். பகடியாக அங்கதமாக (Satire) நந்தனாரைக் கிந்தனராக்கி நம்முன் நிறுத்துகின்றனர் கலைவாணரும் உடுமலையாரும்'' என்பார் சங்கை வேலன் (4:70)

ஒரு தலித்தந்தை மகனின் படிப்பையும் நகர பிரவேசத்தையும் மறுக்கின்றார். இதை மீறி அவன் நகரத்துக்குப் போய் படித்து கல்வி அலுவலராக உயர்வதுதான் கதை.

''கிந்தனார் உங்களுத் தெரிந்தவர்தான். பலதடவை நீங்களே கூறியிருப்பீர்கள். மறந்து விட்டீர்களா? சினிமா நடக்கும்போது நந்தனாரோ கிந்தனாரோ நடக்குதாமே. போய் பார்ப்போம் வா'' என்று நீங்கள் ஒருவரை ஒருவர் அழைத்தது இல்லையா. அப்போது உங்களையும் அறியாமல் கிந்தனார் பெயரைக் கூறினீர்களே நினைவுக்கு வருகிறதா. பழைய காலத்தில் இருந்தே 'கி', என்ற எழுத்து விசேஷமானது. அதிலே ஒரு தனிச்சுவை தனிநயம், தனியான பண்பு, தனியான பணிவு உண்டு! ''ஏதாவது இட்லி-கிட்லி இருந்தா கொடுங்கோ! ''கொஞ்சம் காபி-கீபி இருந்தா தாருங்கோ!'' ''ஏதாவது வேலை கீலை இல்லீங்களா?'' என்று 'கி' எழுத்து வருவது சர்வ சாதாரணம்! அதிலே உள்ள நயமே அலாதி!'' இதுதான் கிந்தனார் கதாகாலட்சேபத்தின் அறிமுக உதையாக அமைகிறது.

கர கரவென சக்கரம் சுழல
கரும்புகையோடு வருகிற ரயிலே
கனதன வான்களை ஏற்றிடும் ரயிலே
ரயிலே ரயிலே ரயிலே! ரயிலே ரயிலே ரயிலே!
மறையவரோடு பள்ள பறையரை ஏற்றி
மதபேதத்தை ஒழித்திட்ட ரயிலே
இருபுறமும் ஜன்னல்கதவுகளோடு
எஸ்.ஐ.ஆர். என்ற எழுத்துள்ள ரயிலே
ரயிலே ரயிலே ரயிலே! ரயிலே ரயிலே ரயிலே!
தண்டவாளத்தின் மீதேறி
தாண்டவமாடிடும் ஆண்டன் நீயே!

லண்டனை விட்டு இந்தியாவுக்கு
ரமணியமாய் வந்த ரயிலே!
ரயிலே ரயிலே ரயிலே! ரயிலே ரயிலே!
தேச தேசம் சுற்றிக் காட்டிடும் ரயிலே
மாசில்லாத உன் மகிமை என் சொல்வேன்
மதராசுக்குப் போகிற ரயிலே
ரயிலே ரயிலே ரயிலே! ரயிலே ரயிலே ரயிலே!

என்று கிந்தனார் ரயிலில் பயணம் செய்வதைப் பற்றி பாடினார் சென்னையின் பெருமையைத் தன் தந்தையிடம் சொல்லும்போது

"சென்னை என்றொரு ஸ்தலமிருக்குதாம்! அங்கு
சென்ற பேருக்கு செலவும் வரவும் அதிகமாகுதாம்.
அய்யனே உயரும் லைட்டு ஹவுஸ் தெரியுதாம்
அதைப் பார்த்து ஸ்டீமர் ஊரிருக்கிற
திசையை அறிகிறதாம் அய்யனே
போய்வரக் கொஞ்சம் பொருளை தாருமே"

என்று மகன் விவரிக்கிறான். அங்கு போக வேண்டும் என்று கூற, அதற்கு அவனது தந்தை,

"மடப்பயலே ஞாயந்தானா நீ சொல்லு
நல்ல நாகரீகம் நம்ம சாதிக்கடுக்குமோ?
காடுங்கரை உழுது பிழைப்பு - அது
கடவுள் நமக்கமைத்த அமைப்பு
ஏடெழுத்தாணி கொள்ளும் படிப்பு - மிக
ஏற்றமான ஜாதிக்காம் அந்தப் பொறுப்பு"

என்று தடுக்கிறார்.

1938-ல் நீதிக்கட்சியின் தலைவரானார் பெரியார். முதல் இந்தி எதிர்ப்புப் போரில் வெற்றி பெற்றதும் ஆலய நுழைவுகளில் வெற்றி பெற்றதும் தமிழிசை இயக்கம் தொடங்கியதும் 1935-ல். கே.பி. சுந்தராம்பாளின் 'நந்தனார்' வெளிவந்ததும் 1942-ல். தண்டபாணித் தேசிகர் நடித்த 'நந்தனார்' வெளிவந்ததும், பெரியாரின் சீடரான கலைவாணருக்கும் கவிராயருக்கும் ஏற்பட்ட நட்பும் 'கிந்தனார்' நிகழக் காரணம் ஆனது என்பார் இ.கி. இராமசாமி (உ.நா பா., ப.147)

அத்துடன் 'கிந்தனார்' கதா காலட்சேபத்தின் நோக்கம் பற்றி கூறும் போது "மங்கிவந்த கதாகாலட்சேபத்திற்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும்; அதனைப் பகுத்தறிவு பிரச்சரத்திற்குப் பயன்படுத்த வேண்டும்; பக்தியையும் முக்தியையும் விட படிப்பும் பதவியும் உயர்ந்தன என்பதை நிறுவ வேண்டும்; தீண்டாமை ஒழிப்புக்கு உதவ வேண்டும்; தமிழிசையை வளர்க்க வேண்டும்; சிரிப்பூட்டிச் சிந்தனையை வளர்க்க

வேண்டும்; பட்டுக்கோட்டை அழகிரி, திருச்சி, புத்தூர் குதிரை வண்டி நிலையம்' போன்ற நலிந்தோருக்கு உதவ வேண்டும்'' என்று குறிப்பிடுகிறார்.

இதனை முதலில் 1943-ல் 'இழந்த காதல்' நாடகத்தில் வரும் திருமணக் காட்சியில் நிகழ்த்தினர். 1944-ல் 30 இடங்களுக்கும்மேலாக நிகழ்த்தப்பட்டது. பின்னரே கலைவாணர் சிறையிலிருந்து மீண்டதும் 'நல்லதம்பி' திரைப்படத்தில் இணைக்கப்பட்டு மிகச் சிறந்த கலைப் படைப்பாகக் கருதப்பட்டது.

''கடவுள், மதம், சாத்திரம், சடங்கு, விதி, சாதி முதலியன பற்றி விதைக்கப்பட்ட நம்பிக்கைகள் தீர்வுகளுக்கு இன்னும் தடைக் கற்களாக இருக்கின்றன. பொருளாதாரம், கல்வி, பதவி, கலப்பு மணம், பகுத்தறிவு முதலியவற்றால் சொல்லப்பட்ட தீர்வுகள் முழுவெற்றி அடையவில்லை. ஆலய நுழைவு, போக்குவரத்துகளின் வருகை, உணவகம், திரையரங்கு, இயந்திரத் தொழில்முறை, அரசியலில் அதிகாரப் பகிர்வு ஆகியன கிடைத்த பின்பும் சாதீயத்தின் கூர்மை மழுங்கவில்லை. ஆகவே கிந்தனாரின் மூலம் சொல்லப்பட்ட தீண்டாமை ஒழிப்புத் தத்துவம் முற்போக்குச் சிந்தனையாளர்களுக்கு 'உவப்பத் தலைகூடி' பேசும் ஒரு செய்தியாகத்தான் எதார்த்தத்தில் தோன்றுகின்றது. மேல்சாதிக்காரர்கள் மனமாற்றம் அடைந்து விட்டுக் கொடுப்பதும் தாழ்த்தப்பட்டோர் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தி ஒப்புரவோடு நடந்து கொள்வதும் தான் புதிய தீர்வாக இருக்க முடியும்'' என்ற இ.கி. இராமசாமியின் முடிவு எண்ணிப் பார்க்கத் தக்கது.

''வர்க்கப் பேதத்தையும் வருணப் பேதத்தையும் ஒரு சேரத் தாக்கிச் சமத்துவ, சமதர்ம சமுதாயத்தை நிறுவிட வேண்டும். தந்தை பெரியார், தோழர் ஜீவா ஆகியோர் அதற்குரிய வழியை நமக்குக் காட்டியிருக்கிறார்கள். அந்த வழி நடைப் பயணத்தில் இயக்கத்தில், போராட்டத்தில் உடுமலை நாராயணகவியின் கிந்தனார் கதா காலட்சேபம் நமக்கும் உற்சாகத்தை ஊட்டும். கலாச்சாரப் படையின், பார்வை, படைப்புக்கு உடுமலையாரின் கிந்தனார் ஆதர்சமாக விளங்குவார்'' என்று கூறுவார் சங்கை வேலன். (ப.75)

''உடுமலையார் கொங்கு நாட்டவர். கொச்சைத் தமிழில் பேசிடும் இச்சைக்கு இனிய கிராம மக்களின் இதய ஒலியை நமக்கு அறிவித்து வருபவர். சினிமா, நாடகத் துறைகளில் நாட்டுப் (புறப்) பாடல் முறைக்கு நல்லதோர் இடந்தேடித் தந்தவர்'' என்று அறிஞர் அண்ணா கூறுவது பொருத்தமான புகழுரையாகும்.

தனிப்பாடல்கள்

இவர் 'உழவன் உள்ளம்' என்று ஒரு பாடல் எழுதினார். இது நாட்டு மக்களிடையே பகுத்தறிவைப் பரப்பியது.

"பார்முழுதும் ஏர் முனையிலே - உழவன்
பாட்டிலே கொண்டாட்டம் போடுது - பல
பேர் எழுதும் பேனா கீனா உழவன்
பின்னே தன்னானம் பாடுது (இந்தப் பார்)
மான காக்க வந்தது வேட்டி சேலை
கானம் பாட்றவன் - உவ
மானம் தேட்றவன் - தவ
ஞானி இன்றவன் - தர்ம
தானம் பண்றவன்
இன்னம் அவக அப்பன் ஏழரை கோடி
எவவனா இருந்தாலும் சரி
இந்த வயலுக்குள்ளே
பயிர் மொளைக்கணும்
தோட்டங்காடு அதனால் வயிறு
வளத்து உயிர் பொழைக்கணும் (இந்தப்பார்)

இப்பாடலை அண்ணா 1951ஆம் ஆண்டு மே தினவிழாவில் மேற்கோள் காட்டி பேசினார். "இன்று சீர்திருத்த நோக்கத்தோடு புரட்சிக் கவிதைகளை நாட்டுக்கு நல்கி வரும். உடுமலை நாராயணகவி அவர்கள் நம்மிடையே இருப்பது பற்றி நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். தெள்ளத் தெளிய பகுத்தறிவுப் போதனைகளைத் தந்துவரும் அவரைப் பாராட்டுகிறேன். திராவிடப் பாட்டாளிகளின் எழுச்சிக்காகப் பகுத்தறிவு முரசு கொட்டும் பாடல்களைத் தீட்டி வருபவர்", என்பார்.

வாழ்த்துக் கவிதைகள்

"கந்தன் வள்ளி கல்யாணம் காதல் பாட்டு
கண்ணன் பல கன்னியரைக் கலந்த பாட்டு
அந்தி வண்ணன் சுடுகாட்டில் ஆடும் பாட்டு
அருத்தமற்ற சாமிகளுக்கனந்தம் பாட்டு
முந்தினவர் பாட்டிலுள்ள மொழியை மாற்றி
முன்னேற்றத் தடையான மூடர் பாட்டால்
செந்தமிழும் தென்னாடும் சிதைந்திடாமல்
சீர்திருத்தப் பாக்கள்பல திகழ்க நன்றே"

என்ற இப்பாடல் கோவையில் நடந்த முத்தமிழ் வளர்ச்சி மாநாடு 4.6.1950-இல் வாசிக்கப்பட்டது'முத்தமிழ் செழிக்க நீ பாடு' என்ற தலைப்பில் இப்பாடல் வெளிவந்தது.

ஒருமுறை தன் மீது காவடிச் சிந்து பாட வேண்டும் என்று கொத்தமங்கலம் சீனு வேண்டிக் கொண்டார். எனவே கவிராயர்,

நாதப் பிரம்ம வினோத பாக சங்
கீதத்தோர் அபிமானி - நமது
நண்பனாகிய சீனி - வாசன்
நானிலம் புகழ் மானி - எந்த
நாளுமே நீள் தயாளமே நிறை
நாநலம் தரும் சீனி''

என்று எழுதிக் கொடுத்தார்.

பொங்கல் தனிப்பாடல்

ஏருழுது பாடுபட்டு
எடுத்த நெல்லைக் கொடுத்திட்டு
ஆறவுன்சு அரிசிவாங்கி
ஈரவுன்சு கல்லொதுக்கி
காரிருள் மார்க் கெட்டிலே
கருப்பு வெல்லம் வாங்கிவந்து
சீருடனே பொங்கல் வச்சேன்
செல்லப்பொங்கல் பொங்குதண்ணே

என்று 1958-இல் கலைமன்றம் இதழில் எழுதினார்.

பிச்சைக்காரர் பாடல்

சென்னை மூர்மார்க்கெட்டில் பிச்சை எடுத்துப் பிழைத்து வந்த இரண்டு இளைஞர்களுக்கு உதவுவதற்காக அவர்கள் பாடிப் பிழைக்க ஒரு பாடல் எழுதிக் கொடுத்தார்.

''மெய் கண்டானை மக்கள்
மேன்மை கண்டான் தன்னை''

என்பது அந்தப் பாடலின் தொடக்கம். இது கவிராயரின் மனிதாபிமானத்தைக் காட்டும். இப்பாடல் கிடைக்க உதவியவர் கவிராயரின் உதவியாளரான கே.ஆர். செல்லமுத்து அவர்கள்.

வானொலிப் பாடல்

கவிராயர் நாடு விடுதலை அடைந்ததை எண்ணி மகிழ்ந்து ஒரு பாடல் எழுதினார் இதனை வானொலியில் கலைவாணர் பாடுவதாக ஏற்பாடு செய்தனர். சுதந்தர இந்தியா பண்டித நேருவின் தலைமையில் தீட்டிய திட்டங்களை இப்பாடலில் விளக்கினார். அரசு புதிய

திட்டங்களை விவசாயத்தின் முன்னேற்றத்திற்காக அறிவிக்கப் போவதைக் கவிராயர் விளக்கியிருந்தார்.

"சாத்வீக வீர சுதந்திர
சந்தோசத் திருநாள்"

என்பது பல்லவி.

"குருட்டுக்கு நல்ல கண்ணு வந்தாப்பல
மலட்டுப் பொம்பள. புள்ளை பெத்தாப்பல
தரித்திரன் புதையல் கண்டாப் போலே
தாமிரம் தங்கம் ஆனாப் போலே
தரிசு நிலத்தத் திருத்திக் கெணத்தப்
பறிக்கச் சொன்னாங்க.
தண்ணீர் இறைக்கச் சொன்னாங்க
தக்க வகையில் உதவி செய்வோமின்னாங்க.

மண்ணுவெட்டி செடிவெட்டி மாடாடு மூடுபட்டி
கண்ணுகுட்டிக்கி வாய்பெட்டி கடப்பாரை
களைவெட்டி
பண்ணைக் கேத்த தண்ணி தொட்டி
பட்டி நாய்க்கி கஞ்சித் தொட்டி
கண்ணிக்கயறு கூடைமுறம் சட்டி களங்கூட்டி
கலப்பை மூட்டி
கவலை வண்டி வால் கயிறு பரிவடங்களும் தோலு
பரிவடங்களும்
பயிர்வளர் உரங்களும் மேலும் கைச்சிலவுக்கும்
பண உதவி செய்வோமின்னாங்க"

என்பது பாடல்.

தேசபக்திப் பாடல்

கே.பி. ஜானகியம்மாள் நாடக நடிகை; நல்ல பாடகி. தாழ்த்தப்பட்டவரான விஸ்வநாத தாஸோடு பலர் நடிக்க மறுத்தபோது இவர் பாடி நடித்தார். தேசப்பக்தி பாடல்களை மேடையில் பாடி வந்தார். அவற்றுள் உடுமலையாரின் பாடல்களும் உண்டு. இக்காலக் கட்டம் 1930-முதல் 1936 வரை.

"காந்தி சொல்லைத் தட்டாதீங்க
காங்கிரஸ் காரர்களே"

என்ற பாடல் மிகவும் பிரபலம். இதனைத் திரும்பத் திரும்பப் பாடும்படிக் காங்கிரஸ்காரர்கள் கேட்டார்கள். உடுமலையார்

திரைப்படத்தில் புகழ் பெறுவதற்கு முன்னர் தேசப் பக்திப் பாடல்கள் மூலம் புகழ்பெற்றார். இப்பாடல் நடிப்புச் சுதேசிகளை இனங்காட்டியது.

தெய்வப் பக்தி பாடல்

இளமையில் இவர் ஒரு பக்தி மிக்க ஆத்திகராகவே இருந்தார். இவர் பருத்தி வணிகத்தால் கடன் பட்டுக் கஷ்டப்பட்டு ஊரை விட்டுப் போகும்போது திருவாவினன்குடி முருகன் மீது பக்திப் பாடலைப் பாடினார். 'ஆவினன் குடிவாழ் முருகா' என்று பாடல் தொடங்குகிறது.

கவிராயர் பகுத்தறிவுவாதியாக இருந்தாலும் நண்பர்களுக்காக பக்திப் பாடல் எழுதிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன ஒருநாள் அவர் தனது மகன் எஸ். ராமகிருஷ்ணனுடனும் பேத்தி கலாவதி யோடும் மாலை நேரத்தில் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் இல்லத்துக்குச் சென்றனர். அங்கு ஒரு பெரிய ஜமுக்காளத்தில் ஔவைநடராஜன், கவிஞர் எஸ்.டி. சுந்தரம், உளுந்தூர் பேட்டை சண்முகம் போன்றோர் உட்பட ஏறக்குறைய 25பேர் இருந்தனர்.

இவர்கள் போய் - காரில் இறங்கியவுடன் எல்லோரும் எழுந்து கவிராயரை வரவேற்று சிம்மாசனத்தில் உட்கார வைத்தனர். மற்றவர்கள் அனைவரும் கீழே உட்கார்ந்து கொண்டனர். அவர்கள் காபி பலகாரங்கள் சாப்பிட்ட பிறகு குடும்ப நலன், தொழில் நிலை ஆகிய அனைத்தைப் பற்றியும் பேசினர். வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டனர்.

பின்னர் உளுந்தூர் பேட்டை சண்முகம் தான் எழுதிய பாடல்களைச் சரி பார்க்கும்படிச் சொல்ல சில திருத்தங்களைக் கவிராயர் செய்து கொடுத்தார். சீர்காழி கோவிந்தராஜன் தான் கச்சேரியில் பாட ஒரு தமிழிசைக் கீர்த்தனை வேண்டும் எனக் கேட்டார். கவிராயரோ தனக்கு முதுமை வந்துவிட்டதால் இனிமேல் பாடல் எழுதுவது கடினம் என்று மறுத்து விட்டார். ஆனால் அவர் விடுவதாக இல்லை. எப்படியாவது ஒரு பாடல் எழுதித் தர வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஔவைநடராஜன் அவர்களோ, ''வாத்தியார் ஐயா, புலி கிழடானாலும் அது மானை அடித்துக் கொல்லாமல் விடுமா உடுமலையாருக்குப் பாடல் எழுதும் ஆற்றல் குறைந்து விட்டது என்றால் எங்களைப் போன்றவர்கள் நம்புவோமா. நீங்கள் மறுமுறை இவ்வாறு சொல்லாதீர்கள்'' என்று சொன்னார்.

சிறிது நேரம் மௌனமாய் இருந்த கவிராயர் குமரகுருபரர் பிரபந்த திரட்டைக் கொண்டு வரச் சொன்னார் பிறகு உளுந்தூர்

பேட்டை சண்முகத்திடம் இதில் உள்ள பாடல்களில் முதலடி ஈற்றடி சொல்லிக் கொண்டு வா என்றார் அவரும் 10 பாடல்களை வாசித்தார். இறுதியில்

> **"ஓராயிரம் கண்கள் வேண்டும்**
> **கோலாகலக் குமரனைக் காண"**

என்ற அடியையே பல்லவியாக்கினார். பிறகு மடமடவென்று அனுபல்லவி, சரணங்கள் வேகமாக வந்து கொண்டே இருந்தன. கடைசி 4 வரிகள் திருப்புகழ் போன்று சந்தத்துடன் இருந்தன. அத்துடன் அவரது சிந்தனை கலைந்து விட்டது.

அடுத்த நாள் அவர் சின்ன அண்ணாமலை வீடு, சிவாஜி வீடு, எம்.ஜி.ஆர். வீடு எல்லாம் போய் அவர்களோடு பேசிவிட்டு திரும்பும் போது அவருக்குத் திடீரென்று அந்தப்பாட்டின் சந்தம் நினைவுக்கு வந்தது. நேராக சீர்காழி வீட்டுக்குப் போய் பாடலை முடித்துக் கொடுத்தார்.

சீர்காழி கோவிந்தராசன் அவர்கள் அப்பாடலைத் தன் கச்சேரி களில் பாடிட அது பிரபலம் ஆனது அவர் கவிஞருக்குத் தட்டில் வெற்றிலை பாக்கு பழத்தோடு வெண்பட்டும் 1001 ரூபாயும் வைத்துக் கொடுத்தார்

"நாராயண கவியின் பாடல்கள் எளிமையானவை. நாட்டுப்புற பாடல்களைப் போல அவற்றை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். இதனால் இவர் பாடல்கள் திரைப்படக்கதையின் ஓட்டத்திற்குத் தடங்கலாக இல்லாமல் அமைந்தது. கம்பெனி நாடக மரபு வழி வந்த நாட்டுப்புற இசை, இவரது பாடல்கள் மூலம் திரையுலகில் தொடர்ந்தது. இவருக்குச் சாஸ்திரீய சங்கீதத்திலும் நல்ல தேர்ச்சி யுண்டு", என்பார் தியடோர் பாஸ்கரன்.

1948-ல் வந்த 'கிருஷ்ணபக்தி'யில் 'செங்கமலம் என்ற தாசி' என்று தொடங்கும் காலட்சேபம் ஒரு வகை. குபேர குசேலாவில் கரகரப்பிரியா ராகத்தில் 'நடையலங்காரம் கண்டேன்' போன்ற பாடல்கள் மூலம் சாஸ்திரீய ராகங்களைத் திரைப்படத்துக்கு ஏற்ப எளிதாக்கி மெட்டமைத்தார். பெரும்பான்மையான பாமர மக்களுக்குக் கர்நாடக இசையை சினிமா மூலம் வழங்கினார்.

6
பாட்டும் பொருளும்

உடுமலையார் தேசிய இயக்கத்தையும் மதித்தார். ஜீவாவுடனும் அவருக்கு அறிமுகம் இருந்தது. எனினும் திராவிட இயக்கத்தோடு நெருக்கமாக இருந்தார். இயக்கங்களின் செல்வாக்கு அவரை வெறும் காசுக்கு எழுதும் கவியிலிருந்து தரம் மிக்க கவியாக உயர்த்தியது.

சமூக மாற்றங்களைப் பதிவு செய்யும் சரித்திர ஏடுகளாகவும் உடுமலையார் விளங்கினார். ஐரோப்பிய கல்வியும், நகரமயமாதலும், தொழிற்சாலை உருவாக்கமும், வேலை வாய்ப்புகளும் மனிதர்களை வெகுவாக மாற்றின. மனிதன் சிதைந்து சின்னாபின்னமாகும் நிலை உருவானது. அவனது சிதைவுகளை இருபதாம் நூற்றாண்டு கலை இலக்கியங்கள் வழி பிரதிபலிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாயிற்று.

திரைப் படங்களும் இந்தக் காலகட்டத்து மாற்றங்களைக் கவனத்தில் கொண்டன. அத்திரைப் படங்களுக்குப் பாடல் எழுதுபவர்களில் முன்னணியில் இருந்தவர் உடுமலைநாராயணகவி இவரது பாடல்களில் மாறிவரும் சமூகத்தின் கருத்துக்களை விரிவாகக் காணலாம். வெறும் பதிவுகளாக இல்லாமல் இவரது பாடல்கள் மாற்றங்களுக்கான சக்திகளாகவும் விளங்கின.

சுதந்திர வேட்கை

உடுமலையாரின் நாடகப் பாடல்களில் சுதந்திர வேட்கை இருந்ததுபோலவே திரைப்படப் பாடல்களிலும் சுதந்திர வேட்கை பொங்கி வழிந்தது.

1942-இல் 'மாயாஜோதி' என்ற திரைப்படம் வந்தது. இதன் கதை 'அலாவுதீனும் அற்புத விளக்கும்' என்ற கதையின் தழுவல். அமலாதித்யன், பரிமளா கதைத் தலைவர்கள். இதற்கு வசனத்தை ஆர். பத்மநாபன் எழுதினார். உடுமலையாரே பாடல்களை எழுதினார்.

அந்தக் காலகட்டத்தில் ராணுவ சேவைக்காக இளைஞர்களை ஆங்கில அரசாங்கம் பட்டாளத்தில் சேர்த்துக் கொண்டிருந்தது.

இதனைச் தேசத் தலைவர்கள் எதிர்த்தனர். நாராயணகவி இதனை எதிர்க்கும் விதமாக "போருக்குப் போகாதே" என்று தொடங்கும் பாடலை எழுதினார். இப்பாடலில் பிரிட்டிஷ் அரசு அனுமதிக்காது என்று தெரிந்ததும் 'கட்டபொம்மன் தெருக்கூத்தாக' மாற்றினர். பின் இது மிகவும் சாமர்த்தியமாகப் படத்தில் நுழைக்கப்பட்டது.

1946-இல் 'வித்யாபதி' படத்தில்,

"ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே
சுகவாழ்வு வந்ததென்று ஆடு ராட்டே"

என்ற பல்லவியுடன் ஒரு பாடலை எழுதினார். இதில் ராட்டைப் பற்று வலியுறுத்தப்படுகிறது.

நாடு முழுவதும் விடுதலைக் கனல் பற்றி எரிந்தது. உடுமலையார் அப்போது மதுரையில் நாடகப் பணிகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் எழுதிய விடுதலைப் பாடல்களை நாடக நடிகர்கள் அனைவரும் பாடி மகிழ்ந்தனர். இவற்றில் "தரவேணும் எனதாசை மணவாளரே" என்ற பாடல் குறிப்பிடத் தக்கதாகும்.

"தரவேணும் எனதாசை மணவாளரே-வாங்கித்
தரவேணும் எனதாசை மணவாளரே"

தெய்வ பக்தி மிகுந்த சிலர் தேச பக்தியை மறந்து போயினர். இதனைக் கவிராயர் கண்டிக்கிறார். தாய் நாட்டுப் பற்றில்லாமல் ஊர்விட்டு ஊரோடித் திரிவார்; பேர் கெட்டுப் பல தொல்லைகளுக்கு ஆளாவார் என்றும் கூறுகிறார்:

"தெய்வ பக்தி முற்றி
தேச பக்தி அற்றுத்
தேஞ்சு போகாதீங்கடா - நித்தம்
சீர் கெட்டுப் பேர் கெட்டு
ஊர்விட்டு ஊரோடிச்
சிரமப் படாதீங்கடா"

என்று எழுதி (பாடலுதவி சமத்தூர் கே.ஆர் செல்லமுத்து) இருக்கிறார்.

"பாரத தேசமடி பனிமலருஞ் சோலையடி
வாரணன் சகாயனடி ஞானத் தங்கமே
உன்வம்ச வழிக்காரனடி

....

அருணகிரியாம் சம்பந்தர் அப்பர் மாணிக்கவாசகர்.
பெருமை தங்கும் சுந்தரராம் ஞானத் தங்கமே
பேசும் இந்து தேசமடி ஞானத் தங்கமே
ஆகம விவேகா நந்தர் ஆனதோர் இராமானுஜர்
யோகஞ் செய்பரம அம்ஸர் ஞானத்தங்கமே

ஓங்கு இந்து தேசமடி
காளமேகம் புகழேந்தியும் கம்பர் அம்பிகாபதியும்
மறுமைபுகழ் மாணிக்கரும் ஞானத்தங்கமே
மகிமை பெறுந் தேசமடி''

''சாம்ராஜ்யத் திலகர் சங்கரர் சிரத்தானந்தர்
தாதாபாய் நௌரோஜியும் ஞானத்தங்கமே
தன்மை பெற்ற தேசமடி.
நான்முத்து மாணிக்கமும் நற்பவளமும் சொர்ணமும்
பொற்கமலமும் விளையும் ஞானத் தங்கமே
பொங்குமிந்து தேசமடி
சாந்தமிகுந்திடு வேதாந்தி சாதன நித்ய சித்தாந்தி
பரந்தமாம் மகாத்மா காந்தி ஞானத்தங்கமே
பாசமுள்ள தேசமடி''

(உதவி: சிவபாக்கியம் அம்மையார்)

என்று இந்திய விடுதலைப் போரின் தூண்களாக விளங்கிய திலகர், தாதாபாய், காந்தியடிகள் ஆகியோரையும் இந்திய நாட்டின் வளத்தையும் உடுமலையார் பாடிக் காட்டி மக்களை விடுதலைப் போருக்கு அழைக்கிறார். பாரத நாட்டின் பழம்பெருமையும், தலைவர்களையும், வளத்தையும் கூட இப்பாட்டில் விவரித்துள்ளார்.

கைத்தறி

விடுதலைக்குப் போரிட்டத் தலைவர்கள் சுதேசிப் பொருட்களை ஆதரித்தனர். கதர், கைத்தறி துணிகள் அவர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டன. உடுமலையார் கைத்தறித் துணிகளைப் பாராட்டிப் பாட்டில் எழுதியுள்ளார்.

'வித்யாபதி' படத்தில்,

''கைநூலை கைத்தறியில்
நெய்த துணிதான்
கட்டும் உடைகள் எனத்
திட்டமானால்
வெய்தான வேலையில்லாத்
திண்டாட்டம் நம்மை
விட்டொழியும் என்று சொல்லி
ஆடு ராட்டே''

என்று எழுதியுள்ளார்.

மதுவிலக்கு

1949 அக்டோபர் 2ஆம் தேதி காந்தி ஜெயந்தியன்று காங்கிரஸ் முதல்வர் ராஜாஜி மதுவிலக்கை தமிழ்நாட்டில் அமுலுக்குக் கொண்டு வந்தார். பல தலை முறைகளாக மக்களை அடிமைப்படுத்தியிருந்த மது அரக்கனின் பிடியிலிருந்து விடுதலை செய்தார் இதனைக் கலைவாணர் மனைவி டி.ஏ. மதுரத்திற்காக உடுமலையார் எழுதிய பாடல் இது:

"குடி கெடுத்த குடி ஒழிஞ்சது
அடிதடி சண்டை அதுவும் கொறைஞ்சது.
ஆணும் பெண்ணும் புத்தி அறிஞ்சது
அக்டோபர் ரெண்டுக்கு மேலே"

என்று பாடல் தொடங்குகிறது. குடிகாரனின் மனைவியின் கழுத்து காலியாக இருக்கும். ஆண்கள் குடிப்பர்; அதன் கஷ்டத்தை அனுபவிப்பவர்கள் பெண்கள்தான் தகரக் குவளை, செம்பு ஆகியவற்றை விற்றுக் குடிப்பான். குழந்தைக்கு பால் வாங்கக்கூடப் பணம் இருக்காது.

"தாலிக்கயிறு தனியா இருக்கும்
தங்கம் இருக்காது.
தண்ணிகுடிக்க தகரக் கொவளை
சொம்பும் இருக்காது.
பாலுவாங்கக் கொழந்தைப் பசிக்குப்
பணம் இருக்காது
பாழும் கள்ளைக் குடிப்பது மட்டும்
நாளும் தப்பாது - எந்த
நாளும் தப்பாது"

என்று வறிய நிலை குடிப்பழக்கத்தால் வருவதைக் காட்டுகின்றார்.

காங்கிரஸ் கூட்டத்தில் பாட்டு

சென்னை தேனாம்பேட்டையில் காங்கிரஸ் பொருட்காட்சி நடந்து கொண்டிருந்தது. முடிவுநாளில் கலைவாணருக்கு வரவேற்புவிழா. காமராசரும் கலந்து கொண்டார். மக்கள் பேரளவில் திரண்டிருந்தனர். மக்களை அமைதிப்படுத்த காமராசரும் மற்றவர்களும் பெரிதும் முயன்றனர். முடியவில்லை. ரசிகர்கள் முண்டியடித்தனர். கலைவாணர் எழுந்தார். "நீங்கள் எல்லோரும் அமைதியாக இருந்தால், கடைசியாக நான் ஒரு பாட்டு பாடுவேன் 'பைத்தியக்காரன்' படத்திற்காக இரண்டு நாள் முன்பு நான் பாடிப்பதிவு செய்யப்பட்டப் பாட்டு. புதிய பாட்டு அது" என்றார். அவர் பாடிய பாடல் இது:

"ஜெயிலுக்குப் போய்வந்த
சிரேஷ்டர் மக்களை
சீர்த்திருத்துவாங்க - இந்த
ஜெகத்தை ஆளுவாங்கோ - சிலர்
திண்டாடித் திரிவாங்கோ - இன்னும்
தெளிவாகப் சொன்னாங்கோ"

கலைவாணர் சிறையிலிருந்து விடுதலை பெற்ற நேரம். இது அவரது சுய அனுபவக் குரலாக இருந்தது. இதனை எழுதிக் கொடுத்தவர் உடுமலையார். இப்பாடலைக் கேட்டு மக்கள் மந்திரத்தில் கட்டுண்டவர்கள் போல மயங்கி அமைதியுடன் நின்றனர்.

இவர் சிறைக்குப் போனதற்குக் காரணம் பத்திரிகையாளர் லட்சுமிகாந்தன் கொலை வழக்காகும். 1944-ல் கலைவாணர் கைது செய்யப்பட்டார். 1945-ல் ஆயுள் தண்டனை பெற்றார். எம்.கே. தியாகராஜபாகவதரும் இவரோடு தண்டனை அடைந்தார். எஸ்.வி. சகஸ்ரநாமமும் மதுரமும் பிரபல வழக்கறிஞர்களை வைத்து வழக்காடி 2 ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை பெற வைத்தனர்.

ஜீவாவுடன் தொடர்பு

ஜீவா நாட்டுப் பற்றும் சுயமரியாதைக் கொள்கையில் ஆர்வமும் கெண்டவர்; சமதர்மக் கருத்துகளைப் பரப்பியும் வந்தவர். இவரோடு உடுமலையாருக்கும் தொடர்பு ஏற்பட்டது. 1949-51-ல் ஜீவா தலைமறைவாக இருந்தபோது, கலைவாணர் அவருக்கு அடைக்கலம் கொடுத்தார். அப்போதுதான் உடுமலையாருக்கு உறவு உண்டாயிற்று.

இதற்குப் பிறகு உடுமலையாரின் பாடல்களை ஜீவா, சமதர்மம், குடியரசு போன்ற இதழ்களின் வெளியிட்டு உதவினார்.

பொதுவுடைமை

கலைவாணர் மூலம் ஜீவாவின் தொடர்பு உடுமலையாருக்குக் கிடைத்தது. எனவே அவருக்குப் பொதுவுடைமை கருத்துக்களோடும் தொடர்பு ஏற்பட்டது. இவரது பாடல்களில் பேரளவில் இல்லாவிட்டாலும் சிறிதளவில் பொதுவுடைமைக் கருத்துக்களின் பாதிப்பினைக் காணமுடியும்.

"பொதுவுடைமை கேட்பது எதனலே? - தொழில்
புரிந்தும் புசிப்பதும் அற்றுப் போனதாலே"

(உ.நா.பா., ப.46)

என்று 'மணமகள்' படத்தில் ஒரு பாட்டில் ஒரு வினா விடையை வைத்துள்ளார்.

பொதுவுடைமை அரசில் சோம்பேறிகளுக்கு இடம் இல்லை. சும்மா இருப்பவனுக்குச் சோறு இல்லை என்பர்.

> "சும்மா இருந்தால் சோத்துக்கு நஷ்டம்
> சோம்பல் வளர்ந்தால் ஏற்படும் கஷ்டம்
> உண்மையோடு உழைக்கோணும்
> ஒன்று சேர்ந்து வாழோணும்"

(உ.நா.பா., ப.161)

என்று பாடுகிறார் நிலவுடைமையாளர்களிடமிருந்து நிலத்தை அரசே எடுத்துக் கொண்டு, இல்லாதவர்களுக்குத் தர வேண்டும்.

> பாளையக்காரர் ராஜாதி ராஜர்
> பதவிகள் பறக்கின்ற போது - நம்ம
> பட்டாக்கள் மிட்டா மிராசுகள் ஜம்பம்
> கட்டாயமாய் பலிக்காது.

என்று மகிழ்கிறார்.

சோவியத் சிறப்பு

சோவியத் கலாச்சாரக் குழுவின் அழைப்பின் பேரில் 1951-ல் கலைவாணர் சோவியத்துக்குப் போய் வந்த பிறகு தம் படங்களில் அதன் சிறப்புகளை எடுத்துச் சொன்னார். அதனைத் தம் பாடல்கள் மூலம் உடுமலையார் எடுத்துச் சொன்னார்.

> "கனவு கண்டேன் கனவு கண்டேன்
> களிக்கடல் மிதந்திடும் புதுக்குவலயம் கண்டேன்"

என்று அந்தப் பாடல் தொடங்கியது. இது 'எங்க வீட்டு மகாலட்சுமி' (1957) என்ற படத்தில் உள்ளது.

> மன இருள் விழுங்கிடும் தினகரன் கண்டேன்
> மதிஒளி பரப்பிடும் புதுமுறை கண்டேன்.
>
> ஆண்டை அடிமையெனும் அவச்சொல் அங்கில்லை
> ஆண்பெண் பேதம் பாராட்டும் அழிகிறுக்கில்லை
> வேண்டும் சுயேச்சைப் பேச்சில் விதிவிலக்கில்லை
> மீறும் சட்ட திட்டங்கள் கூறுவோரில்லை

எனச் சோவியத்தைச் சூரியனாக, மதிஒளியாக, சமரசச் சங்கமாக, கூட்டுறவு அமைப்பின் கூடமாகப் பார்க்கிறேன்'' என்கிறார்.

கூட்டுப் பண்ணை விவசாயம்

சோவியத் யூனியனில் ஜார்காலத்தில் துண்டு துண்டு நிலங்களைத் தனித் தனியாகப் பயிரிட்டு வந்தனர். சோவியத் ஆட்சிக் காலத்தில் கூட்டுப் பண்ணை விவசாய முறை அறிமுகப் படுத்தப்பட்டு விவசாயம் சிறப்படைந்தது.

''நாட்டுக்குப் பொருத்தம் நாமே நடத்தும்
கூட்டுப் பண்ணை விவசாயம் - பட்ட
பாட்டுக்குத் தகுந்த ஆதாயம் உண்டு
பழைய கொள்கைகளை விடுவது நியாயம்''.

உடுமலையார் எழுதிய பாட்டு. இது இடம் பெற்ற படம் 'எங்கள் வீட்டு மகாலட்சுமி.'

''ஒத்தைக் குடித்தனம் பத்துக் காணியில்
உழுது பாடுபட முடியாது - ஒரு
பத்துக் குடித்தனம் நூறுகாணியில்
பாங்காய் உழுவதுதான் தோது.

என்ற கருத்தை வற்புறுத்துகிறார்.

தன்மான இயக்கம் பாடல்

பழமை மனப்பான்மையிலிருந்து விலகி, சீர்திருத்த எண்ணம் உடையவராக வளர்ந்த உடுமலைக்கவியைப் பெரியாரின் தன்மான இயக்கம் பெரிதும் கவர்ந்தது. தன்மான இயக்கக் கொள்கைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உரம்பெற்று, அக்கட்சித் தோழர்களுடன் கவிராயர் நெருங்கிப் பழகினார்.

''உடுமலையார் தலைசிறந்த நாத்திகக் கவிஞர். 'குடிஅரசு'வில் வெளி வந்த கருத்துக்களையெல்லாம் பாடலாக்கியவர். அவர் ஒரு கலை மேதை'' என்று கி. வீரமணி கவிராயருக்கான இரங்கல் கூட்டத்தில் பேசினார்.

''மெய் கண்டானை மக்கள்
மேன்மை கண்டான் தன்னை
மேதினி போற்றுமடா - நித்தம்
பொன் கொண்டானது-வெறும்
புல்லர்கள் தம்மைத்தம்
புத்தியே தூற்றுமடா - அடப்
போக்கற்ற பசங்களா''

என்ற பாடல் காட்சி மேடைகளில் பரவலாக ஒலித்தது.

''குக்கல் வந்து எண்ணெய்யை
நக்குற கல்லுக்குச்
சக்கரைப் பொங்கலோடா - நித்தம்

குடிக்கக் கஞ்சி இல்லாமல்
அடுத்திட்ட ஏழைக்குக்
கொடுப்பது தொல்லையோடா? - அடக்
கொலைகாரப் பசங்களா"

என்று இப்பாடல் பகுத்தறிவு பேசியது.

பகுத்தறிவு

'மணமகள்' படத்தில் ஒரு பாடல். இத, பெரியாரின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தால் ஏற்பட்ட மாற்றத்தை விளக்கிக் கூறுகிறது.

"பேயிருக்குது கிணத்திலே
பிசாசிருக்குது மரத்திலே
பிள்ளைகளுக்குச் சொல்லிக்
கொடுத்தது அம்பது
ஆயுங் கலைஞன் ஏட்டிலே
அமைந்த நீதிப் பாட்டிலே
அறிவிருக்கு புடிச்சுக்
கோங்குது அறுபது"

இது பத்தாண்டில் நடைபெற்ற மாற்றம்; பகுத்தறிவு மாற்றம்.

பகுத்தறிவு என்பது மனிதரை மனிதராக வாழச் செய்யப் பயன்படும் கருவியாக அமைதல் வேண்டும் என்பதுதான்.

மனிதன் மனிதனுக்கு உதவி செய்யாமல் கடவுளுக்கு அள்ளிக் கொடுப்பதை,

"கட்டத் துணியும் கஞ்சியுமின்றிக்
கவலைப்படுவோர் முகம்பாரான்
கால்கை நொண்டி காப்பாரற்றுக்
கண்ணீர் விடுவோர் துயர்தீரார்
கட்டுங் கோயில் திருப்பணிக்கும்
கட்டளை பூசை அர்ச்சனைக்கும்
அட்டியின்றிப் பெட்டி திறந்தே
அள்ளிக் கொடுப்பார்"

என்று கண்டிக்கிறார். உணவும் உடையும் இன்றி ஊனம் கொண்ட மனிதர் வாடுவதைப் போக்க வேண்டும். கோயில் திருப்பணி, கட்டளை பூசை, அர்ச்சனை எல்லாம் வீண் என்பது இவரது எண்ணமாகும்.

புராண இதிகாசக் கதைகள் மூட நம்பிக்கைகளை நீரூற்றி வளர்க்கின்றன. இவை நாட்டு முன்னேற்றத்துக்குத் தடையாகும். இவற்றைவிடச் சிந்தனையைச் செழுமை படுத்தும் சீர்திருத்தப் படைப்புகளே நாட்டுக்குத் தேவையானது. இதனை

"கந்தன் வள்ளி கல்யாணக் காதல் பாட்டு
கண்ணன் பலகன்னியரைக் கலந்த பாட்டு
அந்திவண்ணன் சுடுகாட்டில் ஆடும் பாட்டு
அருத்தமாற்ற சாமிகளுக்கு அனந்தம் பாட்டு
முந்தியவர் பாட்டிலுள்ள மொழியை மாற்றி
முன்னேற்றத் தடையான மூடர் பாட்டால்
செந்தமிழும் தென்னாடும் சிதைந்திடமால்
சீர்திருத்தப் பாக்கள் பல திகழ்க நன்றே"

என்பார்.

திருஞானசம்பந்தர் சின்னஞ்சிறு வயதில் ஞானப்பால் அருந்திப் பாடத் தொடங்கினார் என்னும் கதையை உடுமலையார் நம்பவில்லை. இதனை,

"சின்ன வயதிலே கன்னித் தமிழிலே
சொன்னான் ஒருபாட்டு
என்று போடுகிறாயே வேட்டு"

(உ.நா.பா., ப.126)

என்று கேலி செய்கிறார். அத்துடன்

"முன்னேற்றத் தடையான மூடர் பாட்டால்
செந்தமிழும் தென்னாடும் சிதைந்திடாமல்
சீர்திருத்தப் பாக்கள் பல திகழ்க நன்றே"

(உ.நா.பா., ப.13)

என்று வாழ்த்துகிறார். மூடப்பாடல்கள் முன்னேற்றத்தின் தடை கற்கள்; இவற்றால் தமிழும் தமிழ்நாடும் சிதையும். சீர்திருத்தப்பாடல்களே சிறப்பானவை என வலியுறுத்துகிறார்.

சமயத்தின் போலித்தனம்

"பட்டை நாமம் சாத்திக் கிட்டு
மத்தியான வெய்யிலிலே
கோவிந்தம் கோவிந்தம்
கோவிந்தம் என்று
பாதையில் புரண்டு பிச்சை
எடுக்காமல் அந்த
பரந்தாமன் பேரை இழுக்காமல்-தினம்
கஷ்டமோடு பாடுபட்டு
கஞ்சியும் குடிச்சிக்கிட்டு
காலங் கடத்தாமலே
வேலைசெய்யும் உடம்பு"

என்று ஒரு பாடலில் மதத்தின் பேரால் போலித்தனத்தின் தோலை உறிக்கின்றார்.

இறைவனின் பெயராலும் சமயத்தின் பெயராலும் பொய்மைகள் மிகுதியாக நடைபெறுகின்றன.

"பில்லி சூனியம் செய்வார் தமக்கு
பெண்சாதி பிள்ளையும் தக்காது
பித்தாலட்டமே ஆனது செப்படி
வித்தைகள் எல்லாம் வெறும் சூது
நல்லகாரியம் எதுவும் அதனால்
நடைபெற முடியாதே"

எனச் சாடுகிறார்.

'வேலைக்காரி' படத்தில்,

"காளி கருணை செய்வாள் என நினைத்து
கைப் பொருள் இழந்தேனே"

"தேடி வந்த காசைக் கொண்டு
தீபம் எரித்தேன்"

என்று ஏமாந்த கதையைக் கதாநாயகனுக்காக எழுதினார்.

சாதிவேறுபாடு

"இழிகுலம் என்றே இனத்தை வெறுத்தது
அந்தக் காலம்; மக்களை
இணைத்து அணைக்க முயற்சி பண்ணுவது
இந்தக் காலம்"

என்று ஒரு பாடலில் சாதி வேறுபாடு பார்த்து ஒதுக்கிய காலம் மாறிவிட்டது என்று கூறுகிறார்.

"சாதிமதம் இல்லையென்ப தெதனாலே - மனம்
சமத்துவம் தானடைந்த தன்மையாலே"

என்ற பாடலில் மக்களின் மனநிலை மாற்றத்தைப் புலப்படுத்துகின்றார்.

"மேலென்றும் கீழென்றும் ரெண்டுகால் குதிரை
வித்தியாசம் காட்டித் தள்ளும் - சாதி
வித்தியாசம் காட்டித் தள்ளும்"

என மனிதனை இரண்டு கால் குதிரையாக உருவகித்துப் பாடியுள்ளார். மேல்சாதி கீழ்சாதி என்ற வழக்கு சரியில்லை என்பதும் இவரது கருத்தாகும்.

சாதி ஏற்றத் தாழ்வு என்பது உழைப்பு, கல்வி ஆகியவற்றில் காணப்படுகிறது. பிறப்பால் ஆண்பெண் என்ற இரு சாதிகள் தான் உள்ளது. வேறு பிரிவுகள் இல்லை. ஏற்றத் தாழ்வு காட்டிப் பிரிந்து வாழ வேண்டியது இல்லை என்று சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க விரும்புகிறார் என்பார் க.பகவதி. (உ.நா.ப.பா., ப.52)

கைத்தறி பிரச்சாரம்

1950-இல் மக்கள் புயல் மழையாலும் வறட்சியினாலும் பெரும் பாதிப்புக்கு உள்ளாயினர். மக்களின் பொருள் வாங்கும் திறன் குறைந்தது. தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகள் விற்பனை இல்லாமல் தேங்கிக் கிடந்தன. நெசவாளர் துயர் துடைக்க தி.மு.கழகத் தலைவர்கள் கைத்தறித் துணிகளைத் தோளில் சுமந்து விற்றனர். விற்பனையைச் சுறுசுறுப்போடும் வேகத்தோடும் நடத்துவதற்காக உடுமலையார் ஒரு பாடல் எழுதினார்.

"செந்தமிழ் நாட்டுக் கைத்தறி நெசவுச்
சேலைகள் வேட்டிகள் வாங்குவீர்
திராவிட நாட்டினர் சேமம் வேண்டிச்
சிங்கார ஆடைகள் வாங்குவீர்
சொந்தம் மிகுந்த சகோதரிகாள்
அன்புத் தோழர்களே பெரியோர்களே
துன்பம் அடைந்தவர் இன்பமுறும்படி
துணைசெய்ய வேண்டும் நீங்களே"

என்பது பாடல். துயர்துடைக்கும் பணிக்கத் துணைபோன பாடல் இது.

மொழிப்பற்று

தமிழ் தன்னைப் பிணித்திருக்கும் அனைத்துத் தளைகளில் இருந்தும் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார். முதலில் தமிழின் பெருமைகளைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துகிறார்.

தமிழ் வேந்தர் இமயத்தில் கொடி நாட்டிப் பெருமிதத்தோடு வாழ்ந்தவர்; தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்தனர். தமிழைக் கண்போல் காத்து வளர்த்தனர்.

"மொழிமேலே விழிவைத்தே
முடிமன்னர் ஆண்ட தமிழ்நாடு"

(உ.நா.பா., ப.9)

என்று பாடினர்.

தமிழ்மொழியின் வளர்ச்சி சம்ஸ்கிருதம், உருது, ஆங்கிலம், இந்தி போன்றவற்றால் பாதிக்கப்பட்டதை விவரிக்கின்றார்:

"பகுத்தறிவுக் கொவ்வாத பஞ்சாங்கப்
பாடைதனைப்
பார்ப்பனர்கள் சரிபாதி மாய்த்து விட்டார்
மகமதியார் மத்தியிலே மண்ணாட்சி புரிய வந்து
மறுபாதி தனிலுருதை வழங்க விட்டார்.
பகைத்து வைத்துப் பாராண்ட பரங்கியர்கள்
ஆங்கிலத்தைப்
பதவிபெறும் படிப்பாகப் பரவ விட்டார்.
மிகுந்து நின்ற தென்மொழியின் வேரறுக்க
இந்தியரது
விருப்ப மென்றார் கட்டாய விளைவு காணீர்"

(உ.நா.பா., ப.13)

தமிழிசையைச் சிறப்பித்தும் இவர்,

"பாட்டையென்ன சொல்வேன் பாங்கி
பாவலர் ஞான ஓவியமான - தமிழ்ப்
பாட்டை யென்ன சொல்வேன்"

(உ.நா.பா., ப.7)

என்றும் வியந்தும் பாடுகிறார்.

"நயமிகு பாடல் புலவர்தம் நாவில்
நடமிடுந் தோகை மயிலாகி
நவிலவும் ஆய கலைகளும் ஆகி
நனி பெறுந் தூய தமிழ்மாதே"

என்று 'திராவிட நாடு' பொங்கல் மலரில் (1955) எழுதினார்.

"கன்னித் தமிழ் சாலையோரம் சோலையிலே
கவிதைக் கனிகள் உண்ணும் பறவைகளே
தென்னவர் மூவேந்தராம் தமிழ் வளர்த்த
சேர சோழப் பாண்டியரைப் பாடுங்களே"

என்றும் புகழ்ந்து பாடியுள்ளார்.

தமிழின் புகழைப் பற்றிபாடும்போது,

"பகைவென்ற திறம்பாடும்
பரணிவகை - செழும்
பரிபாடல் கலம்பகங்கள்
எட்டுத் தொகை
புகழ்கொண்ட குறளோடு
அகம் புறமும் - செம்

பொருள் கொண்ட தமிழ்ச்சங்க
இலக்கியப் பெருஞ்செல்வம்''

என்று இலக்கிய வகைகளையும்

''முல்லைக்குத் தேர் கொடுத்தான் வேள்பாரி
சொல்லுக்குத் தலை கொடுத்தான் குமணன்''

என்று தமிழ் வள்ளல்களையும் பாடியிருக்கின்றார்.

''திராவிட இயக்கம் குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் திரை உலகில் தன் கால்களை அழுத்தமாக ஊன்றியது. அதன் அரசியல் வளர்ச்சிக்கு உதவியது. கதை என்றால் அண்ணா, கலைஞர் கருணாநிதி, கண்ணதாசன், ஆசைத்தம்பி இன்னும் சிலரும் உண்டு. பாடல் என்றால் உடுமலை நாராயணகவி, சிலகாலம் கண்ணதாசன். இத்தனை பேரும் கோடம்பாக்கத்தைப் பிடித்தார்கள். பின்னர் கோட்டை சுலபமாகக் கிடைத்தது. கோட்டையைப் பிடிக்க ஆதியில் உதவியவர்களில் முக்கியமானவர் உடுமலை நாராயணகவி'', என்பார் செந்தில் நாதன்

''பழமை இருட்டுப் படிந்த கிடந்த தமிழ்த்திரை உலகுக்குப் பகுத்தறிவு வெளிச்சம் பரப்ப வந்த பாட்டுச் சூரியன் 'கவிராயர்' என்ற மரியாதைக்குத் தனியுரிமை பூண்ட உடுமலைநாராயண கவிராயர். புராணக் குப்பைகள் மண்டிக் கிடந்த திரைப்படம் உலகத்திற்கு ஒரு புரட்சி விடியலைக் கொடுத்த பேரறிஞர் அண்ணா கதை, உரையாடல் துறைக்கு வாய்த்ததைப் போல இவரும் கவிதைப் புதையலாக வந்து வாய்த்தவர். சூனியமான வானத்தில் சொர்க்கம் இருப்பதாகச் சொன்னார். அண்ணாந்து பார்க்கும்போது முடிச்சவிழ்க்கம் வந்த ஆரியமும் ஆன்மீகமும் முதன் முதலில் இவரால்தான் தோலுரிக்கப் பட்டன. திரைத்துறைக்கு வாய்த்த இன்னொரு புரட்சிக் கவிஞர் என்று பாராட்டத்தக்க அளவிற்குச் செம்மாந்த தமிழறிவும் சித்தாந்த சிந்தனையும் மிக்கவர் என்பதை ''எங்கே சொர்க்கம்?'' என்றும் ''ஆத்திகம் எது? நாத்திகம் எது?'' என்றும் இவர் பாடிய பாடல்கள் தெளிவாகக் காட்டும்'' என்று பாவலர் புலமைப்பித்தன் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

கிராமியப் பற்று

நகரமயமாதல் நமது வாழ்வைச் சிதைத்தது. நம் வேர்களை வெட்டியது; அடையாளங்களை அழித்தது. மரபு துண்டிக்கப்பட்டது எனவே படைப்பாளிகள் கிராமிய பற்று கொண்டனர். கிராமங்களுக்குத் திரும்புதலை நேசித்தனர்.

''டவுனு பக்கம் போகாதீங்க – மாப்பிளே
டவுனாயி போயிடுவிங்க''

என்று உடுமலையார் எச்சரிக்கிறார்.

"ஊரு விட்டு ஊரு போனா
வீறு கெட்டுப் போகுமுன்னு
சொன்ன சொல்லு உண்மையோட
நன்மையாகத் தோணுது"

என்றும் நம்புகிறார்.

உழவர்களின் சிறப்பு

உழவர்களின் உயர்ந்த பண்புகளைக் கவிராயர் எடுத்துக் காட்டியுள்ளார். அவர்களாலேயே இந்த உலகம் மகிழ்ச்சியோடு இயங்குகிறது என்றார்.

"பார் முழுவதும் ஏர்முனையிலே - உழவன்
பாட்டிலே கொண்டாட்டம் போடுது"

(உ.நா.பா., ப.9)

என்று பாடியுள்ளார். அதோடு,

"பாடுபட்டுப் பயிர் வளர்த்துப்
பலனெடுக் கோணும் - நல்ல
பலனெடுக் கோணும் - அதைப்
பலபேருக்கும் பகிர்ந்து கொடுத்துப்
பஞ்சம் நீக்கோணும் - உணவுப்
பஞ்சம் நீக்கோணும்"

என்று உழவர்களின் கொள்கையைப் பாடுகிறார். (உ.நா.பா., ப.17) எனினும் அவர்களின் தீரா வறுமையும் திண்டாட்டமும் கண்டு,

"ஏரெப் புடிச்சவன் படுத்துக்கிட்டான் - அவன்
ஏழ்மையில் உடமையை இழந்துவிட்டான்"

(உ.நா.பா., ப.180)

என்று வருந்துகிறார்.

ஏழை பணக்காரன்

"இல்லாதவர் இருப்பவர்போல
நடிப்பது மெத்த டேஞ்சரு
இருப்பவரும் இல்லாதவரை
அவமதிப்பது இனிமேல் டேஞ்சரு"

என்று 'மணமகள்' பாடலில் குறிப்பிடுகிறார். இதில் இல்லாதவரை உயர்த்தி அவர்களது பலத்தையும் பலவீனத்தையும் சுட்டிக் காட்டுகிறார்.

"எளியோர் மனம்படும் பாட்டிலே
எழும் ஓசையாம் தாலாட்டிலே

ஆண்டவன் ஆகாசத்தில்
தூங்குகின்றாரே - தினம்
மாந்தரெல்லாம் மாநிலமேல்
ஏங்குகின்றாரே''

என்று 'தெய்வப்பிறவி' பாடல் கூறும். இது அண்ணாவின் கருத்து ''பணக்காரன் கல்லாப் பெட்டியில் தூங்குறான்; ஏழை நடைபாதையில் தூங்குகிறான். இறைவனோ சொர்க்கத்தில் சுகமாகத் தூங்குகிறான்'' என்று ஒருமுறை தம் சொற்பொழிவில் சொல்லியிருக்கிறார். இதன் பாட்டு வடிவமே இப்பாடல்.

''குடிக்கத் தண்ணீரில்லாது பெரும்
பெரும்கூட்டம் தவிக்குது - சிறு
கும்பல் மட்டும் ஆரஞ்சு பழ
ஜூசு குடிக்குது''

என்று பொருளாதார பேதத்தைச் சுட்டுகின்றார் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் உள்ள வேறு பாடு என்பது தண்ணீருக்கும் பழச் சாற்றுக்கும் உள்ள வேறுபாடு போன்றது

''என்ன உலகமடா - இது
ஏழைக்கே நரகமடா''

என்று இன்னொரு பாடலில் கூறுகின்றார். சொர்க்கம் நரகம் என்பது வேறு எங்கோ இல்லை இங்கே, இந்த மண்ணிலேயே உள்ளது. இது ஏழைகளின் உலகம்தான் என்று அறுதியிட்டு கூறுகிறார்

''கட்டத்துணியுமின்றி
கந்தல் பொறுக்கையிலே
மொட்டைக் கதவு ஜன்னல் எல்லாம்
பட்டாடை போர்த்துகின்றார்.
பானையிலே கஞ்சி இன்றிப்
பட்டினியால் வாடுகின்றான்
வீணர்கள் தின்று மிஞ்சி
வீதியிலே போடுகின்றான்''

என்று ஏழைப்பணக்காரர்களின் ஏற்றத்தாழ்வுகளை எடுத்துரைக் கின்றார்! ஏழைகளுக்குக் கட்டத் துணியில்லை, குடிக்கக் கஞ்சியில்லை பணக்காரர்களில் வீட்டுக் கதவுகளுக்கும் பட்டாடை; வீட்டுக்கு வெளியே வீசி எறியும் உணவு.

''உழுத வெதச்ச உழைப்பாளி
உணவில் லேங்கிறான்-கையிலே
பணமில்லேங்குறான்
பணம் கொழுத்த மனுசெங் கிடைத்த சோறு

மணமில் லேங்குறான்".

என்ற பாட்டில் உழைப்பவர்களுக்கு ஏழ்மையும் சுரண்டுபவர்களுக்குச் சொகுசும் நடைமுறையாகி விட்டதே என்று வருத்தப்படுகிறார். ஏழைகள் பசி காரணமாக பிச்சைக்காரர்கள் ஆவதும் அதன் அடுத்தக் கட்டமாக அவர்கள் வன்முறையாளர்களாக மாறுவதும் தவிர்க்க இல்லாத என்பதை வற்புறுத்த,

"உழைக்கப் பலபேர் சுகிக்கச் சிலபேர்
இருக்க இனிமேல் முடியாதம்மா"

என்று ஏற்றதாழ்வற்ற சமநிலைச் சமுதாயம் உருவாவதை முன்னறிவிப்பு செய்கின்றார்.

"இருப்பவர்கள் இதயத்திலே
இரக்கமதை விதைக்கணும்
இல்லாதார் வாழ்க்கையிலே
இன்பப்பயிர் வளர்க்கணும்"

என்று பாடல் மூலம் ஏழை பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு மாற வழி சொல்கிறார்.

ஏழையின் உழைப்பு பணக்காரனின் இன்பத்திற்குப் பயன் அளிக்கிறது. ஏழை-பணக்காரர் ஏற்றத் தாழ்வு நீங்க பணம் இருப்பவர் மனதில் இரக்கத்தை உண்டு பண்ண வேண்டும். உடமை கேட்கும் ஏழையின் விழிப்புணர்வும் சமநிலைச் சமுதாய உருவாக்கமும் உணர்த்தப் படுகின்றன என்பார் க.பகவதி (உ.நா.பா., ப.52)

பராசக்திக்காக இவர் எழுதிய பாடல் ஒன்றில்,

"எச்சிலை தனிலே எறியும் சோத்துக்குப்
பிச்சைக்காரர் சண்டை ரோட்டிலே இன்னும்
இளைத்தவன் வலுத்தவன்
இனச்சண்டை பணச்சண்டை
எத்தனையோ இந்த நாட்டிலே"

என்று பொருளாதாரப் பேதங்களை விவரிப்பார்.

அரசியல்

கொள்கையற்ற கட்சிகள் பெருகின, சுயநலம், சுரண்டல்,சந்தர்ப்ப வாதம் போன்றவை அரசியல் வாதிகளின் பண்புகளாக இருந்தன. இதனை உடுமலையார் கடுமையாக விமர்சிக்கிறவர்.

"வெள்ளை கருப்பு விவப்பு குல்லா
விதம் விதமா வாங்கனும்
விசுயமாக சமயம் போல

திணுசை மாத்திப் போடனும்

என்று வெளிவேசத்தைக் கேலி செய்கிறார்.

இன்று அரசியல் ஒரு வணிகமாகவும் கேலிக் கூத்தாகவும் ஆகி வருகிறது. தீமையை எதிர்க்க ஒடுக்கப் படுவோரிடம் ஒற்றுமை வேண்டும். பொதுவாக ஒற்றுமைதான் உயர்வு தரும்.

"உருட்டும் பொரட்டும் வரவர உலகத்தில்
மிகுந்த போச்சதுங்க-காரணம்
ஒற்றுமை இல்லீங்க-நமக்குள்
ஒற்றுமை இல்லீங்க

என்று பையத்திக்காரன் படத்துக்காக எழுதியுள்ளார். அரசியல் புரட்டுகளை அழிக்க வேண்டுமானால் ஒற்றுமைதான் ஒரே வழி என்று இதன் மூலம் அறிவுறுத்துகின்றார்.

சுதந்திரம்

" சுதந்திரம் வந்ததின்னு
சொல்லாதிங்க-சொல்லிச்
சும்மா சும்மா வெறும்
வாயை மெல்லாதீங்க
மதம் மொழி பேதம் ஒண்ணும்
மனசைவிட்டு நீங்கலே-காந்தி
மகான் சொன்ன வார்த்தை போலே
மக்கள் இன்னும் நடக்கவே"

என்பது உடுமலையாரின் வருத்தம் சுதந்திரம் என்பது சும்மா என்று எண்ணுகிறார். காந்தியை மறந்துவிட்டு மதவெறி,ஜாதிவெறியை மறக்காமல் இருக்கிறோம்.

சுதந்திரம் வந்தால் பாரத நாட்டுத் தெருக்களில் பாலும் தேனும் பெருகி ஓடும் என்றார்கள். ஆனால் குடிதண்ணீர் பிரச்சினை கூட இன்னும் தீராமல் உள்ளது. ஏழைகள் மேலும் மேலும் ஏழையாக, பணக்காரர்களோ மேலும் மேலும் பணச்செழிப்பில் மிதக்கிறார்கள்.

"குடிக்கத் தண்ணீர் இல்லாமெ
பெருங் கூட்டம் தவிக்குது-சிறு
கும்பல் மட்டும் ஆரஞ்சுப்
பழ ஜூஸ் குடிக்குது"
சோத்துப் பஞ்சம் துணிப் பஞ்சம்
சுத்தமாக நீங்கலே
சுதந்திரம் சுகம் தருமின்னா-அதை

யாரு நம்புவாங்க"

என்று பாடியுள்ளார்.

நாட்டு நிலமை

"நாடு நடக்கிற நடையிலே
நமக்கு ஒண்ணும் புரியலே"

என்று வருத்திப்பாடுகிறார்

"கலையைப் படிச்சவன்
காத்தாய்ப் பறக்குறான்
காக்காய் புடிக்கிறவன்
காரில் பறக்கிறான்"

இது இரு வேறுபட்ட நிலையைக் காட்டுகிறது. திறமை உள்ளவனுக்கு வாழ்வில்லை; வேஷம் போடுகிறவனுக்குத் தான் வாழ்வு.

"உதவி என்று பல நிதிகள் திரட்டுகிறான்
ஊரை ஏச்சுப் பிட்டு உண்டுகளிக்கிறான்.
இதம் பல பேசி எலக்ஷன் ஜெயிச்சு
பதவிக்கு வந்ததும் பச்சோந்தி ஆகிறான்"

என்று அரசியல் வாதிகளின் ஏமாற்றையும் அவர்களின் பச்சோந்தித் தனத்தையும் பிட்டு வைக்கிறார்.

"தேசம் போற போக்கைப் பாத்தாக்
கொஞ்சும் கூட நல்லாலே"

என்றும் வேதனைபடுகிறார். தேசம் தியாகிகள் காட்டும் பாதையில் போகாமல் யாரோ ஒரு நடனமாது சென்னபடிஆட்சி நடக்கிறதே என்பதை,

"நாடோடி நடனமாது
ராஜாங்கத்தைக் கெடுத்திட்டா
நாட்டுக்காகப் பாடுபட்ட
தியாகி விழுந்து படுத்திட்டான்"

என்று பாடுகிறார்.

கால மாற்றங்கள்

அந்தக் காலத்தில் மனிதனை மனிதன் ஏய்த்தார்கள்,நெனச்சதை எல்லாம் எழுதி வைத்தார்கள்; மழைக்காக மந்திரம் ஜெபித்தார்கள்; இழிகுலம் என்று சிலரை ஒதுக்கி வெறுத்தனர்; சபை நடுவில் துரௌபதையைத் துகிலுரித்தனர்; சாத்திரம் படித்தனர்; கோத்திரம் பார்த்தனர்;பக்தி முக்கியம்;கத்தியைத் தீட்டினர்;பெண்னை பேயாகப் பேசினர்.

இந்தக் காலத்தில் இந்தநிலைகள் மாறியுள்ளது. மடமை நீங்கியது, எதையும் நேரில்பார்த்தது நிச்சயித்தனர்,மழைபொழியந்திரம் வந்தது, மக்களை இணைத்து அணைக்க முயற்சி பண்ணினர். பெண்ணைத் தொட்டவர்களைச் சுட்டு விடுவர், சரித்திரம் படிக்கின்றர். குணத்தை மட்டுமே பார்த்தனர். படிப்பை முக்கியமாக எண்ணுகின்றனர் புத்தியைத் தீட்டுகின்றனர். பெண்ணை இருகண்களில் ஒன்றாகக் கருதுகின்றனர்.

இப்பாடல் இவ்வாறு பல்வேறு மாற்றங்களைப் பதிவு செய்துள்ளது. நாகரிகம் என்ற பெயராலேயும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.அவற்றை,

"லேடிகள் போடும் ரவிக்கைத் துணியில்
ஆடவரின் புஷ் கோட்டுகளாம்
ஆடவர் மாதிரி பெண்கள் மேலே
அங்கி நிஜாரு வேட்டிகளாம்"

என்று விவரித்துள்ளார்.மாற்றம் என்பது இயற்கையா? செயற்கையா? ஏற்கலாமா? எதிர்க்கலாமா? இவை தான் இன்றைய வினாக்கள்

மனித இனம்

டார்வின் மனித இனத்தோற்றத்தைப் பற்றி ஆராய்ந்து சொல்வார் உலகம், அதில் நீர், பின் உயிர்கள் தோன்றின. ஒரு செல் அங்க ஜீவியான அமீபா பரிணாம வளர்ச்சி அடைந்து வாலில்லா குரங்காயிற்று. அதிலிருந்து மனிதன் தோன்றினான். இதனை உடுமலையார் 'தூக்குத் தூக்கி படத்தில் ஒரு பாடல் மூலம் வெளிப்படுத்துகிறார்.

"குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்
கொம்பேறித் தாவும்
குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்
உருண்டையான உலகின் மீது
உயர்ந்தோர் சொன்ன உண்மையிது
உருவ அமைப்பைக் காணும்போது
ஓரறிவு ஈரறிவு உயிர் என மாறி மாறி வாலில்லாத"

என்பது தான் பாடல்.

பெண்

பெண் என்பவள் பிறந்ததிலிருந்து வீட்டு வேலைகள் செய்பவளாக இருக்கவேண்டும். கல்வி கற்ற போதிலும் பதவி வகித்த போதிலும் காலை முதல் இரவு வரை செய்ய வேண்டிய வீட்டு

வேலைகள் அனைத்தும் பெண்ணே செய்ய வேண்டும். அச்சம், மடம்,பயிர்ப்பு, நாணம் ஆகியவை பெண்ணுக்கு இருக்க வேண்டும். திருமணமான பெண் கணவனின் சுகத்தையே நாளும் நல்க வேண்டும். பெண் அதிகம் உறங்குவது, அதிகம் உண்பது,பேசுவது தீயச்செயல் ஆகும்.

1947-ல் 'ராஜகுமாரி' படத்துக்காக எழுதும் போது பெண்கள் எந்தெந்த துறைகளில் முன்னேற்றம் பெற வேண்டும் என்பதை விளக்கியுள்ளார்.

"மாதர்கள் நாமே
வளர்கலையில் அரசியலில்
வாகை சூடி வீரமதாய்
ஆடவர் நமதடிமை
ஆஹா நாமா
அவர் மதிக்கவே
ஜகம் துதிக்கவே"

என்பது அப்பாடல். கலை,அரசியல்,போர் ஆகிய மூன்று துறைகளும் பெண்கள் முன்னேற வேண்டிய துறைகளாகும்.

பெண்கள் எவ்வளவுதான் நவ நாகரீமாக விளங்கினாலும் அவர்கள் இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார்.

"மானம் நாணம் பெண்களுக்கு
ஆடையல்லவோ?
உடல் அழகை ஊரு மெச்சக்
காட்டக் கூடாது-போல
உடுப்புகளை இடுப்புத் தெரிய
மாட்டக் கூடாது
உதட்டுமேலே சிவப்புச்சாயம்
தீட்டக் கூடாது"

என்று 'விவசாயி'படத்துக்காக எழுதினார்.

"நாட்டு நாகரீகம் பேணி
நடப்பவள் எவளோ அவளே
நல்ல பெண்மணி."

என்று 'மணமகள்' படத்துக்காக எழுதினார். அதில்,"கோழிகூவும் போதே எழுந்து குளித்து சேலை துவைக்கனும் பள்ளிக் கூடம் போகனும் காலையிலும் மாலையிலும் படிக்க வேண்டும். அம்மாவுக்கு உதவியாக சமையல் பழகனும். அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எனும் நான்கு குணங்களோடு விளங்க வேண்டும். பிறந்த வீட்டுப்

பெருமையைப் பேசக் கூடாது. புருசனோடு வம்புச்சண்டை போடக் கூடாது. கோலம் போடவும் நாட்டுப்புறப் பாடல் பாடவும் தெரியணும். கஷ்ட காலத்திலும் மானத்தைக் காக்க வேண்டும். கணவன் சுகத்தைப் பேணவேண்டும்.

கெட்ட பெண்மணிகள் எப்படி இருக்கிறார்கள் என்பதையும் இன்னொரு படத்துக்காக எழுதியுள்ளார்

"இஷ்டம் போல அலைந்து வாழ்வை
இழப்பவள் எவளோ
சட்டிப்பானை தொட்டுக் கழுவ
கையும் நடுங்குவாள்
சண்டைப் போட்டு சிண்டைப் பிடிக்கும்
லண்டியும் எவளோ
கணவன் கழுத்தை நெருக்கிப் பிடித்துக்
கடனை வாங்குவாள்-காசைக்
கண்ட படிக்குத் தண்டச் செலவில்
காலி ஆக்குவாள்
மணந்து கொண்ட மகளை வீட்டில்
வைத்துக் கொள்ளுவாள்-நல்ல
மட்டுமரியாதை மானம்
விட்டவள் எவளோ அவளே
கெட்ட பெண்மணி"

என்று பாடினார்.

பெரியாரின் கோட்பாடுகளைப் பின்பற்றும் இவர் இது போன்று பெண்ணிடிரைக் கருத்துக்களையும் பெண் விடுதலைக்கு எதிரான கருத்துக்களையும், பெண் விடுதலைக்கு எதிரான கருத்துக்களையும் குறிப்பிடுவது பற்றி ஒரு விவாதத்திற்க இடமுண்டு. படங்களுக்கு ஏற்றப் பாடல்கள் என்ற முறையிலும் தயாரிப்பாளர்களின் கருத்துக்களை மீற முடியாத நிலையிலும் இதபோன்ற கருத்துப் பொதிந்த பாடல்களை இவராலும் தவிர்க்க முடியவில்லை என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

"வாளெடுக்கவும் பெண்தன்மை
சீர்படைக்கவும்
வகையாய்ச் சொயலே
மதியினால் பெருமையாய்
மானில மீதினிலே"

என்று 'ராஜகுமாரி'(1947) படத்தில் எழுதினார், பெண் உடல் ரீதியாக வாளெடுத்து போர் புரியவும், அறிவு ரீதியாக செயல் புரியவும் பெண்களால் முடியும் என்று விவரித்தனர்.

"பெண்குலத்தைப்
பேய்களென்ற பித்தர் தம்மை
பிள்ளைக் குட்டி
உள்ளவராய் மாற்றிடுமோ"

என்று 'தங்கப் பதுமை' படத்துக்காக எழுதினார். இது பெண்ணிழிவைப் போக்கும் முயற்சி.

"தாய் நாட்டு நாகரீகம் பேணி
நடப்பவள் எவளோ அவளே
நல்லபெண்மணி"

என்ற பாடல் பெண் என்பவள் தாய் நாட்டுப் பண்பாட்டைக் காப்பாற்றுபவள்தான் என்று வலியுறுத்துகிறார்.

பெண்கள் சங்க காலத்திலிருந்தே மறக்குணம் வாய்க்கப் பெற்றவர்கள், புலியை முறத்தால் அடித்து விரட்டியவர்கள் என்பது வழக்கு.இத்தகைய மறப்பண்பைத் தற்காலப் பெண்களும் கொண்டிலங்க வேண்டும் என்பதும் உடுமலையாரின் ஆசை.இதனை,

"சீறிவந்த புலியதனை முறத்தினாலேயே-அடித்துச்
சிங்கார மறத்தி ஒருத்தி துரத்திரானாளே- இதை
ஊரறிய உலகறிய உங்களாலே
உண்மையான பெண்மை வாழப்பாடுங்கள்"

என்று பாடியுள்ளார்.

பெண்கள் எவ்வளவு தான் படித்தாலும், இங்கிலிஷ் படித்தாலும் இப்படித்தான் இருக்கவேுண்டும் என்று சில விதி முறைகளை வகுக்கிறார் உடுமலையார். இது போலவே சில பண்புகளைச் சுட்டிக் காட்டிக் கெட்ட பெண்மணி என்று முத்திரை குத்தி விடுகிறார். அவற்றில் "கணவன் கழுத்தை நெருக்கிப் பிடித்துக் கடனை வாங்குபவள். சதிக்குண்டான பண்பில்லாத சாகசக் காரியானவள், தமிழ்த்தாயின் குலத்து பேரைக் கெடுக்கும் தறுதலையானவள்" என்று சில குறிப்பிட்ட பெண்களைச் சாடுகின்றார்.

நகரமயமாதல்

தொழில் மயமும் எந்திர மயமும் கல்வியும் கிராமத்து மக்களை நகரங்களுக்கு இழுத்தது. இந்த இடப் பெயர்வு பல்வேறு இடர்பாடுகளைக் கிராம மக்களுக்கு உருவாக்கிற்று.

"காலேஜ் படிப்பு காப்பி ஆத்துதாம்
பி.ஏ.படிப்பு பெஞ்சைத் துடைக்குதாம்
ஆளை ஏச்சு ஆளும் பொழைக்குதாம்
மேலே போனது நூத்துல ஒண்ணாம்

மிச்ச முள்ளது லாட்டரி அடிக்குதாம்
கணக்குக்கு மீறிப்பணம் வந்தபோது
மனுஷனை சும்மா இருக்க விடாது
இரவு ராணிகள் வலையிலே விழுந்து
ஏமாந்து போவே இன்னும் கேளு.

என்றும் விவரிக்கின்றார். இன்றைய கல்வியில் பயனில்லை படித்தவர்களுக்கு வேலை கிடைக்க வில்லை. நகரங்களில் படித்தவர்களுக்கு ஏற்படும் தொல்லைகள் கொஞ்சம் நஞ்சம் அன்று ஆடம்பரம்,இரவு ராணிகள் போன்றவற்றால் நகரம் நசிவதை விளக்குகிறார்

''ஊரு விட்டு ஊரு போனா
சீரு கெட்டு போகு முன்னு''

என்று கவிராயர் எச்சரிக்கிறார்.

கிராமங்கள்பாதுகாப்பானவை,பண்பாடு மிக்கவை எளிமை யானவை. உலகம் உண்ண உணவை கிராமங்களே விளைய வைக்கின்றன. ''ஊரோடு ஒண்ணாக உள்ளதைக் கொண்டு நாம் உல்லாசமாக வாழ்வோம்'' என்று வேனண்டுகிறார்

தொழிலாளர்கள்

சோலைகளில் இராசனும் இராணியும் சுந்தரனும் சுந்தரி புனைந்துரை வயால் மக்களை விட்டு வெகு தூரம் சென்று பாடிக் களித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் பாமரத்தனமான பாடல்களின் வழி மக்கள் பிரச்சினைகளை மக்களுக்கு உணர்த்திய மக்கள் கவிஞராக மலர்ந்தவர் உடுமலையார். பாட்டாளிவர்க்கம் படும் பாட்டை பாட்டு மூலம் காட்டுகிற பாதையை முதன் முதலில் வகுத்தவரும் இவரே என்பார் இ ரா (உடு.நா ப.பா.ப.83)

பூ விற்போர் (வனசுந்தரி) மிட்டாய் விற்போர், பேரீச்சம் பழம் விற்பவன் (சம்சாரநாவுகள) விளக்குவிற்பவன் (மாயாஜோதி) நாட்டு மருந்து விற்பவன் எனப் பல்வேறு வியாபாரிகளைப் பற்றியும் பாடல்களைப் பாடியுள்ளார்.

''தமிழ்ச் சினிமாவின் ஆரம்பகாலம்-தொடங்கி அடுத்த நாற்பது ஆண்டுகள் திரை இசை உலகில் கம்பீரமாகத் திகழ்ந்த உடுமலை நாராயண கவி. அன்றைக்கு இசையமைப்பாளர்களுக்குக் கூடக் கிடைத்திரா நட்சத்திர அந்தஸ்தைப் பாடலாசிரியர்களுக்கு பெற்றுத் தந்தார் தமிழ்த்திரையிசையில் திராவிட இயக்கத்தின் குரலாகச் செயல் பட்டார்'', என்பார் எஸ்.தியடோர் பாஸ்கரன் (புதியபார்வை, ஆகஸ்ட் 1996)

வாழ்க்கை குறிப்புகள்

25.9.1899	-பிறப்பு
1912	-தமது குரு முத்துச்சாமிக் கவிராயருடன் சென்று கல்வி பயில ஆரம்பித்தார்.
1914	-மகாகவி பாரதியாருடன் சந்திப்பு தேசிய விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு
1920	-திருமணம்
1922	-மதுரையில் எம்.எம் சிதம்பரநாதன் அவர்களுடன் நாடகக் கம்பெனியில் இணைந்தார்
1933	-கல்கத்தா சென்று 'கிருஷ்ணலீலா' படத்திற்கு முதன்முதலாகப் பாடல் எழுதினார்.
1940	-கலைவாணருடன் சந்திப்பு, அவரது உதவியுடன் படத்திற்குப் பாடல்கள் எழுதினார்.
1942	-இவர் பாடல்கள் எழுதிய 'கண்ணகி'யும் 'மாயா ஜோதி' பெரும் வெற்றி பெற்றன.
26.6.1944	-'ஓர் இரவு' எனும் அண்ணாவின் நாடகம் இவரது பாடல்களுடன் திருச்சியில் அரங்கேற்றப்பட்டது.
1944	-சென்னையில் தமிழிசை மாநாட்டில் கலந்துகொண்டார்.
1947	-கலைஞரின் 'ராஜகுமாரி'க்குப் பாடல்கள் எழுதினார்.
23.10.1948	-ஈரோட்டில் அண்ணா தலைமையில் திராவிடர் கழக சிறப்பு மாநில மாநாட்டில் கலந்துகொண்டார்.
1950	-ப.ஜீவானந்தத்துடன் சந்திப்பு.
1.5.1951	-சென்னையில் மே தின விழாவில் அண்ணா

	கவிராயரைப் பாராட்டினார்.
22.4.1967	-சங்கீத நாடகச் சங்கத்தின் சிறந்த பாடல் ஆசிரியர் விருதினைப் பெற்றார்.
1967	-தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் இவருக்கு கலைமாமணி விருதினை அளித்தது.
4.9.1971	-கலைஞர், கவிராயருக்குப் பொன்னாடைப் போர்த்தினார்.
1972	-கவிராயர் திரை உலக விடுத்து பூளவாடிக்குத் திரும்பினார்.
20.9.1980	-உடுமலை முத்தமிழ்ச் சங்கம் பாராட்டு விழா நடத்தியது
23.5 1981	-கவிராயர் இயற்கை எய்தினார்.
26.1.1982	-இயல்,இசை,நாடக மன்றத்தில் நாராயண கவியின் உருவப்படத்தைத் திறந்து வைத்தனர்.
5.4 1992	-பூளவாடி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் கவிராயர் கலையரங்கம் திறக்கப்பட்டது
1999	-கவிராயருக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும் எனக் கலைஞர் அறிவித்தார்
23.2.2001	-கலைஞர்,மணிமண்டபத்தைத் திறந்துவைத்தார்.

பயன்பட்ட நூல்கள்

1 அறந்தை நாராயணன், தமிழ் சினிமாவின் கதை, 1981
நி செ பு ஹ (பி)லிட், சென்னை

2 சுதந்திரப்பேரில் தமிழ் சினிமா, 1988

3 நாகரீகக் கோமாளி என்.எஸ் கிருஷ்ணன், 1992.

4. டாக்டர் சிலோன் விஜயேந்திரன்,திரைப்பாடல் பாடல்களும் பாடலாசிரியர்களும், 1932-1992- 1992 த்ரீ ஸ்டார் பப்ளிகேஷன்ஸ், சென்னை

5 லேனா தமிழ்வாணன்(பதில்)உடுமலை நாராயண கவியின், தஞ்சை ராமையாதாஸ் பாட்டுத்திறன், 1986 மணிமேகலை பிரசுரம், சென்னை

6 கே எஸ் துரையரசன் இரா கலாவதி (லதா), உடுமலை நாராயண கவியின் திரைப்படப்பாடல்கள் 1996 விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்

7 பாவலர் சங்கைவேலன், உடுமலைநாராயண கவிராயர் பாடல்கள் 1986 சுயமரியாதை பிரசுரம் வெளியீடு,சென்னை

8. முனைவர் சு. சண்முகசுந்தரம், வைரமுத்துவரை, 1989 காவ்யா, பெங்களூர்.

9. பாவலர் சங்கைவேலன், உடுமலை நாராயண கவியின் பாட்டுப் பயணம் 1998 சவுத்விஷன், சென்னை.

10.முனைவர் அமுதன்,ப.வீரப்பன்,க சுரேந்திரன்,உடுமலை நாராயண கவி பாடல்கள், 1999 உடுமலை நாராயண கவி அறக்கட்டளை, பூளவாடி.

11 உடுமலை அமிர்தநேயன், பாடிப்பறந்த பகுத்தறிவுக் குயில் 1999 மோகனா பதிப்பகம், உடுமலை.

12.முனைவர் இரா.சந்திரசேகரன், க.இந்திரசித்து உடுமலை நாராயண கவி பன்முகப் பார்வை, 2000 பாரதியார் பல்கலைக்கழகம், கோவை

உடுமலை நாராயண கவி : சிறந்த தமிழ்க் கவிஞர்களுள் ஒருவர். இவருடைய திரைப்பட பாடல்கள் சொல்நயம், பொருள்நயம், கருத்துச்செறிவு, இலக்கண, இலக்கியம் குறைவில்லாமல் இருக்கும். திரைப்பட உலகில் நுழைந்த ஆரம்ப காலத்தில் அவருடைய பாடல்கள் மரபு சார்ந்த இலக்கிய நடையிலே இருந்தாலும் பின்னர் மக்களின் ரசனைக்கேற்ப ஜனரஞ்சகமாக மாறி எளிய பேச்சு நடைக்கு மாறின. கவிராயர் என்பது இவரது சிறப்புப் பட்டம், வாத்தியார் என்பது செல்லப் பட்டம்.

நீதிபதி கோகுலகிருஷ்ணனால் "சாகித்திய ரத்னாகார்" என்றும், தென் இந்திய திரைப்பட தொழில்நுட்பக் கழகத்தால் சிறந்த பாடலாசிரியர் என்றும் சிறப்பிக்கப்பட்டவர்.

சு. சண்முகசுந்தரம் : நாலுவகைப்பூவெடுத்து என்ற நாட்டுப் புறப்பாடல் தொகுப்பு நூலையும், அறிஞர் அண்ணா என்ற புத்தகத்தையும், சாகித்திய அக்காதெமிக்காக படைத்தவர். கடந்த இருபத்தேழு ஆண்டுகளாக நாட்டுப்புற இயல் மீது ஆர்வமும் அக்கறையும் கொண்டவர். 21க்கு மேற்பட்ட நூல்களை இயற்றியவர். 'தன்னனானே' நாட்டுப்புற இயலுக்கான காலாண்டு ஆய்வு இதழின் ஆசிரியர். பதிப்புத் துறையில் பன்னெடுங்காலமாகத் தொண்டாற்றுபவர். பெங்களூரில் செயின்ட் ஜோசப் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரியும் இவர் சாகித்திய அக்காதெமியின் தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினராக உள்ளார்.

Udumalai Narayana Kavi (Tamil)
ISBN-81-260-1540-3 Rs. 25/-